# ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு

## (D.El.Ed.)

### பாடப்பிரிவு 501

## இந்தியாவின் தொடக்கக் கல்வி : சமூக கலாச்சார கண்ணோட்டம்

*தொகுதி 2*

***இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு - I***


**தேசிய திறந்த நிலைப் பள்ளி நிறுவனம்**

(MHRD கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனம், இந்திய அரசு)

A 24-25, நிறுவனத்தின் அமைவிடம், கிளை - 62, நொய்டா 201309. (உ.பி.)

**www.nios.ac.in**

***நன்மதிப்பு புள்ளிகள் 4 (3 + 1)***

| தொகுதி | அலகு | அலகின் தலைப்பு | கோட்பாடு ஆய்வு | | செய்முறை ஆய்வு |
|---|---|---|---|---|---|
| | | | உள்ள டக்கம் | செயல் திறன் | |
| தொகுதி 1 இந்தியாவில் தொடக்கக் கல்வி : ஓர் மீள்பார்வை | அலகு 1 | இந்தியக் கல்வி முறை - I | 4 | 2 | குரு குலத்தில் இருந்த குருவையும் தற்போ துள்ள ஆசிரியரையும் ஒப்பீடு செய்தல் |
| | அலகு 2 | இந்தியக் கல்வி முறை - II | 5 | 3 | NCF 2005-ன் படி எந்த எந்த பாட புத்தகத் தையும் மதிப்பீடு செய்யும் உரிமை |
| | அலகு 3 | கல்வி ஒரு அடிப்படை உரிமை | 4 | 2 | 2009 RTE சட்டத்தின் படி ஆசிரியரின் பங் கும் பொறுப்புகளும் |
| | அலகு 4 | அனைவருக்கும் தொடக்கக் கல்விக் கான (UEE) நிறுவன அமைப்பு | 4 | 2 | ஜார்கண்டில் உள்ள தொடக்கக் கல்வியின் அமைப்புமுறை |
| தொகுதி 2 இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு-I | அலகு 5 | அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான அணு குமுறைகள்-I | 5 | 3 | |
| | அலகு 6 | அனைவருக் தொடக் கக் கல்வியை பெறு றுவதற்கான திட்டம் (அ) உத்திகள் | 5 | 3 | பள்ளியில் மதிய உணவு திட்ட அனுபவம் |
| | அலகு 7 | அனைவருக் தொடக் கக் கல்விக்கான திட்டம் மற்றும் மேலாண்மை | 6 | 3 | |
| தொகுதி 3 இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு-II | அலகு 8 | தொடக்கக் கல்விக்கு ஆசிரியர்களை தயார் செய்தல் | 6 | 3 | ஒரு சிறந்த ஆசிரி யராக தங்களு டைய பண்புகளை ஆய்வு செய்தல் |
| | அலகு 9 | மாற்றுத்திறன் மாணாக்ர்களுக்கு கல்வி அளிக்க ஆசி யர்களை தயார் செய்தல் | 5 | 3 | உங்கள் பகுதியில் உள்ள SC/ST சிறுபான் யினர் குழந்தைகளின் பிரச்சனைகள், அணுகு தல் மற்றும் அவர்களை தக்க வைத் தல். குழந்தைகளின் உரிமை களை பாதுகாக்க உங்கள் பள்ளியில் உங்களுடைய எதிர் கால திட்டம் |
| | அலகு 10 | உலக அளவிலான தொடக்கக்கல்வி நிலை | 5 | 2 | |
| | | பயிற்சி | 15 | | |
| | | மொத்தம் | 64 | 26 | 30 |
| | | ஆக மொத்தம் | 64 +26 + 30 = 120 மணிகள் | | |

# *தொகுதி 2*

# இந்தியாவில் தொடக்கக் கல்வி : சமகாலத்திய சூழமைவு - I

**அலகுகள்**


*அலகு 5* அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான அணுகுமுறைகள் - I

*அலகு 6* அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான அணுகுமுறைகள் - II

*அலகு 7* அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான திட்டமிடல் மற்றும் மேலாண்மை

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| *அலகு* | *5* | அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான அணுகுமுறைகள் - I | *1* |
| *அலகு* | *6* | அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான கல்விக்கான அணுகுமுறைகள் - II | *41* |
| *அலகு* | *7* | அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான திட்டமிடல் மற்றும் மேலாண்மை | *63* |

குறிப்புகள்

# அலகு 5 அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான அணுகுமுறைகள் - I

## அமைப்பு

*5.0* அறிமுகம்

*5.1* கற்றல் நோக்கங்கள்

*5.2* அனைவருக்கும் தொடக்கக் கல்வி (UEE)

*5.3* அனைவருக்கும் தொடக்கக் கல்விக்காக உருவாக்கப்பட்ட செயல்திட்டம்

*5.3.1* உத்திரப்பிரதேச ஆதாரக் கல்வித்திட்டம்

*5.3.2* பீகார் கல்வித்திட்டம்

*5.3.3* லோக் ஜும்பிஷ்

*5.3.4* சிக்ஷா கர்மி

*5.3.5* மகாராஷ்டிரா போன்ற மாநிலத்துக்கான குறிப்பிட்ட செயல்திட்டம்

*5.3.5.1* சமூகத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளுக்கான திட்டம்

*5.3.5.2* பெண்களுக்கான திட்டம்

*5.3.5.3* பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கான திட்டம்

*5.3.5.4* தொலைதூரக் குழந்தைகளுக்கான திட்டம்

*5.3.5.5* பள்ளிக்கு வெளியே உள்ள குழந்தைகளுக்கான திட்டம்

*5.3.5.6* சிறப்புத் தேவையுடையோர்க்கான திட்டம் (ஊனமுற்றோர், தேவதாசி குழந்தைகள், ..... பிற)

*5.4* மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம்

*5.4.1* மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் நோக்கங்கள்

*5.4.2* DPEP-ன் முக்கியக் கூறுகள்

*5.4.3* DPEP-ன் செயல்திட்டம்

*5.4.4* அணுகுமுறைகள் மற்றும் செயல்பாடுகள்

*5.4.5* அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டத்தின் தாக்கம்

*5.5* தொகுப்புரை

*5.6* கலைச்சொல் அகராதி / சுருக்கம்

*5.7* பரிந்துரைக்கப்பட்ட நூல்கள் மற்றும் மேற்பார்வை நூல்கள்

*5.8* அலகு - இறுதி பயிற்சி செயல்பாடுகள்

குறிப்புகள்

## 5.0 அறிமுகம்

தொடக்கக் கல்வி நிலையானது இந்திய அரசின் முக்கிய கல்விசார் கொள்கை மற்றும் திட்டமிடலை உள்ளடக்கியது என்பதை நாம் அறிவோம். கல்வி என்பது மாநில, மைய அரசுகளுடன் தொடர்புடையது. இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்தே மாநிலங்களே தம் மாநிலங்களுக்கு கல்வியை வழங்கி வருகின்றன. 1986களில் கொண்டுவரப்பட்ட தேசிய கல்விக் கொள்கை வாயிலாக மைய அரசானது பல்வேறு நிதியுதவி திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக தொடக்கக்கல்வி நிலையில் குறிப்பிட்ட முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களின் தொடக்கக் கல்வியின் தற்போதைய நிலை என்ன? நாம் எந்நிலையில் உள்ளோம்? தொடக்கக் கல்வியை மேம்படுத்த மாநிலங்கள் மேற்கொண்ட முயற்சிகள் யாவை? போன்ற வினாக்களுக்கு விடை காணும் வகையில் இந்த அலகு அமைந்துள்ளது.

## 5.1. கற்றல் நோக்கங்கள்

இந்த அலகினை கற்ற பிறகு நாம் அறிந்திருக்க வேண்டியவை:

- உங்கள் மாநிலத்தின், தொடக்கக் நிலையில் அளவில் மொத்த சேர்க்கை விகிதம் (Gross Enrollment Ratio) மற்றும் நிகர சேர்க்கை விகிதம் (Net Enrollment Ratio) ஆகியவற்றை உள்ளடக்கிய தற்போதைய நிலை குறித்த அறிக்கையினை தயாரித்தல் (மகராஷ்டிரா மாநில தனியாள் ஆய்வு அடிப்படையில்).
- தொடக்கக் கல்வியினை அனைவரும் பெறும் வகையில் தொடக்க நிலை கல்வி சார்ந்த பல்வேறு செயல்திட்ட ஆய்வினை மாநில அளவில் மேற்கொண்டு சோதித்தல்.
- உங்கள் மாநிலத்தில் தொடக்கக் கல்வியில் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு செயல்திட்டங்கள், திட்டமிடல்கள் குறித்து மீளாய்வு செய்தல் (குறிப்பாக மகாராஷ்டிரா மாநிலம்)
- மாவட்ட தொடக்கக் கல்வி திட்டத்தின்கீழ் அனைவருக்கும் தொடக்கக் கல்வி நிலையில் மேற் கொள்ளப்பட்ட உத்திகளை பட்டியலிடுதல், விளக்குதல்.
- மாவட்ட தொடக்கக் கல்வி திட்டத்தினால் தொடக்கக் கல்வியில் ஏற்பட்ட விளைவுகளை உங்கள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் ஒப்பிடுதல்.

குறிப்புகள்

## 5.2 அனைவருக்கும் தொடக்கக் கல்வி (UEE)

உங்கள் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தொடக்கக் கல்வி சென்றடைய மேற்கொள்ளும் செயல்பாடுகளின் போது ஏற்படும் பல்வேறு தடைகளை களைய கடினமாக உழைக்க வேண்டும். அப்பொழுது தான் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற நிலையை வெற்றிகரமாக அடைய முடியும்.

குழந்தைகளை பள்ளிக்கு கொண்டு வருவதிலும், தொடர்ந்து நிலைநிறுத்தவும், ஒவ்வொரு மாநிலமும் வெவ்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. மேலும் இதைக்குறித்து பயிலுமுன் கட்டத்துக்குள் கொடுக்கப்பட்டுள்ள ஓர் உதாரணத்தைக் காண்போம்.

மகாராஷ்டிரா மாநிலம், டம்கா மாவட்டம், மொகங்கி கிராமத்தில் 4ஆம் வகுப்பில் பயிலும் மாணவர் பிரகாஷ் கணேஷ் படில், அவனது தம்பி 2ஆவது வகுப்பிலும், அக்கா 6ஆம் வகுப்பிலும் பயின்று வந்தனர். பிரகாஷின் தந்தை கணேஷ் மாடுகளுக்கு லாடம் கட்டும் பணியை செய்பவர். கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் தங்கள் மாட்டு வண்டி மூலம் கரும்பை சர்க்கரை ஆலைக்கு கொண்டு செல்வர். அந்த மாடுகளுக்கு லாடம் கட்டுவதன் மூலம் பிரகாஷின் தந்தை நன்றாக சம்பாதித்தார். ஆதலால் அவர் ஆறு மாதங்கள் கரும்பு வெட்டுபவர்களோடு தங்கியிருப்பார். கணேஷ் தங்கள் குடும்பத்தோடு தீபாவளிக்கு முன்பாக சர்க்கரை ஆலைக்கு வந்துவிடுவர். அங்கு சென்ற பிறகு பிரகாஷ் அருகிலுள்ள ஜில்லா பரிஷித் பள்ளியில் தன் கல்வியை தொடர விரும்பினான். தனது கிராம பள்ளியிலிருந்து ஜில்லா பள்ளிக்கு மாறுதல் பெற ஏற்பட்ட நிர்வாக ரீதியான பிரச்சனையால், இரண்டு ஆண்டுகள் அவன் வீணாக செலவழிக்கிறான். மேலும்

கீழ்க்காணும் வினாக்கள் குறித்து உங்கள் கருத்து என்ன?

- பிரகாஷ் தன் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு தன் தந்தையின் தொழிலில் துணையாக இருக்க நினைக்கிறான். அவன் பள்ளியை விட்டு நின்று விடுவான் என நீங்கள் நினைக்கிறீர்களா?
- பிரகாஷ் கல்வியினைத் தொடர, பிரகாஷின் தந்தைக்கு நீங்கள் எவ்வாறு ஆலோசனை கூறுவீர்கள்?

இது போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண 2001ல் மகாராஷ்டிரா மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் சாகர் சாலாஸ் (Sakhar Shalas) இதன் மூலம் கல்வியினை தொடர முடியாத குழந்தைகளுக்கு கல்வி கற்க வாய்ப்பளிக்கப்பட்டது. இத்திட்டம் ஆண்டு முழுவதும் நடைபெறுவதில்லை. கல்வி ஆண்டின் இரண்டாம் காலகட்டத்தில் மட்டுமே நடைபெறும் திட்டமாகும்.

குறிப்புகள்

பொதுவாக, கோடை விடுமுறையை முடித்து ஜூன் மாதம் பள்ளிகள் திறக்கப்படும். ஆனால் கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் கரும்பு விளைச்சல் மாதங்களான அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கரும்பும் வெட்டு பொருட்டு குடும்பம் குடும்பமாக இடம்பெயருகிறார்கள். இக்குடும்பங்கள், பெரும்பாலும் தங்கள் கிராமங்களுக்கு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் திரும்புவதால், அக்குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்க இயலாத நிலை காணப்படுகிறது. இதனால் பள்ளியை விட்டு நிற்கும் சூழல் ஏற்படுகிறது.

அக்குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்க இயலா நிலை காணப்படுகிறது. இதனை கருத்தில்கொண்டு அரசு கொண்டு வந்த திட்டமே சாகர் சாலாஸ் வகுப்புகள். இதன் மூலம் இடம்பெயர்வு காலங்களில் சுமார் (ஆறு மாத காலம்) சர்க்கரை ஆலைக்கு அருகாமையில் மாணவர்கள் கற்பதற்கு ஏதுவாக வகு,ப்புகள் நடத்தப்படுகின்றன. எனவே இதனை “இரண்டாம் பருவப்பள்ளி” என்கிறார்கள்.



இந்த கள ஆய்வு, நமக்கு அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பதனை வரையறுக்க பின்வரும் வழிகளில் உதவுகிறது.

- அனைவருக்கும் கல்வி என்பது குழந்தைகளின் குறிப்பிட்ட தேவை மற்றும் அவர்களின் வாழிடம் சார்ந்து, அனைத்து இடங்களிலும் கல்வியினைப் பெற வழிவகுப்பதாகும்.
- பள்ளிக் கல்வியானது இந்தியாவை பொறுத்தமட்டில் பொதுவாக பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

முன்பருவக் கல்வி : 3 முதல் 6 வயது வரை

தொடக்கக் கல்வி : தொடக்க நிலை (I - V)

குறிப்புகள்


| | | |
|---|---|---|
| | | 6 முதல் 11 வயது வரை |
| | : | உயர் தொடக்க நிலை (VI - VIII) |
| | | 11 முதல் 14 வயது வரை |
| இடைநிலைக் கல்வி | : | (IX-X) 15 முதல் 16 வயது வரை |
| மேனிலைக் கல்வி | : | (XI-XII) 17 முதல் 18 வயது வரை |

தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலை வகுப்புகள் இணைந்து தொடக்கக் கல்வி எனப்படுகிறது. கல்வி அமைப்புக் கூம்பின் அடிப்படையாக அமைவது தொடக்கக் கல்வியே ஆகும். இதனை அனைவரும் பெறும் பொருட்டு அனைவருக்கும் கல்வி திட்டம் மூலம் (SSA) பத்தாம் ஐந்தாண்டு திட்டத்தில் உந்துதல் வழங்கப்பட்டுள்ளது.

அனைவரும் தொடக்கக் கல்வியினை பெறும் வகையில் பள்ளி வயதுக் குழந்தைகளை பள்ளிக்கு வரவழைக்கவும், அதன் மூலம் தொடக்கக் கல்வியினை பெறவும் சர்வ சிக்ஷா அபியான் வழிவகுக்கிறது.

அனைவருக்கும் தொடக்கக் கல்வியும் அதன் கூறுகளும்:

அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பது ஒவ்வொரு குழந்தையும் தனக்கான கல்வியை தானே பெறும் வகையிலான அணுகல் மற்றும் சமவாய்ப்புகள் பெறுதல் எனலாம். அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் மூன்று முக்கியக் கூறுகள்.




படம் 5.1

## தொடக்கக் கல்வி

குறிப்புகள்

## அனைவருக்குமான அணுகலும் சேர்க்கையும்
## (Universal Access and Enrollment)

ஒவ்வொரு குழந்தையும் தொடக்க நிலை கல்வியினை பெறும் பொருட்டு ஒவ்வொரு, ஒரு கிலோமீட்டர் தொலைவிலும் ஒரு தொடக்கப் பள்ளியினை நிறுவ இந்திய அரசு திட்டமிட்டது. பள்ளி அமைந்துள்ள இடத்தைச் சுற்றி வசிக்கும் (பள்ளி ஆளுகைக்குட்பட்ட) குடும்பங்களைப் பற்றிய கணக்கெடுப்பை ஆண்டின் துவக்கத்திலேயே பள்ளி மேற்கொள்கிறது. பள்ளி வயதுக் குழந்தைகள் மற்றும் பள்ளிக்கு வெளியே உள்ள மாணவர்களை பட்டியலிட்டு, அவர்களை பள்ளிக்கு வரவழைக்கும் முயற்சியாக இக்கணக்கெடுப்பு மேற்கொள்ளப் படுகிறது.

பள்ளிகள் திறந்தவுடன், பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் 100% சேர்க்கப்பட்டதை உறுதி செய்யும் வகையில் மாணவர் சேர்க்கை வாரம் அனுசரிக்கப்படுகிறது.

### வருகைப் பதிவும், தக்கவைத்தலும்

ஒரு குழந்தையினை பள்ளியில் சேர்ப்பதை காட்டிலும், அக்குழந்தைகளை குறிப்பாக வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளை பளியில் நிலைநிறுத்துவது கடினமானது என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். இருப்பினும், 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவரையும் நிலைநிறுத்துவது அவசியம். எனவே, வருகை பதிவிற்கான படி, இலவச பயணச்சீட்டு, இலவச மதிய உணவு திட்டம் போன்ற திட்டங்களாலும் புதிய கற்பித்தல் உத்திகளாலும் மாணவர்களின் வருகையினை மேம்படுத்த பல்வேறு வசதி வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

### தரமான கல்வி

தரமான கல்வி என்பது குறித்து சிந்திக்கையில் ஒவ்வொரு குழந்தையும் அடைய வேண்டிய குறைந்தபட்ச கற்றல் அடைவை (MLL) அடைய ஒவ்வொருவரின் திறன்கள், அதனை அடைய உறுதுணையாக அமையும் பள்ளிச்சூழல், கட்டமைப்பு, குடிநீர், கழிப்பறை வசதிகள், ஆசிரியர் பயிற்சிகள், ஆசிரிய மாணவர் விகிதம் ஆகியவற்றை மேம்படுத்துவது அவசியம்.

குறிப்புகள்

**செயல்பாடு 1**

உங்கள் வகுப்பில் பயிலும் மாணவர்களான சாஜித் மற்றும் அவன் தங்கை இருவரும் ஒவ்வொரு சனிக்கிழமையும் விடுப்பு எடுப்பதோடு, அதற்கு பொய்யான காரணத்தையும் கூறுகிறார்கள். ஆசிரியராகிய நீங்கள் அவர்களின் வருகை பதிவின்மை குறித்து மேற்கொள்ளும் அடிப்படை நடவடிக்கை....

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

## 5.3 வெவ்வேறு மாநிலங்களில் அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான செயல்திட்டங்கள்

21ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைப்பதற்கு முன்னரே இந்திய அரசானது தேசிய கல்விக் கொள்கை 1986 மற்றும் செயல் வரைவு 1992 ஆகியவற்றின் வாயிலாக 14 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வியைப் பெற உறுதி செய்துள்ளது. இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு, தெளிவான வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், வரன்முறைகள், செயல்படுத்தும் காலநேரம், பயணிக்கும் மைல்கற்கள், மேலும் அளவிட வேண்டிய கற்றல் அடைவுகள், ஒவ்வொரு நிலையிலும் உதவுதல் போன்ற படிநிலைகளைக் கொண்ட செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 5.3.1 உத்திரபிரதேச ஆதாரக் கல்வி செயல்திட்டம்

(UP Basic Education Project)

1993இல் உலக வங்கியின் துணையோடு உத்திரப்பிரதேச அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டமே அடிப்படை கல்வி செயல்திட்டம். இந்த திட்டத்தினை உத்திரப்பிரதேச அமைப்பான சபி கே லியா சிக்ஷாபரியோஜனா பரிஷித் (Sabhike liye Shiksha Pariyojana Parishad) (உத்திரப்பிரதேச அனைவருக்கும் கல்வி செயல் திட்டம்) செயல்படுத்துகிறது.

**செயல் திட்டத்தின் நோக்கங்கள்**

இச்செயல் திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

குறிப்புகள்

- அனைவருக்கும் தொடக்கக் கல்வியினை வழங்கும் வகையில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், முறை மற்றும் முறைசாராக் கல்வி மூலம் தொடக்கக் கல்வியினை பங்கேற்று முடிக்கவும் செய்தல்.
- குறைந்தபட்ச கற்றல் அடைவுகள் அனைவரும் பெறுவதற்கான நிகழ்ச்சிகள்.
- இளைஞர்கள் கல்வி பெறவும், திறன் மேம்பாடு அடையும் வகையிலான நிகழ்ச்சிகள்.
- பாலின பாகுபாடற்ற, பெண் கல்வி அளித்து, மகளிர் மேம்பாடு அடைதல்.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் சமமான கல்வி பெற வாய்ப்பளித்தல்.

**உத்திகள்:**

இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்ட உத்திகள் பின்வருமாறு:

- மாவட்ட மற்றும் மாநில அளவிலான திட்டமிடல், மேலாண்மை மற்றும் தொழில்சார் உதவி புரியும் மாநில அமைப்புகள் போன்ற வற்றிற்கு இடையேயான உறுதியான கட்டமைப்பால் அடிப்படை கல்வி மேம்பாட்டு திட்டத்தினை நிறுவனங்களில் திட்டமிடல், மேலாண்மை மற்றும் மதிப்பிடல் மூலம் உறுதி செய்தல்.
- முன்குழந்தைப் பருவ கல்வியின் கலைத்திட்டம் மற்றும் புத்தகம் மறுசீரமைப்பு, பணியிடை பயிற்சிகள், பெண்கல்வி, பள்ளி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் கல்வித் தரத்தினை உயர்த்துதல்.
- அடிப்படை கல்வி சென்றடையாத 10 மாவட்டப் பகுதிகளில் தொடக்க மற்றும் உயர்தொடக்க பள்ளிகளை உருவாக்குதல் மற்றும் பள்ளிக்கு வெளியேயுள்ள குழந்தைகளை முறைசாராக் கலவி மூலம் பள்ளியில் சேர்க்க மறுவடிவமைப்பை மேற்கொள்ளல்.

**செயல்பாடுகள்:** பின்வரும் செயல்பாடுகள் முன்னிலைப் படுத்தப்படுகின்றன.

- கலாச்சார மற்றும் தகவல் தொடர்பு சார்ந்த கல்வி செயல்பாடுகள்.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல்.
- சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்.

குறிப்புகள்

**செயல்படுத்துதல்**

உத்ராஞ்சலையும் சேர்த்து உத்தரப்பிரதேசத்திலுள்ள 63 மாவட்டங்களில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 10 மாவட்டங்களில் வெவ்வேறு செயல்பாடுகள் கொண்ட செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டது. அம்மாவட்டங்கள் முறையே வாரணாசி, அலகாபாத், பான்டா, எடாவா, சிடாபூர், அலிகார், சஹாரண்பூர், கோரக்பூர், பௌரி மற்றும் நைனிடால்.

### 5.3.2 பீகார் கல்வி செயல்திட்டம் (Bihar Education Project)

அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதோடு, தரமான கல்வியினை மாநிலத்திற்கு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் உத்திரப்பிரதேச அடிப்படை கல்வி திட்ட அடைவை அடிப்படையாக கொண்டது. இத்திட்டத்திற்கு உத்திரப்பிரதேச அடிப்படை சிக்ஷா பரிஷித்தே பொறுப்பாகும். இது யூனிசெப்புடன், இந்திய அரசு மற்றும் பீகார் அரசு இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டமானது சமூகத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரான ஆதிதிராவிட/பழங்குடியினர் மற்றும் பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது. இதுவே முதன்முதலில் "அனைவருக்கும் கல்வி" செயல் திட்டத்திற்காக வெளியிலிருந்து நிதியுதவி பெற்ற திட்டமாகும். இது முதலில் 1991-92களில் மேலும் நான்கு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

**திட்டத்தின் நோக்கங்கள்:**

- அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்கும் பொருட்டு, 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை கல்வி கற்க பள்ளியில் சேர்க்கவும், குறைந்தபட்ச கற்றல் அடைவை பெறுவதற்குமான ஒருங்கிணைந்த நிகழ்ச்சியை நடத்துதல்.
- பெண்களுக்கான கல்வியறிவை வழங்கி, சமத்துவம் ஏற்படுத்தும் வகையிலான நோக்கத்தை நிறைவு செய்யும் கல்வியமைப்பை நிறுவுதல்.
- கீழ் இனத்தோர், சமூகத்தில் பின்தங்கியோர், இனமக்கள் ஏழைகள் ஆகியோரை உள்ளடக்கிய வயதுவந்தோர் மற்றும் குழந்தைகள் சமமான கல்வி பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பள்ளியின் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கவும், இடைநிற்றலை குறைக்கவும் செய்தல் (குறிப்பாக பெண்கள் மற்றும் ஆதி திராவிட மாணவர்கள்).

**உத்திகள்:**

- 11,000 மேற்பட்ட தொடக்க மற்றும் உயர்தொடக்க வகுப்பறைகளை கட்டுதல்.
- கூடுதலாக 16,000 ஆசிரியர்களை தெரிவு செய்தல்/நியமனம் செய்தல்.
- புதிதாக பணியேற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி.
- புதிதாக திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் பொருள்களை வழங்குதல்.
- திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதலில் பங்கேற்றல்.
- மகிலா சமிக்யா கூறுகளை செயல்படுத்துதல்.

**செயல்பாடுகள்:**

இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் பின்வருமாறு:

- பள்ளி அளவிலான நிகழ்வுகளில் சமுதாய பங்கேற்பை உறுதி செய்தல் மற்றும் கிராமக் கல்வி குழு வாயிலாக அந்நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்.
- தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாக முறைசாரா கல்வி வழங்குதல்.
- மாவட்ட அளவிலான பணிமனை நடத்துதல்: முதன்மை கருத்தாளர்கள் மற்றும் தொடக்க பள்ளி ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச கற்றல் அடைவுக்கான பயிற்சி வழங்குதல்.
- பெண்கள் முன்னேற்றம் சார்ந்த மாவட்ட அளவிலான அரசியலமைப்பு முக்கிய குழுக்கள் அமைத்தல்.
- மாணவர்கள் சேர்க்கை இயக்கம் நடத்துதல்.
- சுவரொட்டி தயாரிக்கும் பணிமனை: கிராமப்புற நூலகங்கள் விரிவாக்கம் தொடர்பான கருத்துகள்.
- கல்வியில் கணினி வழி மேற்பார்வை அமைப்பு அறிமுகப்படுத்துதல்.
- **மகிளா சமக்யா:** பள்ளியின் உள்ளூர் பொறுப்புணர்வை நிறுவுவதில் கிராமக் கல்வி குழுவின் பங்களிப்பு, ஆசிரியர்களின் ஆதரவு, முன்குழந்தைப் பருவக்கல்வி மற்றும் முறைசாரா கல்வி ஆகிய வற்றின் மேலாண்மை போன்றவை முக்கிய பங்காற்றுகின்றன.

**செயல்படுத்துதல்:**

மாநில, மாவட்ட அளவிலான பெண்கள் மேம்பாடு, சமூகத்தை ஒன்று திரட்டுதல், அடிப்படைக் கல்வியின் பால் தேசிய/சர்வதேச அளவிலான

குறிப்புகள்

ஆர்வத்தை குவித்தல் போன்றவற்றிகான மேலாண்மை அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். வகுப்பறைகளை தேர்ந்தெடுத்தலில் மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டும் கிராமப்புற அளவில் மாணவர் சேர்க்கை தொடர்பான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டும் நுண்திட்ட அளவில் முடிவு செய்தல். திட்ட மேலாண்மை உத்தரபிரதேச ஆதாரக் கல்வி திட்டம் 1 மற்றும் மாவட்டத் தொடக்கக்கல்வி திட்டம் இரண்டும் இணைந்து வருடத்திற்கு இருமுறை மேற்கொள்ளல்.

இந்த முன்வரைவு திட்டமான உத்தரபிரதேச ஆதாரக்கல்வி திட்டம் 1 தற்போது 12 மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

### 5.3.3 லோக் ஜீம்பிஷ் (Lok Jumbish)

**லோக் ஜீம்பிஷ்:** "அனைவருக்கும் கல்விக்கான மக்கள் இயக்கம்" 1992ஆம் ஆண்டு இராஜஸ்தான் அரசாங்கம் ஸ்வீடன் சர்வதேச முன்னேற்ற அமைப்புடன் (SIDA) இணைந்து துவக்கியது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்: அனைவருக்கும் தொடக்கக் கல்வியில் திருப்திகரமான நிலையான எழுத்தறிவித்தல் நிலை வரை, முறை சார்ந்த மற்றும் முறைசாரா கல்வி வாயிலாக வழங்குவதாகும்.

இது முக்கியமாக பெண் கல்வி மற்றும் முன்னேற்றத்தை வலியுறுத்துகிறது. மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டதற்கான முக்கிய நோக்கமானது கல்வியறிவு மற்றும் தொடக்கக் கல்வி பெறுவதோடு மக்களின் ஒருங்கிணைந்த பங்கேற்பு செயல்களின் துவக்கமாகவும் அமைகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்:**

- மக்கள் பங்கேற்பு மற்றும் அவர்களின் பங்களிப்பு வாயிலாக 2000 ஆண்டிற்குள் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கினை அடைதல்.
- பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் மீது கவனம் செலுத்துவதன் மூலமாக பெண் குழந்தைகள் சேர்க்கையை அதிகப்படுத்துவதை உறுதி செய்தல்.
- கல்வி என்ற கருவியை பயன்படுத்தி சமத்துவமான திறன்மிக்க பெண்களை உருவாக்குதல்.
- 15 முதல் 35 வயதுக்குட்பட்ட அனைத்து பாலினத்தோரின் கற்றல் நிலையை 80% உயர்த்தவும், வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கு எழுதுதல், பேசுதல், கணக்கிடுதல் போன்றவற்றை வாழ்வியல் சூழலில் பயன்படுத்தவும் உதவுதல்.

- கற்றல் செயல்பாடுகளில் தரமான முன்னேற்றத்தை கொண்டு வருவதற்கு தேவையான பயிற்சி அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப வளங்களை உருவாக்குதல்.
- சேகரிக்கப்பட்ட தகவல்களையும் அதை பயன்படுத்தும் மக்களையும் இணைக்கும் இந்நிகழ்வில் வெளிப்படைத் தன்மை உள்ளதை உறுதி செய்தல்.

**முக்கியக் கூறுகள்:1**

- திட்டங்களை உருவாக்கி மேலாண்மை செய்யும் தன்னாட்சி அமைப்பையும் அதன் செயல்பாடுகளில் முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய அதிகாரம் படைத்த குழுவையும் உருவாக்குதல்.
- கிராம அளவிலான லோக் ஜீம்பிஷ் முதன்மை பணியானது பள்ளி வரைபடம் மற்றும் நுண்திட்டங்களை வகுப்பதாகும். மேலும் ஒவ்வொரு குழந்தையின் கல்வி சார்ந்த செயல்பாடுகளில் சமூக ஆர்வலர்கள், ஆசிரியர்கள், அமைப்பில் உள்ளோர் இணைந்து மதிப்பிட்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிகின்றனர்.

**உத்திகள்:**

- பிரிரக் தால், பவன் நிர்மாண் குழு, கிராமக் கல்விக்குழு, குறுவள கல்வி மையம், வட்டார அளவிலான கல்வி மேலாண்மை (Khand Stariya Prabandhan Samiki) மற்றும் வட்டார அளவிலான வழிநடத்துதல் குழு போன்றவை குறிப்பிட்ட ஐந்து வட்டாரங்களில் சோதனையை நடைமுறைப்படுத்தி ஆதரவு நல்கவும், மேலாய்வு செய்வதற்குமான கீழ்நிலை அளவில் உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஆகும்.
- ஆசிரியர் மன்றம் (Adhyapika Munch) பெண்களை பங்கேற்கச் செய்வதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- நிர்வாக அணி அமைப்பு (Matrix System of Management) கொண்டு அனைத்து நிலைகளிலும் உள்ளோர் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து செயல்படவைத்தல்.
- குறுவள மையம் மற்றும் வட்டார வளமைய அளவிலான திட்டமிடல் மீளாய்வு கூட்டமானது (Review Planning Meeting) அனைத்து நிலைகளிலும் மாதத்திற்கு ஒருமுறை செய்கின்ற வேலைகளையும், அடுத்த மாதத்திற்கான திட்டமிடலாகவும் அமைகிறது. இதேபோல் மாநில அளவிலும் 2 - 3 திட்டமிடல் மீளாய்வு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

குறிப்புகள்

- **பிரவேஷ் உத்சவ்:** பள்ளி மற்றும் சமுதாய அளவில் குழந்தைகளிடையே கல்வியில் நேர்மறையான மற்றும் படைப்பாற்றல் சூழலை உருவாக்கும் நிகழ்வே பிரவேஷ் உத்சவ் ஆகும்.

**செயல்பாடுகள்:**

பின்வரும் படம் (5.2)ல் செயல்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **பழங்குடியின குழந்தைகளுக்கான விடுதி** | எளிதில் சென்றடைய இயலா வாழிடங்களில் வசிக்கும் குழந்தைகளுடன் பருவ காலங்களுக்கு ஏற்றவாறு இடப்பெயர்வு செய்யும் குழந்தைகளின் கல்வி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு அமைய வேண்டும். |
| **மகிள சிக்ஷன் விகார்** | 15 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லா பெண் குழந்தைகளுக்கு கிராமப்புற சூழ்நிலையிலேயே உண்டு, உறைவிட பயிற்சியாக தரமான கல்வி வழங்குகிறது. |
| **பெண் கல்வி முகாம்** (Balia Shikshan Shivir) | 9 வயதிற்கு மேற்பட்ட இடைநின்ற பெண் குழந்தைகளுக்கு 6/8 மாதங்களுக்கு உண்டு உறைவிட பயிற்சி அளித்து முறைசார் கல்விக்கு அனுப்ப வழிவகை செய்தல். |
| **முக்டங்கன்** | பாரான் கிஷ்ணன்கன்ச் வட்டாரத்தின் காண்டேலா குறுவள மைய பழங்குடியின குழந்தைகளுக்கான நிகழ்ச்சி. |
| **மதரஸா** | பாரக்பூர் காமன் ஒன்றியத்தில் உள்ள சிறுபான்மை குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல். |
| **இயற்கையான கல்வி மையம் நிறுவுதல்** (Institutionalization of Sahaj Shiksha Kendra) | பணி செய்யும் குழந்தைகளுகக்கான முறைசாராக் கல்வி வழங்கும் முறை |
| **பள்ளி சுகாதார திட்டம்** | சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வை பள்ளி குழந்தைகளிடம் ஏற்படுத்தும் நிகழ்ச்சி |
| **அங்கன்வாடி மையங்கள்** | 'விகான்' தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் முன்பருவக் கல்வியை மேம்படுத்தவும், அத்துடன் தொடக்கக் கல்வியை இணைக்கும் பாலமான கல்வியை வழங்குதல். (உத்திரப்பிரதேசத்தில் உள்ள 245 அங்கன்வாடி மையங்கள்) |

**படம் 5.2 லோக் ஜீம்பிஷின் முக்கிய செயல்பாடுகள்**

### 5.3.4 சிக்ஷா கர்மி திட்டம்

சிக்ஷா கர்மி திட்டம் என்பது இராஜஸ்தான் அரசால் இராஜஸ்தான் சிக்ஷாகர்மி வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி திட்டமாகும். இது 1987 முதல் ஸ்வீடன் சர்வதேச முன்னேற்ற அமைப்பின் துணையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது அனைவருக்கும் கல்வி என்ற நோக்கத்திற்கு இடையூறாக உள்ள ஆசிரியர் வருகையின்மையை கண்காணிப்பதாகும். இத்திட்டத்தின் மூலம் ஓராசிரியர் பள்ளிகளில் அவ்வாசிரியர் வருகை புரியாதபோது அருகாமையில் உள்ள ஆசிரியர்கள் அல்லது கல்விசார் பணியாளர்களை பிரதியாக செயல்பட வைப்பது ஆகும். இவர்கள் சிக்ஷா கர்மி என அழைக்கப்படுகிறார்கள்.

போதிய அளவு கல்வி பெறாத உள்ளூர் நபர்கள் சிக்ஷா கர்மியாக நியமிக்கப்பட்டாலும் அவர்கள் சிறந்த ஆசிரியர்களாக செயலாற்றும் வகையில் பயிற்சியையும், கல்விசார் உதவிகளையும் பெற வழிவகை செய்வதை உறுதி படுத்திக் கொள்ளல் வேண்டும்.

## திட்டத்தின் நோக்கங்கள்

- அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்கும் நோக்கில் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து அடைவை பெறுவதற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- குறைந்த படச கற்றலில் அடைவு பெறுதல்.
- பெண்கள் கல்வியறிவு பெறவும், சமத்துவ நிலையை அடையும் வகையிலான நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் கல்வி அமைப்பை ஏற்படுத்துதல்.
- பெண்கள் மேம்பாட்டிற்கு உதவுதல்.
- கீழ்மட்ட இனத்தவர், இன சமூகத்தவர் மற்றும் சமூகத்தில் பின்தங்கியோர் ஆகியோரை உள்ளடக்கிய வயதுவந்தோர் மற்றும் குழந்தைகளுக்கான சமவாய்ப்பு கல்வியை அளிப் பதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- குறைவான மாணவர் சேர்க்கை மற்றும் அதிக இடைநிற்றல் போன்ற முக்கிய பிரச்சினைகளை தீர்த்தல் (குறிப்பாக பெண்களில்)

குறிப்புகள்

## உத்திகள்

- ஸ்வீடன் சர்வதேச முன்னேற்ற அமைப்பானது கண்காணிக்கும் அமைப்பாக இயங்குவதோடு ஆண்டிற்கு இருமுறை சிக்ஷா கர்மி திட்டத்தை மீளாய்வு செய்தல்.
- கள ஆய்விலிருந்தும் உறுதியான முடிவெடுத்தல் அடிப்படையில் செயல்முறையை வகுத்தல்.
- பரவலாக்கப்பட்ட மற்றும் அதிக சமூக பங்கேற்பு.
- பாலின பாகுபாடின்றி சமூக உணர்வோடு அணுகுதல்.


## செயல்படுத்தும் முறை

இராஜஸ்தான் அரசு தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் இணைந்து திட்ட இயக்குநரால் பயிற்சியினை திட்டமிட்டு ஒருங்கிணைத்து சிக்ஷா கர்மி பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிப்பதோடு பயிற்சியை மேற்பார்வையிடவும் செய்கிறது.

பஞ்சாயத்து அமைப்பு, சிக்ஷா கர்மி சகயோகி மற்றும் பாடம் சார்ந்த தன்னார்வலர்கள், சிக்ஷா கர்மி மற்றும் சமுதாயத்தினர் ஆகியோரின் உதவியோடு கிராமப்புற வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் கல்வித் தேவையை இத்திட்டம் நிறைவேற்றுகிறது.

## செயல்பாடுகள்:

இத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு படம் (5.3)ல் குறிப்பிடப்பட்டுள்ளது.




**படம் 5.3 சிக்ஷா கர்மியின் முக்கிய செயல்பாடுகள**

குறிப்புகள்

## செயல்பாடு 2

பள்ளி செல்லா குழந்தைகளுக்காக இயங்கும் ஏதேனும் ஒரு நிறுவனத்தை பார்வையிட்டு கீழ்க்காணும் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை தயார் செய்யவும்.

- பொது தகவல்கள், நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைபேசி எண், அமைவிடம், வகுப்பறை மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை, நிறுவனம் தேசிய அளவிலானதா அல்லது மாநில அளவிலானதா?
- நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இதர செயல்பாடுகள் (கல்வி மற்றும் பாட இணை செயல்பாடுகள்)

## 5.5 தனியாள் ஆய்வு: மகாராஷ்டிரத்தின் பல்வேறு செயல்திட்டங்கள்

இந்திய மாநிலங்களில் அனைவருக்கும் தொடக்கக் கல்வியினை வழங்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயல் திட்டங்களை தனியாள் ஆய்வின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டதை இங்கு காணலாம். நாம் இங்கு மகாராஷ்டிரா மாநிலத்தை தேர்வு செய்துள்ளோம். இதனை நீங்கள் உங்கள் மாநிலத்தோடு தொடர்புப்படுத்தி பார்க்கவும்.

மகாராஷ்டிராவில் பல்வேறு செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்தியதால் தரமான அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்க உறுதுணையாக இருந்தது.

மகாராஷ்டிரா அரசால் கண்டறியப்பட்ட தொடக்கக் கல்விக்கான செயல்திட்டங்கள் பின்வருமாறு:

### 5.3.5 மகாராஷ்டிராவை போன்ற மாநிலத்திற்கு தேவையான திட்டங்கள்.

#### 5.3.5.1 சமூகத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கான திட்டம்

ஆதி திராவிடர், பழங்குடியினர், நாடோடிகள் மற்றும் மலைவாழ் மக்கள் ஆகியோர் சமூகத்தில் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் இடம்பெறுகின்றனர். பின்தங்கிய இன ஆண், பெண் குழந்தைகளின் நலனுக்காக மகாராஷ்டிரா அரசானது கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- 10ஆம் வகுப்பு வரை ஊக்கத்தொகை
- இலவச புத்தகம் மற்றும் சீருடை

குறிப்புகள்

- தங்குமிடங்கள்
- அரசு மற்றும் தனியார் விடுதிகள்
- இடைநிலைக் கல்வி முடித்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு NCERT-யால் உருவாக்கப்பட்ட தேசிய திறன் ஆராய்ச்சி வாரியம் மூலம் ஊக்கத்தொகை வழங்குதல்.
- வருகைக்கான ஊக்கத்தொகை (படி)
- ஆசிரமப் பள்ளிகள்
- புத்தக வங்கி திட்டம்

### 5.3.5.2 பெண்களுக்கான திட்டங்கள்

பெண்களுக்கு கல்வி அளிப்பது என்பது குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் அவசியமானதாகும். எனவே மாநிலம் பெண் கல்விக்காக பல திட்டங்களை தீட்டுகின்றது.

**வருகைக்கான ஊக்கத்தொகை**

- 1 முதல் 4 வகுப்பு வரை பயிலும் பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த பெண் குழந்தைகளின் இடைநிற்றலை தவிர்க்க அவர்கள் பள்ளி வேலை நாள்களில் 75% வருகை புரிந்தால் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது.
- ஹகிலாபாய் ஹோகர்ஸ் மூலம் பெண்களுக்கான இலவச பயணத்திட்டம்:

கிராமப்புற பெண் குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்படாமல் இருக்க 1997 முதல் இலவச பேருந்து வசதி அரசால் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

**பெண்கள் அறிவொளி திட்டம்** (Matruprabodhan Project)

கிராமப்புறங்களில் அனைவருக்கும் தொடக்கக் கல்வியினை கொண்டு செல்லும் நோக்கில் குழந்தைகளின் தாய்க்கு, குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் சுயவளர்ச்சி குறித்த அறிவினை வழங்கும் திட்டமாகும்.

**இராணுவப் பள்ளிகள்**

பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு மகாராஷ்டிரா அரசானது நாசிக்கிலுள்ள போர் என்ற இடத்தில் இராணுவப் பள்ளி தொடங்கியது. இதன் மூலம் பெண்கள் ஊக்கத்தொகை பெறுவதோடு, உடல் தகுதி பெற்றிருப்பின் மேலும் பல பயிற்சிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

குறிப்புகள்

**சமுக் நிவாசி பள்ளிகள்:**

பெண் குழந்தைகள் தொலைதூரம் சென்று பயிலாத நிலை ஏற்படா வண்ணம் தடுக்க சமூக நிவாசி பள்ளிகள் திறக்கப்பட்டன.

### 5.5.5.3 பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கான திட்டங்கள்

சமூகத்தில் உள்ள மக்களில் ஒவ்வொரு இனத்திலும், ஒவ்வொரு மதத்திலும் பொருளாதாரத்தில் பின்தங்கியோர் உள்ளனர். அவர்கள் தங்கள் குழந்தைகளை கல்வி பயில பள்ளிக்கு அனுப்ப முடிவதில்லை. குடும்ப வறுமையின் காரணமாக குழந்தைகள் பணிக்கு சென்று வருவாய் ஈட்டவும், பள்ளியை விட்டு விலகும் நிலையும் உள்ளது.

**இக்குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள் பின்வருமாறு:**

- **உதவித்தொகை:** 1978ல் மகராஷ்டிர அரசாங்கம் இவ்வுதவித் தொகையை திறமை வாய்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய மேனிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.70ம் மாணவியருக்கு ரூ.80ம் வழங்கத் துவங்கியது.
- **E.B.C.:** 1956ஆம் ஆண்டு மகாராஷ்டிரா அரசாங்கம் இத்திட்டத்தை தொடங்கியது. 75% வருகை மற்றும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி மற்றும் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 15,000/-க்கும் மிகாமல் உள்ள மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**ஊட்டச் சத்துணவு**

இத்திட்டம் 1995ல் கிராம முன்னேற்றக் குழுவினால் பள்ளிக்கு தொடர்ச்சியாக வருகை தரும் அனைத்து குழந்தைகளுக்கும் இடைவேளையின்போது ஊட்டச்சத்தான உணவினை அளிக்க துவங்கப்பட்டது.

**சாவித்ரிபாய் பூலே பெற்றோர் தத்தெடுப்பு திட்டம்**

1993ல் இத்திட்டம் துவங்கப்பட்டது. பல பெண்கள் நிதி நிலை காரணமாக பள்ளியை விட்டு வெளியேறுகிறார்கள். இத்திட்டத்தின்படி, முதல்வர் தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் சமூகத்தின் எந்த உறுப்பினரும் இவ்வகையிலான பெண்களை தத்தெடுக்கவும் அவர்களது ஏழாம் வகுப்பு வரை ஒவ்வொரு மாதமும் குறைந்தது 30 ரூபாய் உதவித்தொகை வழங்கவும் இத்திட்டம் வழி வகை செய்கிறது.

குறிப்புகள்

**புத்தக வங்கிதிட்டம்**

ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு பள்ளிப் புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. வருட முடிவில் இப்புத்தகங்கள் திரும்ப பெறப்படுகின்றன. இத்திட்டம் கல்வியாண்டு ஆரம்பத்தில் மீண்டும் துவங்கப்படும். முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் புதிய புத்தகம் வழங்கப்படுகின்றன. புத்தக வங்கியில் உள்ள உயர் வகுப்புகளுக்கான அனைத்து புத்தகங்களும் புதிய புத்தகங்களாக மாற்றப்படுகின்றன.

### 5.3.5.4 தொலைதூர குழந்தைகளுக்கான திட்டங்கள்

இது 1970ஆம் வருடம் மகாராஷ்டிர அரசாங்கத்தினால் எளிதில் சென்றடைய இயலாப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்காக கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.

**ஊட்ட சத்துணவு திட்டம்**

0-6 வயது வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்தின் தரத்தினை உயர்த்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். அங்கன்வாடி மற்றும் பால்வாடி குழந்தைகளுக்கு இவ்ஊட்டச்சத்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் பழங்குடியின குழந்தைகளின் மன மற்றும் உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு திட்டமும் வழங்கப்படுகிறது.

**ஆஸ்ரம ஷாலா:**

பழங்குடியினர் மேம்பாட்டு இயக்ககத்தால் கொண்டுவரப்பட்ட திட்டம் ஆஸ்ரம ஷாலா ஆகும். தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் வறுமை காரணமாக தங்கள் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாது. இம்மாதிரியான ஏழை குழந்தைகள் ஆஸ்ரம் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு கல்வியறிவு, உறைவிடம் மற்றும் சீருடை போன்றவை இலவசமாக அளிக்கப்படுகிறது.

இப்பள்ளிகள் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தை களுக்காக நடத்தப்படுகின்றன. இவை நிர்வாகத்தினரால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. ஆஸ்ரம ஷாலா இரண்டு வகைப்படும்.

1. அடிப்படை ஆஸ்ரம் ஷாலா (Basic Ashram Shala): 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை

2. வகுப்பு அடிப்படை ஆஸ்ரம் ஷாலா 5 வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை

## வித்யா நிகேதன்

திறன் வாய்ந்த பழங்குடியின மாணவர்களுக்காக தொடங்கப்பட்ட முதல் நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் கேலாபூரின் யவத்மால் மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்கு மாணவர்களுக்கு கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. பெண்களுக்காக சுதந்திர வித்யா நிகேதனும் தொடங்கப்பட்டது. அனைத்து கல்வி நிறுவனங்களிலும் 10 இடங்கள் ஆதிவாசி மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## குரன் ஷாலா

இந்த நடமாடும் பள்ளிகள் (குரன் ஷாலா) மூலமாக முறைசாரா கல்வியினை கொண்டு செல்கின்றன. முதல் குரன் ஷாலாவினை நடைமுறைக்கு கொண்டு வந்தவர் ஸ்ரீமதி. தாராபாய் மோதக் மற்றும் அனுதாய் வாக் ஆவர். ஆசிரியர் மாணவர்களுடன் வனப்பகுதி களுக்கு பின்தொடர்ந்து சென்று முறைசாரா கல்வி மூலம் தூய்மை, மருத்துவம், நல்ல பழக்க வழக்கங்கள், மொழி ஆகியவற்றை பற்றியும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் முயற்சி செய்ய வேண்டும்.

## குழந்தை கல்வி திட்டம்

மகாராஷ்டிரா மாநிலம் இத்திட்டத்தினை 1982ல் UNICEF உதவியுடன் கொண்டு வந்தது. குழந்தைகளுக்கான புத்தகங்கள் முழுவதும் பல்வேறு விதமான படங்களுடன் மாணவர்களின் புத்தக மற்றும் பள்ளி செல்லும் ஆர்வத்தினை அதிகரிக்கும் வகையில் வழங்கப்பட்டன. குழந்தைகளின் முன்னேற்றத்தினை உறுதி செய்யும் வகையில் பெற்றோர் கூட்டமும் கூட்டப்பட்டன.

## பழங்குடியின மொழிகளுக்கான திட்டம்

பள்ளிகளின் மொழி மற்றும் பழங்குடி மக்களின் இருப்பிட மொழிக்கு இடையே வேறுபாடு காணப்படுகிறது. ஆகையால் பழங்குடி இனக்குழந்தைகள் தரமான மொழியினை புரிந்துகொள்தில் கடினம் ஏற்படுகிறது. இந்த வேறுபாட்டினை களைவதற்கு இரு மொழிகளும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஆகையால் மாணவர்கள் தாய்மொழி மற்றும் மாகாண மொழியினை அறிந்திருக்க வேண்டும். எனவே MSCERT பழங்குடி

மொழிகளில் குழந்தை களுக்கான பாடப்புத்தகங்களை தயார் செய்து அதற்கேற்றவாறு ஆசிரியர்களுக்கான கையேட்டையும் உருவாக்கி செய்து பயிற்சிகளை வழங்கியது.

குறிப்புகள்

### 5.3.5.5 பள்ளிக்கு வெளியே உள்ள குழந்தைகளுக்கான கல்வி திட்டங்கள்:

பல மாணவர்கள் வறுமை காரணமாக கல்வி பெற முடிவதில்லை. முறையான கல்வித் திட்டத்தில் அவர்களை மீண்டும் கொண்டுவர அரசாங்கத்தால் பல திட்டங்கள் நடைமுறை படுத்தப்பட்டன.

#### இணைப்பு பள்ளி

இத்திட்டம் தங்கள் படிப்பை விட்டு பள்ளிக்கும் வராமல் படிப்புகளை சில காலம் மறந்து விலகி இருக்கும் மாணவர்களுக்காக கொண்டுவரப்பட்ட முக்கிய திட்டமாகும். மாணவர்கள் தாங்கள் விட்டுச்சென்ற கல்வியை நிறைவு செய்யும் வாய்ப்பு இதில் வழங்கப்படுகிறது.

சுமார் 45 நாட்கள் மாணவர்கள் இத்தகைய பள்ளியில் கல்வியை நிறைவு செய்த பின்னர் அவர்கள் வழக்கமான தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியில் சேர்க்கப்படுகிறார்கள். இப்பள்ளியில் 45 நாட்களுக்கான பாடப்பொருள் மட்டுமே கற்பிக்கப்படுகிறது. படிப்பை இடையில் விட்ட மாணவர்கள் இப்பள்ளியில் சேர்க்கப் பட்டு அவர்கள் விட்டுச் சென்ற வகுப்புகளுக்கான பாடங்கள் கற்பிக்கப்பட்டு வழக்கமான பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். இப்பள்ளியினை நடத்துபவர் மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் கடினமான உழைப்பினையும் மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக மாணவர்கள் வழக்கமாக பள்ளிக்கு வருகைபுரிவர்.

இப்பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பாடப்பொருள் மற்றும் புத்தகங்களை அரசாங்கமும் தயாரிக்கின்றது.

#### சிந்து குழந்தை தொழிலாளர் திட்டம் (Indus Child Labour Project)

பல குழந்தைகள் வெவ்வேறு வேலைகளில் குழந்தை தொழிலாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது குழந்தை தொழிலாளர் முறையினை வேரோடு ஒழிப்பதும், மாணவர்களை மீண்டும் நடைமுறைக் கல்விக்கு கொண்டு வருவதுமேயாகும். இத்திட்டமானது மகாராஷ்டிராவின் ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. அவை, கோண்டியா, அமராவதி, ஜலானா, ஔரங்காபாத் மற்றும் மும்பை

குறிப்புகள்

இத்திட்டம் சார்ந்த தன்னார்வலர்களுக்கு திட்டம் சார்ந்த பயிற்சியளிக்கும் பொறுப்புகளை MS CERT எடுத்துள்ளது. இந்த குழந்தைத் தொழிலாளர் திட்டமானது தேசிய அளவில் சமுதாயம் அறியும் வகையில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டமாக (NCLP) செயல்படுத்தப்படுகிறது.

ஆபத்தான பகுதிகளான தொழிற்சாலைகள், நிறுவனங்கள், உணவகங்கள் போன்றவற்றில் உள்ள குழந்தை தொழிலாளர் குறித்து விசாரித்து 5 முதல் 8 வயது வரையுள்ள குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புதல் தன்னார்வலர்களின் பொறுப்பு ஆகும். 9 முதல் 13 வயதில் உள்ள மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி மையங்களில் அனுமதி வழங்கிட வேண்டும். மேலும் அவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளித்து பள்ளிக்கு செல்ல ஊக்கப்படுத்த வேண்டும். 14 முதல் 19 வயது வரையிலான குழந்தைகளுக்கு தொழில்முறை பயிற்சி அளித்து அவர்கள் கல்வியைத் தொடர உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

50 மாணவர்கள் தங்குவதற்கேற்ற மையம் அவர்கள் இருப்பிடத்திற்கு அருகில் அமைக்கப்பட வேண்டும். இம்மையங்களில் பல்வேறு விதமான வயதுடைய மாணவர்கள் இருப்பர். அவர்களுக்கு ஏற்ற வகையில் குழு கற்பித்தல் முறையை பின்பற்றி மாணவருக்கு கற்றலை எளிமைப்படுத்த வேண்டும. மாணவர்கள் பணி முடித்து வருவதை கருத்தில்கொண்டு அவர்களின் கல்வி ஆர்வத்தை தூண்டும் வகையில் பல்வேறு விதமான நிகழ்ச்சிகளை பல்வேறு கற்பித்தல் துணைக்கருவிகளை கொண்டு நிகழ்த்துதல் வேண்டும்.

**சக்கார் ஷாலா**

சக்கார் ஷாலா பள்ளிகள் கரும்பு வெட்டும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி அளிப்பதற்காக கொண்டுவரப் பட்டதாகும். தொழிலகங்களுக்கு அருகாமையில் பெற்றோர்கள் தொடர்ச்சியாக அல்லது நீண்டகால அடிப்படையில் குடிபெயர் வதால் அவர்களின் குழந்தைகள் கல்வியைத் தொடர முடிவதில்லை. ஏனெனில் கல்வியைத் தொடரும் வகையில் சிறப்பு வாய்ப்புகள் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அவ்விடத்தில் இல்லை. இக்கல்வி பிரச்சினைகளை தீர்க்க சக்கார் ஷாலா பள்ளிகளை திறந்து போதுமான கல்வி சேவைகள் குடிபெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

சக்கார் சாலா பள்ளிகள் இரண்டாம் பருவ பள்ளிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. இப்பள்ளிகள் ஆண்டு முழுவதும் செயல் படுவதில்லை. இது இரண்டாவது கல்வி ஆண்டில் மட்டுமே செயல்படுகிறது.

குறிப்புகள்

**கேப் திட்டம்**

பள்ளிக்கு வெளியே உள்ள 6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்காக 1981ஆம் ஆண்டு மகராஷ்டிரா அரசாங்கம் UNICEF உடன் இணைந்து அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற திட்டத்தினை தொடங்கியது.

கல்வியியல் கல்லூரிகளுடன் இணைந்து செயல்படும் சுயகல்வி மையங்களில் 25 முதல் 30 எண்ணிக்கையிலான பள்ளிக்கு வெளியே உள்ள குழந்தைகளுக்கு சேர்க்கை அளிக்கப்பட்டது. இவர்கள் தத்தம் வசதிக்கேற்ப பகுதிநேர வகுப்புக்கு பள்ளிக்கு வருகைபுரிவர். இங்கு கல்விக்கு உதவியாக கற்பதற்கு உதவும் வகையில் சுய கற்றல் உதவிகள் கிடைக்கப் பெற்றன.

**குறைதீர் கற்பித்தல் வகுப்புகள்**

கவனக் குறைவின் காரணமாக இணைப்பு பள்ளி மற்றும் பூலே ஹேமி யோஜ்னாவிலிருந்து வந்த மாணவர்களிடம் கற்றல் திறன் குறைந்து காணப்பட்டது. குறைதீர் கற்பித்தல் வகுப்புகள் இந்த மாணவர்களுக்கு குறைந்தபட்ச கற்றலை அளிக்க உதவின.

**வஸ்திசாலா**

வஸ்தி பள்ளிகள் என்பவை பொதுவாக தொடக்கப் பள்ளிகள். இவை 1 கி.மீ தூரத்திற்குள் பள்ளியே இல்லாத மலைப்பாங்கான சென்றடைய இயலாத பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மாணவர்களுக்கான முறைசாரா கல்வியை 1 முதல் 4ம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தின்படி அளிக்கின்றன. கிராம ஊராட்சியால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வளாகத்துள் வஸ்தி பள்ளிகளை ஆரம்பிக்க 1 முதல் 4ம் வகுப்பு வரை பயிலக்கூடிய குறைந்தபட்சம் 15 மாணவர்களாவது சேர்க்கப்பட வேண்டும். கிராமக்கல்வி குழுவானது தரமான ஆசிரியர்களை தேர்வு செய்து அவர்களை பணியமர்த்தும் முன் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் 30 நாள்கள் பயிற்சி அளிக்கிறது. அருகாமையில் உள்ள தொடக்கப் பள்ளியின் முதல்வரால் இப்பள்ளி மேற்பார்வையிடப்படுகிறது.

**5.3.5.6 சிறப்பு தேவையுடையோர்க்கான திட்டம்**
**(ஊனமுற்றோர்/தேவதாசி குழந்தைகள் பிற)**

சிறப்பு தேவையுடையோர் குழுவில் பல்வேறு சமூக அடுக்கு, இனம், சாதி, மதம் மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினர் போன்றோரின் குழந்தைகள் அடங்குவர். இந்த குழந்தைகளால் தொடக்கக் கல்வியை

முழுமையாக முடிக்க இயலுவதில்லை. எனவே சில திட்டங்கள் மூலமாக இவர்களுக்கு சிறப்பு கவனம் அளிக்கப்படுகிறது.

## தேவதாசி குழந்தைகளுக்கான திட்டங்கள்

சமூகத்தில் காணப்பட்ட எதிர்மறையான பாரம்பரிய முறையே தேவதாசி முறை. கண்மூடித்தனமான நம்பிக்கையால் இன்றளவும் பல தேவதாசிகள் சமூக, பொருளாதார அளவில் பின்தங்கி காணப்படுவதால் தங்கள் குழந்தைகளுக்கு கல்வியை அளிக்க முடிவதில்லை. எனவே தேவதாசி மற்றும் வரன்கானா (Varangana) குழந்தைகளுக்காக சில திட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- சத்துணவுத் திட்டம்
- வருகைக்கான ஊக்கத்தொகை
- புத்தக வங்கி திட்டம்
- உண்டு உறைவிடப் பள்ளிகள் ஸ்நேகாலயா
- பெண்களுக்கான அறிவொளித் திட்டம் (Women's Probodhan Program)
- இலவச பயணச்சலுகை திட்டம்

## ஊனமுற்றோருக்கான கல்வி

இவர்களுக்கு ஒருங்கிணைந்த கல்வி வழங்கப்படுகிறது. இந்த திறந்த கற்றல் முறையானது முறைசாரா கல்வி, தொலைதூரக் கல்வி, நடமாடும் பள்ளிகள், குறைதீர்க் கல்வி, பகுதிநேரக் கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்றவைகள் வாயிலாக இணைத்து வழங்கப்படுகிறது.

## இயலாக் குழந்தைகளுக்கான கல்வி

இயலாக் குழந்தைகளுக்காக மகாராஷ்டிரா அரசாங்கம் சிறப்பு பள்ளிகளை தோற்றுவித்தது. 1885ஆம் ஆண்டு மும்பையில் காதுகேளாதோர் மற்றும் வாய் பேச இயலாதோருக்கான பள்ளி மும்பையில் தோற்றுவிக்கப்பட்டது. சாதாரண குழந்தைகளுக்கு அளிப்பது போலவே வாய்ப்புகள் இக்குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டால் அவர்களின் தன்னம்பிக்கை மேம்பாடு அடைந்து பொதுவான பள்ளியில் சேர்ந்து படிக்க இயலும். இதையே ஒருங்கிணைந்த அணுகுமுறை என்கிறோம்.

குறிப்புகள்

**செயல் 3**

நீங்கள் தற்போது மகராஷ்டிரா மாநிலத்தில் நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்கள் குறித்து கற்றிருப்பீர்கள். அதேபோல் உங்கள் மாநிலத்தில் நடைமுறையில் உள்ள திட்டங்களை உற்றுநோக்கி உங்கள் மாநிலம் மகாராஷ்டிரா மாநிலத்துடன் ஒத்துள்ளதா என்பதை ஆராயவும். நீங்கள் கண்டறிந்த ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

## 5.4 மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம் (DPEP)

மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டமானது இந்தியக் கல்வி முறையில் திட்டமிடல் மற்றும் பல்வேறு தேசிய திட்டங்கள், மாவட்ட அளவிலான நிகழ்வுகள், வெளியிலிருந்து பெறப்பட்ட நிதியுதவி திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தலின்போது பெற்ற அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் கருத்தாழமிக்க செயல்பாட்டு நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1994ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட உலகின் கல்வித் திட்டங்களில் மிகப்பெரிய ஒன்றாகும். இத்திட்டத்தின் நோக்கம் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற இலக்கை அடைவதாகும்.

இத்திட்டம் மாவட்டத்தின் தேவைக்கான திட்டமிடல், பரவலாக்கப்பட்ட மேலாண்மை, பங்கேற்பு செயல்முறைகள், அதிகாரம் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சியை அனைத்து நிலைகளிலும் அளிப்பதை முக்கியத்துவமாக கொண்டுள்ளது. இத்திட்டம் தொடக்கக் கல்வி முறையை மேம்படுத்தி உயர் தொடக்கக் கல்வியின் நோக்கத்தை அடையும் பெரும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது.

DPEP (நிலை 1) திட்டமானது ஒரு மைய அரசு திட்டம் ஆகும். இத்திட்டம் முதலில் உலக வங்கி உதவியுடன் 5 மாநிலங்களில் தொடங்கப்பட்டு பின்னர்

குறிப்புகள்

பிற மாநிலங்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் 5 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டமாகவும் பெண் கல்வியில் தேசிய விகிதத்தை விட மாநில விகிதம் குறைவானதாகவும் இருத்தல் வேண்டும். இவற்றில் கற்பித்தல் கற்றல் மையங்கள் (TLC) சிறப்பாக செயல்பட்டு தொடக்கக் கல்வியின் தேவையை மேம்படுத்துவதாக செயல்பட்டன.

## 5.4.1 மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டத்தின் நோக்கங்கள்:

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் தன் அறிக்கையில் குறிப்பிட்ட நோக்கங்களை கொண்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய நோக்கங்கள் தொகுத்து பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளன.

- முறை மற்றும் முறைசாரா கல்வி மூலம் 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் கல்வியைப் பெறுதல்.
- 100% சேர்க்கை மற்றும் தக்கவைத்தல்.
- தரமான கல்வியின் மூலம் குழந்தைகள் குறைந்தபட்ச கற்றல் இலக்கை அடைதல்.
- பள்ளிகளில் தேக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் இடைநிற்றலை குறைத்தல்.
- ஆசிரியர்களுக்கும், சமூகத்தினருக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல், அதிகபட்ச பரவலாக்குதல், சமுதாய பங்கேற்பு.
- சமூகத்தின் ஒவ்வொரு அலகிலிருந்தும் பள்ளி வயது மாணவர்களை பள்ளியில் சேர்த்து சேர்க்கையை அதிகரித்தல்.

## 5.4.2 மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின் முக்கியக் கூறுகள்

DPEP-யின் நான்கு முக்கிய கூறுகள் பின்வருமாறு:

### கட்டுமான பணிகள்

கட்டுமான பணிகளின் கீழ் புதிய பள்ளிகள் கட்டுதல் (இரண்டு வகுப்பறை மற்றும் வராண்டா அமைப்புடன்) 5ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட்ட பள்ளியில் புதிய கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள், கழிப்பறை கட்டுதல், ஆழ்துளைக் கிணறு அமைத்தல், பள்ளி பராமரிப்பு மேற்கொள்ளல், குழு

உண்டு உறைவிடப் பள்ளிகள், ஆசிரியர் குடியிருப்பு மற்றும் பெண்கள் விடுதி போன்றவை முன்னிலைப்படுத்தப்பட்டன.

குறிப்புகள்

**நிகழ்வு**

முறையான கல்வி முறையில் கொண்டுவர இயலாத பள்ளி வசதிகளுக்கான சில மாற்றுமுறை அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தும் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் செயல்பாடுகள் - இந்நிகழ்வின் அவசியமான கூறுகளுள் ஒன்றாக உள்ளன.

**மேலாண்மை**

மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டமானது தெளிவான மேலாண்மை அமைப்புடன் இந்நிகழ்வை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்துதலை வழிநடத்தும் வகையில் அமைக்கப்பட்டது. இதில் மேலாண்மை தகவல் அமைப்பை உருவாக்கி செயல்பாடுகள் நுணுக்கமாக மேற்பார்வை செய்யப்பட்டதுடன் நிதிகள் சரியாகவும் வேகமாகவும் பயன்படுத்தப்பட வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இந்த அமைப்பு தேசிய, மாநில, மாவட்ட அளவில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டது. இந்த புதிய அமைப்புகள் மாவட்டத் திட்டத்திற்கு உதவியாக இருந்ததுடன் நடைமுறையில் உள்ள நிர்வாக அமைப்புகளுடன் இணைந்து செயல்திட்ட காலம் முடியும் வரை செயல்படுவதாக அமைக்கப்பட்டன.

**பள்ளி வரைபடம் மற்றும் நுண்திட்டமிடல்**

நுண் திட்டமிடல், தொடக்கக் கல்வியில் மாணவர் சேர்க்கையில் உள்ள இடர்ப்பாடுகளை கண்டறியவும், சமுதாயப் பங்கேற்பையும் நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயல்முறை ஆகும். மேலும் இது இடர்ப்பாடுகளைக் களைந்து தீர்வு பெற சமுதாயத்தின் ஆதரவைப் பெறுகிறது. கிராமக் கல்வி குழுவின் தெளிவான பங்கையும், பொறுப்புகளையும் நிர்ணயிப்பதில் நுண் திட்டமிடல் உதவுகிறது. இந்த கிராமக் கல்விக் குழுக்கள் கிராம கல்வி அமைப்பை மேற்பார்வை செய்து சேர்க்கை மற்றும் தக்கவைத்தலில் முன்னேற்றம் அடைவதில் சிறப்பான பங்கை அளிக்கின்றன.

### 5.4.3 மாவட்டத் தொடக்க கல்வித் திட்டத்தின் செயல் திட்டம்

தேசிய அளவிலான நிறுவனங்கள் மாநில, மாவட்ட அளவில் தொழில் சார்ந்த உதவியை அளித்து பரவலாக்கப்பட்ட திட்டமிடல் சிறப்பாக

குறிப்புகள்

செயல்படுத்தப்பட முயற்சியை மேற்கொண்டன. மாவட்டத் தொடக்க கல்வித் திட்டம் பரவலாக்கப்பட்ட கருத்துகளை நடைமுறைப்படுத்தப் பல்வேறு படிநிலைகள் மூலம் மிகுந்த சிரத்தையை மேற்கொண்டது.

- இத்திட்டம் பரவலாக்கப்பட்ட கல்வித் திட்டமிடலை தோற்றுவிக்க மாவட்டத்தை ஒரு அலகாக கண்டறிந்தது.
- மேலும் இத்திட்டம் மாநில அளவிலிருந்து உள்ளூர் அளவிற்கு வளங்களை மாற்றுவது குறித்த முயற்சிகளை மேற்கொண்டது.
- திட்டமிடல் செயல்முறையை வலுப்படுத்தும் வகையில் ஆலோசனை, பங்கேற்பு, வெளிப்படைத் தன்மையை உருவாக்குவதில், DPEP முயற்சியை மேற்கொண்டது.
- இத்திட்டம் கல்விசார் செயல்பாடுகளுக்கான தொழில் வளங்கள் சார்ந்த உதவியை அளிப்பதற்கான முயற்சியை புதிய நிர்வாக அமைப்புகளான வட்டார வள மையம் மற்றும் குறுவள மையம் வாயிலாக மேற்கொண்டது.
- ஒவ்வொரு பள்ளிக்கும் உத்தேச செலவினத் தொகை மானியமாக ரூ.2000/-மும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ.500/-ம் ஆண்டுதோறும் வழங்க முனைப்பை மேற்கொண்டது.
- திட்டமிடல் செயல்முறைகள் மூலம் மாவட்ட மற்றும் உபமாவட்ட அளவில் போதுமான உள்ளூர் வளங்களை தோற்றுவிப்பதில் முயற்சி மேற்கொண்டது.

### 5.4.4 உத்திகள் மற்றும் செயல்பாடுகள்

**எளிதில் அணுக வாய்ப்பு**

மலைவாழ்ப் பகுதிகளில் புதிய முன்பருவப் பள்ளிகள் (L.P. Schools), திறத்தல், எளிதில் சென்றடைய இயலாத மலைப்பகுதிகளில் பல்வகுப்பு கற்றல் மையங்களையும், எளிதில் சென்றடைய இயலாத மற்றும் பின்தங்கிய பகுதிகளில் மாற்றுப் பள்ளிகளையும் திறத்தல் (மலைவாழ்/கடலோரப் பகுதி)

**மலைவாழ் மற்றும் கடலோர பகுதி மக்களுக்கான கல்வி**

தன்னார்வலர்கள் மற்றும் ஊராட்சியின் உதவியுடன் மலைவாழ் குழந்தைகளுக்கான மாணவர் சேர்க்கை பிரச்சாரம், விலையில்லா பாடப்புத்தகங்கள், வழங்குதல் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்.




**தர மேம்பாடு**

செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களுக்கு மீண்டும் மீண்டும் பயிற்சி வழங்குதல்.

ஆசிரியர்களுக்கு வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் பள்ளிப் பார்வை மேற்கொள்ளும் போதும் மாதாந்திர குறுவள மையக் கூட்டத்தின் பொழுதும் கள உதவி வழங்குதல். திறன் வாய்ந்த ஆதி திராவிடர்/ பழங்குடியின மாணவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல், செயல்பாடுகள் வங்கி, ஆசிரியர் கையேடு போன்ற ஆசிரியருக்கு துணைபுரியும் பொருள்களை வழங்குதல், மாதாந்திர வகுப்புகள் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் மற்றும் சகவாசா முகாம் போன்றவற்றின் மூலம் ஆசிரியர்களுக்கு கள உதவி அளித்தல்.

**சமூக பங்கேற்பு**

கிராமக் கல்விக்குழு, ஊராட்சி மேற்பார்வை தனிப்பிரிவு போன்றவற்றை உருவாக்கல், ஊராட்சி மேற்பார்வை தனிப்பிரிவு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல், பெற்றோர்களுக்கான அறிமுகப் பயிற்சி வழங்குதல் மூலம் சமூக பங்கேற்பை உறுதி செய்தல்.

**ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு**

செயல் ஆய்வு, வட்டார வள மையம் மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

**திட்டமிடல் மற்றும் மேலாண்மை**

பள்ளி அடிப்படையிலான திட்டமிடல், பங்கேற்பு முறையிலான ஆண்டுத்திட்டம் தயாரித்தல, வட்டார ஆலோசனைக்குழு கூட்டங்கள், மாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மாவட்ட செய லாக்கக் குழு போன்றவைகளுக்கான அறிமுகப் பயிற்சி வழங்குதல்.

**இயலாக் குழந்தைகளை கண்டறிதல் மற்றும் கல்வி அளித்தல்**

- இயலாக் குழந்தைகளை கண்டறிதல்
- அக்குழந்தைகளுக்கு தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்
- ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்

குறிப்புகள்

- பெற்றோர்களுக்கான அறிமுகப் பயிற்சி
- மக்கள் பிரதிநிதிகளை கண்டறிதல்

**பெண் கல்வி**

- பெண் குழந்தைகளுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் வழங்குதல்
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளல்
- ஆசிரியர்களுக்கு உணர்திறன் பயிற்சி வழங்குதல்

**தொலைதூரக் கல்வி**

தொலைத்தொடர்பு கருத்தரங்கம் மற்றும் தொலைதூரக் கற்றலுக்கான கற்றல் பொருள்கள் வழங்குதல்.

**ஊடகம்**

- மாவட்ட மற்றும் வட்டார அளவிலான செய்திமடல் வெளியிடல்
- மாவட்ட மற்றும் ஊராட்சி அளவிலான கண்காட்சி நடத்துதல்

**மேலாண்மை தகவல் அமைப்பு**

மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம் செயல்படும் மாவட்டங் களுக்கும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கும் கணினிகளையும், தொலைத்தொடர்பு வலை இணைப்பையையும் வழங்குதல். கணினி ஆய்வாளர் மற்றும் நிகழ்ச்சி தயாரிப்பாளர், தரவு. நுழைவு இயக்குநர் போன்றோரை நியமனம் செய்தல்.

ஒவ்வொரு வருடமும் பள்ளி தகவல்களை புதுப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் மேலாண்மை தகவல் அமைப்பானது செலவின அறிக்கை சார்ந்த தரவுகளை உருவாக்கி தனது மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**கிராமக் கல்விப் பதிவேடு மற்றும் தக்கவைத்தல் பதிவேடு**

கிராமக் கல்வி பதிவேட்டில் கிராமத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களில் உள்ள ஒவ்வொரு ஆண், பெண் குழந்தையின் கல்வி நிலை குறிப்பிடப்பட்டிருக்கும். தக்கவைத்தல் பதிவேட்டில், ஒரு பள்ளி அல்லது வகுப்பின் தக்கவைத்தல் வீதம் கணக்கிடப்பட்டு குறிக்கப்பட்டிருக்கும்.

குறிப்புகள்

அதாவது, எத்தனை குழந்தைகள் தங்கள் படிப்பைத் தொடர்கின்றனர் என்பதும் எத்தனை குழந்தைகள் பாதியிலேயே நின்றுவிட்டனர் (இடைநிற்றல்) என்பதையும் அறிய தக்கவைத்தல் பதிவேடு பயன்படும்.

### 5.4.5 அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டத்தின் தாக்கம்

இந்த அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டமானது செயல்பாட்டு நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டது. தேசிய எழுத்தறிவு இயக்கத்தின் அடிப்படையில் ஒரு தேசிய மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டது. நாடு முழுவதிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தியதோடு மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம் நடைமுறையில் உள்ள மாவட்டங்களில் எந்த அளவிற்கு தேசிய எழுத்தறிவு இயக்கம் சென்றடைந்துள்ளது என்பதையும் மதிப்பீடு செய்ய சூழ்நிலை ஆய்வினை மேற்கொண்டது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தினை ஒப்பீடும் செய்தது. இந்த பகுப்பாய்வானது மாநிலக் கல்வி இயக்ககம் மற்றும் மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டத்தின் கீழ் உருவான கல்வி மேலாண்மை தகவல் மையத்திலிருந்து பெறப்பட்ட இரண்டாம் நிலை ஆதாரத் தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

இம்மதிப்பீட்டின்படி கண்டிறியப்பட்ட சில முடிவுகள்/உற்றுநோக்கல்கள் பின்வருமாறு:

#### ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள்

- ஆய்வு மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை — 219

  (இரண்டாக பிளவுபட்ட மாவட்டங்களையும் சேர்த்து 248)
- நிலை I (1994 செப்டம்பர் 2001) — 42
- நிலை II (1996 டிசம்பர் 2002) — 80
- நிலை III (1998 மார்ச் 2003) — 70
- ஆய்வு மேற்கொள்ளப்பட்ட மாநிலங்கள் 18

#### பள்ளிகள்

- அமைப்பில் உள்ள பள்ளிகள் — 3,75,000
- சேர்க்கப்பட்ட புதிய பள்ளிகள் — 10,000

குறிப்புகள்

**மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்**

- *அமைப்பிலுள்ள மாணவர்கள் 513 இலட்சம்*
- *ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 11 இலட்சம்*

**முன் குழந்தை பருவக்கல்வி** (ECE)

- *முன் குழந்தை பருவக்கல்வி மையம் அமைத்தல் 56,124*
- *இத்திட்டத்தில் அடங்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 21 இலட்சம்*

**மாற்றுப் பள்ளிகள்** (AS)

- *மாற்றுப் பள்ளி மையங்கள் அமைத்தல் 56,124*
- *மாற்றுப் பள்ளி மையங்களுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை 21 இலட்சம்*

**சேர்க்கை** (Enrollment)

- *மொத்த சேர்க்கை வீதம் (கல்வி உத்திரவாத திட்டம், மாற்றுப்பள்ளி மாணவர் சேர்க்கையும் சேர்த்து) 102%*
- *நிகர சேர்க்கை வீதம் (கல்வி உத்திரவாத திட்டம், மாற்றுப்பள்ளி மாணவர் சேர்க்கையும் சேர்த்து) 90%*

குறிப்பு: இந்த அலகின் இறுதியில் மொத்த மற்றும் நிகர மாணவர் சேர்க்கை வீதத்தை கணக்கிடும் சூத்திரம் கொடுக்கப் பட்டுள்ளது.

*(மூலம்: மாவட்டத் தொடக்கக் கல்வி திட்ட நிகழ் பதிவுத்தாள், நேரடித் தகவல், தொகுதி VI எண் 11)*

## 5.5 தொகுப்புரை

இந்தியக் கல்வி முறை தடுமாற்றங்களுடன் மிகப்பெரியதாக உள்ளது. இது 2011ல் 121 பில்லியன் மக்கள்தொகையில் 300 மில்லியன் மாணவர்கள் மற்றும் 6.5 மில்லியன் ஆசிரியர்களைக் கொண்டு உலகின் மிகப்பெரிய நாடாக உருவாகியது. மாணவர் சேர்க்கை யானது 100 சதவீதத்தைத் தொட்டு 120 மில்லியனுக்கும் மேலான குழந்தைகள் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தால் பயன டைந்தனர். மேலும் எழுத்தறிவு சதவீதமானது 65%–லிருந்து 75% வரை உயர்ந்தது. கல்வி முன்னேற்றம் சிறந்த வாழ்வின் வாயிலாக உள்ளது.



குறிப்புகள்

உத்திரப்பிரதேச ஆதாரக் கல்வித் திட்டம், தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான பீகார் கல்வித் திட்டம், பெண் கல்விக்கான லோக் ஜும்பிஷ் (Lok Jumbish) ஆசிரியர் வருகை புரியாமைக்கான சிக்ஷா கர்மி (Shiksha Karmi) போன்ற பல்வேறு செயல்திட்டங்கள் மூலம் பல்வேறு உத்திகள் பயன்படுத்தி அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்ற இலக்கை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1990ஆம் ஆண்டின் இடையில் பெண் குழந்தைகளின் எழுத்தறிவு வீதம் குறைவாக உள்ள மாவட்டங்களில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்கக் கல்விக்கான பரவலாக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் சமுதாயப் பங்களிப்பின் மூலம் பள்ளிக்கு வெளியே உள்ள குழந்தைகளை பள்ளிக்கு வரவழைக்கும் புதிய துவக்கமாக இத்திட்டம் அமைந்தது. மக்கள் பங்களிப்பின் மூலம் பல்வேறு சிறப்பான செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக கிராமப்புறம் வரை இத்திட்டம் சென்றடைந்தது. கிராமக் கல்வி குழுவானது பல்வேறு மாவட்டங்களில் நூறு சதவீத கிராமங்களை இத்திட்டத்தில் கொண்டு வந்தது. இத்தகைய நேர்மறையான மாற்றங்கள் மூலம் விரைவில் அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்ற இலக்கை இந்தியா எட்டும்.

## 5.6 கலைச்சொல் அகராதி/சுருக்கம்

- குழந்தைகளின் இடம் மற்றும் சிறப்புத் தேவைகளின் அடிப் படையில் எல்லா இடங்களிலும் கல்வி தடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்படுவதே அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டம் என்பதாகும்.
- அனைவருக்கும் தொடக்கக்கல்வி திட்டத்தின் மூன்று கூறுகள்
  - அனைவரும் எளிதில் அணுகல் மற்றும் சேர்க்கை
  - வருகைப்பதிவு மற்றும் தக்கவைத்தல்
  - தரமான கல்வி
- மொத்த மாணவர் சேர்க்கை வீதம் என்பது ஒரு தொடர்புடைய கூறாகும். முதன்மை மொத்த மாணவர் சேர்க்கை என்பது எத்தனை மாணவர்கள் வயது வேறுபாடின்றி தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது பள்ளி வயதுக் குழந்தைகளின் எண்ணிக்கையுடன் தொடர்புடையது என்பதைக் குறிக்கிறது.

முதன்மை மொத்த மாணவர் சேர்க்கை வீதம் = தொடக்கப் பள்ளியில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை / தொடக்கப் பள்ளி வயது குழந்தைகளின் எண்ணிக்கை

மொத்த மாணவர் சேர்க்கை வீதத்தின் மதிப்பானது 100 சதவீதத்தை தாண்டலாம். 100 சதவீதத்தைத் தாண்டி என்ற மதிப்பானது தொடக்கப் பள்ளியில் சில குழந்தைகள் தொடக்கப் பள்ளி வயதிற்கு மேலும் அல்லது கீழும் இருக்கலாம் என்பதைக் குறிக்கிறது. பொதுவாக மொத்த மாணவர் சேர்க்கை வீதம் என்பது பள்ளி வயதைவிட அதிக வயதுடைய மாணவர் சேர்க்கை ஆகும். எடுத்துக்காட்டாக தக்கவைத்தல் அல்லது தாமதமாக பள்ளியில் சேருதல் என்பதைக் குறிக்கிறது.

முதன்மை நிகர மாணவர் சேர்க்கை வீதம் = தொடக்கப் பள்ளியில் சேர்ந்துள்ள தொடக்கப் பள்ளி வயது குழந்தைகளின் எண்ணிக்கை / தொடக்கப் பள்ளி வயது குழந்தைகளின் எண்ணிக்கை

நிகர மாணவர் சேர்க்கை வீதத்தின் மதிப்பானது 100 சதவீதத்தை தாண்டாது. அனைத்து தொடக்கப் பள்ளி வயது குழந்தைகளும் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டிருப்பின் முதன்மை நிகர மாணவர் சேர்க்கை வீதம் 100 சதவீதமாக இருக்கும். நிகர மாணவர் சேர்க்கை 100 சதவீதத்திற்கு குறைவாக இருத்தல் என்பது தொடக்கப் பள்ளி வயது குழந்தைகள் அனைவரும் தொடக்கப் பள்ளியில் சேரவில்லை என்பதைக் குறிக்கிறது. அதாவது சிலர் பள்ளிக்கு வெளியேயும், சிலர் முன்குழந்தை பருவப் பள்ளியிலும் சிலர் இடைநிலைப் பள்ளி கல்வியிலும் அல்லது வேறு வழிக்கல்வி முறைகளில் பயில்வதைக் குறிக்கும்.

- உத்தரப்பிரதேச ஆதாரக் கல்வித்திட்டம் (UP-BEP) அடிப்படைக் கல்வி பெற வழிவகை செய்கிறது.
- அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டத்திற்கான பீகார் கல்வித் திட்டம் மாநிலத்தின் தரமான கல்வி மேம்பாட்டை வலியுறுத்துகிறது.
- அனைவருக்கும் கல்விக்கான மக்கள் இயக்கம் என்று அழைக்கப்படும் லோக் ஜீம்பிஷ் (Lok Jumbish) என்ற புதிய செயல்திட்டம் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.
- அனைவருக்கும் தரமான கல்வி என்ற நோக்கத்தை அடைவதில் தடையாக உள்ள ஆசிரியர்கள் பணிக்கு வராதிருத்தலை போக்க சிக்ஷா கர்மி என்ற கல்விசார் செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

குறிப்புகள்

- மாற்று பிரபோதன் (Matru Probodhan) சாவித்ரிபாய் பூலே பெற்றோர் தத்தெடுப்பு திட்டம், சாகர்ஷாலா, குரன்ஷாலா (KuranShala), வித்யாநிகேதன், பழங்குடியின மொழிக்கான செயல்திட்டம் போன்ற பல்வேறு செயல்திட்டங்களை மகாராஷ்டிரா அரசாங்கம் கண்டுபிடித்தது.
- 1994ல் தோற்றுவிக்கப்பட்ட திட்டங்களுள் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் உலகின் மிகப்பெரிய கல்வி செயல்திட்டம் ஆகும். இத்திட்டம் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. மேலும் இது மாவட்டத்தின் தேவைக்கான திட்டமிடல், பரவலாக்கப்பட்ட மேலாண்மை, பங்கேற்பு செயல்முறைகள், அனைத்து நிலைகளுக்குமான அதிகாரம் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**சுருக்கம் (Abbreviations)**

| | | |
|---|---|---|
| DPEP | : | மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் |
| UP-BEP | : | உத்திரப்பிரதேச ஆதாரக் கல்வித் திட்டம் |
| Primary GER | : | மொத்த மாணவர் சேர்க்கை வீதம் |
| UEE | : | அனைவருக்கும் தொடக்கக் கல்வி |
| NER | : | நிகர மாணவர் சேர்க்கை வீதம் |
| BEP | : | பீகார் கல்வித் திட்டம் |

## 5.7 பரிந்துரைக்கப்படும் நூல்கள் – மேற்பார்வை நூல்கள்

1. லோக் ஜீம்பிஷ் ஆறாவது அறிக்கை, மீளாய்வுகள்
   http: /புத்தகத் தொகுதி 1/1970 தொகுதி 41/2011
   (http: /booksvolume 1/1970 - volume 41/2011

## 5.8 அலகு இறுதி பயிற்சி செயல்பாடுகள்

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடத்தை நிரப்புக

அ. சர்வ சிக்ஷா அபியான் (SSA) திட்டத்தின் மூலம் ................. (பத்தாவது/பதினொன்றாவது) ஐந்தாவது திட்டத்தில் தொடக்கக் கல்வி முக்கியத்துவம் பெற்றிருந்தது.

ஆ. 2009–10ஆம் ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான பள்ளிகளைப் பெற்றிருந்த மாநிலம் ................. (மத்தியப்பிரதேசம்/உத்தரப்பிரதேசம்)

இ. அனைவருக்கும் கல்விக்கான மக்கள் இயக்கம் என்பது (லோக் ஜீம்பிஷ்/ மகிளா சமக்யா)

ஈ. தொடக்கக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ................. (மத்தியப்பிரதேசம்/ அஸ்ஸாம்) மாநிலத்தில் குறைவான தேர்ச்சி அடைவோர் வீதம் 50% அதிகரித்துள்ளது.

உ. ராஜஸ்தான் அரசாங்கம் ................ன் (ஸ்வீடன் சர்வதேச முன்னேற்ற அமைப்பு (SIDA)/உலக வங்கி) உதவியுடன் சிக்ஷா கர்மி செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

ஊ. ..................... திட்டம் (உத்தரப்பிரதேச ஆதாரக் கல்வித்திட்டம்/பீகார் கல்வித் திட்டம்) வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கான கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது.

## விடைகள்

அ) பத்தாவது                ஆ) உத்திரப்பிரதேசம்

இ) லோக் ஜீம்பிஷ்                (ஈ) அஸ்ஸாம்

உ) ஸ்வீடன் சர்வதேச முன்னேற்ற அமைப்பு

ஊ) பீகார் கல்வித் திட்டம்

2. பின்வரும் சூழலுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தை எழுதுக.

**கூற்றுகள்**

**திட்டங்கள்**

(அ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்படும் மாவட்டங் களுக்கும், மாநிலத் திட்ட அலுவலகத்திற்கும் கணினியையும் தொலைத்தொடர்பு வலை இணைப்பையும் வழங்குதல்.

(ஆ) குழந்தை தொழிலாளர் முறையை வேரோடு அழித்து அக்குழந்தைகளை பள்ளியில் சேர்த்தலை நோக்கமாகக் கொண்ட திட்டம்.

(இ) நடைமுறை பயன்பாட்டில் உள்ள தொடக்கப் பள்ளிகளை சிக்ஷா கர்மி மூலம் நடத்துதல்.

(ஈ) கிராமப்புற நூலகங்களின் விரிவாக்கம் சார்ந்த கருத்துகள்

குறிப்புகள்

(உ) பாரானின் கிஷனன்கஞ்ச் வட்டாரத்தின் காண்டேலா குறுவள மையத்தில் மேற்கொள்ளப்பட்ட பழங்குடியின குழந்தைகளுக் கான நிகழ்ச்சி.

**விடைகள்**

அ) மேலாண்மை தகவல் அமைப்பு

ஆ) சிந்து குழந்தை தொழிலாளர் செயல்திட்டம்

இ) பகல் நேர பள்ளிகள்

ஈ) சுவரொட்டி பணிமனை

உ) முக்டன்கன் (Muktangan)

**3. பொருத்துக**

| குழு அ | குழு ஆ |
|---|---|
| (i) பீகார் கல்வித் திட்டம் | (a) பெண் கல்வி |
| (ii) லோக் ஜீம்பிஷ் | (b) ஆசிரியர் பள்ளிக்கு வருகை புரியாமை |
| (iii) சிக்ஷா கர்மி | (c) ஒருங்கிணைந்த கல்வி |
| | (d) தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் |

**விடைகள்**

| குழு அ | குழு ஆ |
|---|---|
| (i) பீகார் கல்வித் திட்டம் | தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் |
| (ii) லோக் ஜீம்பிஷ் | பெண் கல்வி |
| (iii) சிக்ஷா கர்மி | ஆசிரியர் பள்ளிக்கு வருகை புரியாமை |

**4. கோடிட்ட இடத்தை நிரப்புக**

அ) குழந்தைகளின் இடம் மற்றும் சிறப்புத் தேவைகளின் அடிப்படையில் எல்லா இடங்களிலும் கல்வி தடையின்றி .......... அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டம் என்பதாகும்.

குறிப்புகள்

ஆ) இந்திய அரசாங்கம் தொடக்க நிலை வகுப்புகளுக்கு மாணவர்கள் எளிதில் நடந்தே சென்றடையும் வகையில் .............. தொலைவில் தொடக்கப் பள்ளிகளை அமைத்துள்ளது.

இ) ...............ன் மதிப்பு 100 சதவீதத்தை விட அதிகம் என்பது தொடக்கப் பள்ளி வயதை விட அதிக அல்லது குறைவான வயதை உடைய குழந்தைகள் தொடக்கப் பள்ளியில் இருப்பதை குறிக்கிறது.

ஈ) இந்தியாவின் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் ................ நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

உ) நாசிக்கில் உள்ள ..................... என்ற திட்டத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு மகாராஷ்டிரா அரசாங்கம் இராணுவப் பள்ளியை தொடங்கியது.

ஊ) இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களின் ஆதி திராவிட மக்கள்தொகையின் சமூக சமத்துவ குறியீடு .................

**விடைகள்**

1) கிடைக்கப் பெறுதல்

2) 1 கி.மீ

3) மொத்த மாணவர் சேர்க்கை வீதம்

4) செயல்பாட்டு

5) போர் (Bhor)

6) 90

**5. ஒரு வாக்கியத்தில் விடையளி**

அ) எந்த பள்ளிகள் இரண்டாம் பருவ பள்ளிகள் எனவும் அழைக்கப்படுகின்றன?

ஆ) ஏன் குழந்தைத் தொழிலாளர் திட்டம் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் எனவும் அழைக்கப்படுகிறது?

இ) அனைவருக்கும் தொடக்கக் கல்வி - வரையறு?

ஈ) மகாராஷ்டிராவில் குரன் ஷாலாவை முதலில் நடைமுறைப்படுத்தியது யார்?

குறிப்புகள்

உ) சிக்ஷா கர்மி என்றால் என்ன?

ஊ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் சூழல் பகுப்பாய்வில் தரவுகள் எங்கிருந்து பெறப்பட்டன?

## 6. சுருக்கமான விடையளி.

அ) அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்றால் என்ன? அதன் பல்வேறு கூறுகளையும் எழுதுக.

ஆ) பள்ளி வரைபடம் மற்றும் நுண் திட்டமிடல் லேராக் ஜூம்பிஷின் முக்கிய செயல்பாட்டுப் பண்பை முன்னிலைப் படுத்துவதை விளக்குக.

இ) மொத்த மாணவர் சேர்க்கை வீதம் என்பதைப் பற்றி நீவிர் என்ன நினைக்கிறீர்கள்? எடுத்துக்காட்டுடன் விளக்கு.

ஈ) பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு மாநில அரசு வழங்கும் சலுகைகள் யாவை?

உ) ஆதாரக் கல்வித் திட்டத்தின் கீழ் உத்திரப்பிரதேச அரசு திட்டமிட்ட பல்வேறு உத்திகள் மற்றும் செயல்பாடுகள் யாவை?

ஊ) பெண் கல்விக்கான பல்வேறு திட்டங்களைக் குறிப்பிடுக.

எ) ராஜஸ்தானின் சிக்ஷா கர்மி செயல்திட்டத்தின் பல்வேறு செயல்பாடுகளில் சிக்ஷா கர்மியின் பங்கு என்ன?

ஏ) இடைநின்ற குழந்தைகளுக்கான கல்வித் திட்டங்களை விவரி.

ஐ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் நோக்கங்கள், முக்கியக் கூறுகள் மற்றும் பல்வேறு உத்திகளை விளக்குக.

ஒ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தால் அனைவருக்கும் தொடக்கக் கல்வியில் ஏற்பட்ட தாக்கத்தை எழுதுக.

குறிப்புகள்

# அலகு 6 அனைவருக்கும் தொடக்கக் கல்வியை பெறுவதற்கான அணுகுமுறைகள் - II

## அமைப்பு

6.0 அறிமுகம்

6.1 கற்றல் நோக்கங்கள்

6.2 சர்வ சிக்ஷா அபியான் திட்டம் (SSA) மற்றும் அதன் இன்றியமையாத அம்சங்கள்

6.3 SSA திட்டத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

6.4 SSA திட்டத்தின் விரிவான உத்திகள்

6.5 SSA திட்டத்தின் கீழ் உள்ள நிதி நெறிமுறைகள்

6.6 பள்ளி வளர்ச்சி மற்றும் பள்ளி தொடர்பான பிற வசதிகள்

6.7 மதிய உணவு சட்டம் மற்றும் சர்வ சிக்ஷா அபியானில் அதன் பங்கு

6.8 2009 ஆண்டு இலவச மற்றும் குழந்தைகளுக்கான கட்டாய கல்வி உரிமைச் (RTE) சட்டம் மற்றும் சர்வ சிக்ஷா அபியான் - ஒத்திசைவு

6.9 தொகுப்புரை

6.10 பரிந்துரைக்கப்படும் நூல்கள் மற்றும் மேற்கோள் நூல்கள்

6.11 அலகு இறுதி பயிற்சி செயல்பாடுகள்

## 6.0 அறிமுகம்

நமது நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான செயல்திட்டங்களை நீங்கள் அலகு 5இல் படித்திருக்கின்றீர்கள்.

குறிப்புகள்

மேலும் அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் மீது மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் ஏற்படுத்திய தாக்கத்தையும் நீங்கள் படித்திருப்பீர்கள்.

இந்த அலகில் சர்வசிக்ஷா அபியானின் இன்றியமையாத அம்சங்கள், மேலாண்மை மற்றும் மேற்பார்வை போன்ற அனைவருக்கும் தொடக்கக் கல்வி பெறுவதற்கான குறிக்கோளை அடைவது குறித்து பயிலலாம். ஆறு முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அடிப்படை கல்வியை வழங்குவதை நோக்கமாக் கொண்டு சர்வ சிக்ஷா அபியான் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல முன்னேற்றங்கள் இருந்தாலும் பல மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான பள்ளிக் குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயனடையாமல் உள்ளனர். சர்வ சிக்ஷா அபியான் திட்டம் செயல்படுவதை பற்றி விவாதிக்கையில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 கல்வி பெறுவது அடிப்படை உரிமை என்று உறுதிப்படுத்துவதையும் தொடர்பு படுத்த வேண்டும்.

## 6.1 கற்றல் நோக்கங்கள்

இவ்வலகை பயின்ற பின்பு நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

- SSA-வின் அடிப்படை சிறப்பம்சம் மற்றும் வரலாற்றை விவரித்தல்.
- சர்வ சிக்ஷா அபியானின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை விளக்குதல்
- சர்வ சிக்ஷா அபியானின் (SSA) விரிவான அணுகுமுறை திட்டத்தை கண்டறிந்து அவற்றை விளக்குதல்.
- SSA திட்டத்தின் நிதி நெறிமுறைகளை விளக்குதல்
- SSA-வின் நோக்கங்களை அடைவதில் மதிய உணவு வழங்குவதன் உள்ள பங்களிப்பு பற்றி விவாதித்தல்
- குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 (RTE Act 2009)ன் முக்கியத்துவத்தையும் மற்றும் SSA உடனான உறவு பற்றி விவாதித்தல்.
- கல்வியறிவின்மையை ஒழிப்பதில் SSA-வின் பங்கு பற்றி விவாதித்தல்.

## 6.2 சர்வ சிக்ஷா அபியான் திட்டம் மற்றும் அதன் இன்றியமையாத அம்சங்கள்



ஆறு முதல் பதினான்கு வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும் தொடக்க கல்வியை வழங்குவதே அரசாங்கத்தின் முக்கியத் திட்டம் என்பது உங்களுக்குத் தெரியும். குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், தக்கவைத்தல் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை மூலம் குழந்தைகள் கற்றல் அடைவை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். இது பல்வேறு சமூக பிரிவுகளுக்கு இடையேயுள்ள பாலின வேறுபாடுகளையும், இடைவெளிகளையும் இணைக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது. 1998ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் மாநிலக் கல்வி அமைச்சர்கள் வழங்கி பரிந்துரைகளை தொடர்ந்து 2001ஆம் ஆண்டு SSA தொடங்கப்பட்டது.

2002ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசியலமைப்பில் 86வது சட்ட திருத்தத்தில் தொடக்கக் கல்வி என்பது அடிப்படை உரிமையாக அமைந்தது. மேலும் தொடக்கக் கல்வியை இலவசமாக வழங்குவதற்கான குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தை ஆகஸ்ட் 2009ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்தில் வெளியிடப்படவில்லை.

### (i) SSA-வின் இன்றியமையாத அம்சங்கள்

SSAஆனது பின்வரும் இன்றியமையாத அம்சங்களை கொண்டுள்ளது. இது அனைவருக்கும் தொடக்கக் கல்வியில் நோக்கங்களை அடைவதற்கான மிக முக்கியமான திட்டத்தில் ஒன்றாகும்.

- அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் குறிக்கோள் மற்றும் நோக்கங்களை அடைய சரியான நேரத்தில் அமைக்கப் பட்ட ஒரு திட்டமாகும்.
- நாடு முழுவதும் தரமான அடிப்படைக் கல்வி தேவை என்ற அடிப்படையின் வெளிப்பாடாக அமைந்ததே இத்திட்டம்.
- அடிப்படை கல்வி மூலம் சமூக நீதி மேம்படுத்துவதற்கான வாய்ப்பே இத்திட்டமாகும்.
- பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள், பள்ளி நிர்வாகக்குழு, கிராமக் கல்வி குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் உள்ளூர் மக்கள் ஆகியோர் இணைந்து அனைத்து குழந்தைகளும் கல்வி பயில முனைப்போடு செயல்பட வேண்டும்.

குறிப்புகள்

- அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பது நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள அரசியல் வெளிப்பாடாகும்.
- தொடக்கக் கல்வி நிர்வாகத்தில் தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் பிற அடிததள கட்டமைப்புகளும் இணைந்து செயல்படுகின்றன.
- மைய, மாநிலங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கங்களுக் கிடையேயான ஒரு கூட்டாண்மையை இது வரவேற்கிறது.
- அந்தந்த மாநிலங்கள் தங்கள் தொலைநோக்கு பார்வையில் தொடக்க நிலைக் கல்வியை உயர்த்துவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.
- இது தனியார் மற்றும் பொது கூட்டமைப்பின் செயல் பாட்டு உத்திக்கான ஒரு வாய்ப்பாகும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக SSA திட்டம் என்பது சமுதாயத்திற்கு ஏற்ப குழந்தைகளின் திறன்களை மேம்படுத்தவும் அதனை படிப்படியாக தரமான கல்வி மூலம் உறுதி செய்வதுமாகும்.

## 6.3 SSA-வின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்

### (அ) SSA-வின் நோக்கங்கள்

2010ஆம் ஆண்டிற்குள் 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பயனுடைய மற்றும் பொருத்தமான தொடக்கக் கல்வியை சர்வ சிக்ஷா அபியான் மூலம் வழங்கப்பட வேண்டும். சமூக பங்களிப்பின் மூலம் சமூக, வட்டார, பாலின பாகுபாடு களைதலே, பள்ளி நிர்வாக மேலாண்மையில் SSAவின் மற்றொரு இலக்காகும். பயனுள்ள, தொடர்புள்ள கல்வியானது கல்வி குறித்த தேடலை, சமுதாயத்திலிருந்து அந்நியப்படுத்தாமல் ஒருங்கிணைப்பதாகும். இதன் நோக்கம் குழந்தைகள் இயற்கைச் சூழலை பற்றி அறிந்துகொள்ளவும், அவர்களின் மனித ஆற்றலை முழுமையாக ஆன்மிகரீதியிலும், பொருளாதார ரீதியாகவும் அனுமதிக்கும் ஒரு வழிமுறையாகவும் இருக்க வேண்டும். இந்த கல்வி தேடலானது மதிப்புசார் கல்வி அடிப்படையிலான கற்றல் செயல்முறையாக இருக்க வேண்டும். சுயநலமாக செயல்படாது ஒருவர் மற்றொருவரோடு இணங்கி பணியாற்ற வேண்டும். ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வியின் முக்கியத்துவத்தை 0 முதல் 14 வயது வரை அபியான் உணர்ந்திருக்கிறது. மேற்கண்ட செயல்பாடுகள் மூலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையங்களில் முன்பருவ கல்விக்கு உதவுதல் அல்லது முன் பருவக்கல்வி அல்லாத பகுதிகளில் உள்ள சிறப்பு முன்பருவ கல்வி மையங்கள்

குறிப்புகள்

போன்றவற்றில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை கல்வி அளிப்பதில் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

(ஆ) சர்வ சிக்ஷா அபியானின் குறிக்கோள்கள் SSAவினுடைய சிறப்பு நோக்கங்கள் பின்வருமாறு:

- அனைத்து குழந்தைகளும், பள்ளி கல்வியை உறுதிப்படுத்தும் மையம் மற்றும் மாற்றுப் பள்ளி, 2003 முகாமிற்கு பின் மீண்டும் பள்ளியில் சேர்ந்து இருப்பதை உறுதி செய்தல். (இது 2005க்கு பின் திருத்தி அமைக்கப்பட்டது).
- 2007ஆம் ஆண்டிற்குள் அனைத்து குழந்தைகளும் ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்திருத்தலை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து குழந்தைகளும் எட்டு ஆண்டுகள் தொடக்க பள்ளிப்படிப்பை 2010ஆம் ஆண்டிற்குள் முடிப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- வாழ்க்கைக்கான கல்வியில் திருப்திகரமான தரத்தை அடைய வலியுறுத்துவதே தொடக்கக் கல்வியின் நோக்கமாகும்.
- சமூக மற்றும் பாலின சமத்துவ இடைவெளிகளை 2007-ம் ஆண்டிற்குள் ஆரம்ப நிலையிலும் 2010ஆம் ஆண்டிற்குள் தொடக்கக் கல்வி நிலையிலும் இணைத்தல்.
- 2010-ஆம் ஆண்டிற்குள் பள்ளியில் சேர்ந்த அனைத்து குழந்தைகளையும் தக்க வைத்தலை உறுதி செய்தல்.
- ஒட்டுமொத்த கட்டமைப்பிற்குள் மாநிலங்கள் பாடப் பொருள் சார் குறிப்பிடத்தக்க வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ள அனுமதித்தல்.
- உள்ளூர் சிறப்புகளை பிரதிபலிக்க, ஒவ்வொரு மாநிலங்களில் உள்ள மாவட்டங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஊக்கப்படுத்துகிறது.
- பரந்த தேசிய கொள்கை விதிமுறைகளின் அடிப்படையில் உள்ளூர் தேவையின் அடிப்படையான திட்டமிடலை ஊக்குவிக்கிறது.
- பரந்த தேசிய நெறிகளை பயன்படுத்துவதன் மூலம் ஒரு யதார்த்தமான திட்டமிடலை உருவாக்குதல்.

இதன் நோக்கம் தேசியளவில் ஒரே மாதிரியான கல்வியை அடைவதற்கு அந்தந்த மாநிலங்களில் உள்ள மாவட்டத்தில் அவர்களுக்குரிய முறையில் கட்டமைப்புகளை ஏற்படுத்தி கால வசதிக்கு ஏற்ப உருவாக்குவதே ஆகும்.

2010க்குள் இக்குறிக்கோளை அடைந்தே தீர வேண்டும். 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தை களை பல்வேறு வகையான உத்திகளை பயன்படுத்தி பள்ளிக்கு வெளியே உள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்ந்து 8 வருட பள்ளிக் கல்வியை முடிக்க செய்வதே இதன் முக்கிய நோக்கமாக வலியுறுத்தப் படுகிறது.

பாலின சமத்துவம் மற்றும் சமுதாய இடைவெளியை இணைப்பின் மூலம் சரியான தாக்கத்தை பள்ளிகளில் ஏற்படுத்தி குழந்தைகளை பள்ளிகளில் இருக்கச் செய்வதாகும். இதன் கட்டமைப்பிற்குள் பொருத்தமான கல்வி முறையை ஏற்படுத்துவதன் மூலம் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் பயன் உள்ள வகையில் பள்ளிக் கல்வி முறையை அவர்களுடைய சூழ்நிலை மற்றும் சமூக சூழ்நிலைகளை புரிந்து உணர வைக்கிறது.

## அனைவருக்கும் கல்வி இயக்கம் ஒரு கட்டமைப்பு / திட்டம்

அனைவருக்கும் கல்வி இயக்கம் இரண்டு முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது.

1. தொடக்கக் கல்வித் திட்டத்தை செயல்படுத்துவதில் பரந்த கட்டமைப்பை அளித்தல்.
2. SSA என்பது ஒரே சீரான, தொடக்கக் கல்வியை, முக்கியமான பகுதிகளில் அடைவதற்கு, நிதி ஒதுக்கீடு வழங்குவதற்கான செயல்முறை திட்டம் ஆகும். தொடக்க கல்வி துறையின் முதலீட்டில் மைய, மாநிலத் திட்டங்களில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கட்டமைப்பு ஒரு பகுதியாக, பிரதிபலிக்கிறது.

இவை அனைத்தும் வரும் ஒரு சில வருடங்களில், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்முறை திட்டத்தோடு இணையும். மேலும் இது அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான கூடுதல் வளமாக விளங்குகிறது.

## 6.4 நிறுவன சீரமைப்புகள்

மைய மற்றும் மாநில அரசுடன் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக நிறுவனத்திறன் மேம்பாடு மற்றும் நிறுவன வெளிப்பாடு ஆகியவற்றை சீரமைப்புக் கூறுகளாக கொண்டுள்ளன. மாநில அரசுகள் கல்வி அமைப்பு மற்றும் கல்வி நிர்வாகம் ஆகியவற்றின் மீது புறவய மதிப்பீடுகள் செய்ய வேண்டும். இவற்றுடன் பள்ளிகளின் அடைவு நிலை, பொருளாதார சிக்கல்கள், பரவலாக்குதல், சமூகம் பள்ளிகளை தமதாக்கிக் கொள்ளுதல், மாநிலக் கல்வி விதிகளை மீளாய்வு செய்தல் ஆசிரியர்களை தேர்வு செய்து பணியமர்த்துதல், தொடர் கண்காணிப்பு, மதிப்பீடு, பெண் கல்வி நிலை, தாழ்த்தப் பட்டோர் பழங்குடியினர், சிறப்புத் தேவையுடையோர்

மற்றும் முன் பருவக் கல்வி முறை ஆகியவற்றின் சிக்கல்களும் ஆய்வு செய்யப்பட வேண்டும். சில மாநிலங்களில் தொடக்கக் கல்வியில் வெளிப்பாட்டு முறையை மேம்படுத்த பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.



குறிப்புகள்

## நிதியை நிலைநிறுத்துதல்

தொடக்கக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு செயல்பாடுகள் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் நிலை நிறுத்தப்படுகின்றன. இது மைய, மாநில அரசுகளுக்கிடையேயான நீண்டகால நிதிப் பங்கீட்டு முறையாக இருக்கிறது.

## சமுதாய கூட்டாண்மை

சிறப்பான பரலாக்கப்பட்ட முறையில், சமுதாயக் கல்விசார் பணிகள் பள்ளியை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. மகளிர் குழு, கிராம நிர்வாகக் குழு (ம) பஞ்சாயத்து ராஜ் ஆகியவற்றின உறுப்பினர்களின் ஈடுபாடு மற்றும் பங்களிப்பின் மூலம் பள்ளிச் செயல்பாடுகள் மேம்படுத்தப்படுகின்றன.

## நிறுவனத் திறன் மேம்பாடு

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சிறப்பான கட்டமைப்பு மற்றும் திறன் வெளிப்பாட்டினை NUEPA, NCERT, NCTE, போன்ற தேசிய நிறுவனங்களும் SCERT/SIEMAT போன்ற மாநில நிறுவனங்களும் DIET போன்ற மாவட்ட அளவிலான நிறுவனங்களும் உறுதி படுத்துகின்றன.

- நிறுவனங்கள் மற்றும் கருத்தாளர்களைக் கொண்ட நிலைத்த உறுதுணை அமைப்புகள் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்த இயலும்.

## கல்வி நிர்வாகத்தை மேம்படுத்துதல்

நிறுவன வளர்ச்சி, புதிய அணுகுமுறைகளை செயல்படுத்துதல், குறைந்த செலவு மற்றும் திறமையான முறைகளை பயன்படுத்துவதன் மூலமாக கல்வி நிர்வாகத்தை மேம்படுத்தலுக்கு அறைகூவல் விடுக்கிறது.

## வெளிப்படையான சமுதாய அடிப்படையிலான கண்காணிப்பு

இத்திட்டம் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கண்காணிப்பு அமைப்பாகும். கல்வி மேலாண்மை தகவல் அமைப்பானது பள்ளியின் இயல்நிலை தகவல். சமூக அடிப் படையான தகவல் ஆகியவற்றை தொடர்புபடுத்தி நுண்ணிலைத் திட்டமிடலுக்கும் ஆய்வுப் பணிகளுக்கும் வழவகுக்கிறது.



குறிப்புகள்

இவை மட்டுமின்றி ஒவ்வொரு பள்ளியும், பள்ளி சார்பான தகவல்களையும் பெறும் நிதிசார் தகவல்களையும் சமுதாயத்திற்கு தெரியப்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது.

## குடியிருப்பை அலகாக கொண்டு திட்டமிடல்

குடியிருப்பை அலகாகக் கொண்ட திட்டமிடலில் சமுதாய அடிப்படையிலான அணுகுமுறையை அனைருக்கும் கல்வி இயக்கம் கையாள்கிறது. குடியிருப்பு திட்டங்களை அலகாகக் கொண்டு மாவட்டத் திட்டமிடல் பணி மேற்கொள்ளப்படுகிறது.

## சமுதாயத்தின் தார்மீக பொறுப்பு

ஆசிரியர்கள், பெற்றோர்கள் (ம) சமுதாய பங்கேற்பாளர்கள் இவர்களுக்கிடையேயான ஒத்துழைப்பு, அதே சமயம் சமுதாயத் திற்கான பொறுப்பு (ம) வெளிப்படை தன்மையையும் அனைவருக்கும் கல்வி இயக்கம் எதிர்கால இலக்காக கொண்டுள்ளது.

## பெண் கல்விக்கு முன்னுரிமை

அனைவருக்கும் கல்வி திட்டத்தின் முதன்மையான குறிக்கோள்களில் ஒன்று பெண் கல்வி. குறிப்பாக ஆதி திராவிட, மலைவாழ் பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையின பெண் குழந்தைகளின் கல்வியில் கவனம் செலுத்துதல்.

## சிறப்பு கவனம் தேவைப்படும் குழுக்கள்

கல்வி செயல்பாடுகளில் ஆதி திராவிடர், மலைவாழ் பழங்குடியினர், சிறுபான்மையினர், நகர்ப்புற வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகள், சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டிய குழந்தைகள் போன்ற குழந்தைகளை ஒருங்கிணைத்து, பங்குபெற செய்வதில் தனி கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## தரத்திற்கான உந்துதல்

கலைத்திட்டம், குழந்தை மையச் செயல்பாடுகள், சிறப்பு கற்பித்தல் கற்றல் அணுகுமுறைகள் போன்றவற்றை மேம்படுத்துவதன் மூலம் தொடக்கக்கல்வி நிலையில் குழந்தைகளுக்கு பொருத்தமானதாக மாற்ற அனைவருக்கும் கல்வி திட்டம் உந்துதலை ஏற்படுத்துகிறது. இதுவே அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் தரத்திற்கான உந்துதல் ஆகும்.

## ஆசிரியர்களின் பங்கு

ஆசிரியர்களின் பங்கு, கூர்நோக்கு செயல்பாடுகள் ஆகியவற்றை அங்கீகரிப்பதன் மூலம் SSA அவர்களின் வளர்ச்சித் தேவைகளை





பரிந்துரைக்கிறது. வட்டார வளமையம்யங்கள், குறு வளமையங்கள், தகுதி வாய்ந்த ஆசிரியர் நியமனம், பங்களிப்பின் மூலம் ஆசிரியர் திறன் மேம்பாம்பிட்டிற்கான வாய்ப்பளித்தல் கலைத்திட்டம் தயாரிப்பில் ஆசியர்கள் பங்களிப்பு, பிற இடங்களில் உள்ள கல்வி நிலையை அறிவதற்கான பயணங்கள் போன்றவற்றின் மூலம் ஆசிரியர்களின் மனித வளம் மேம்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டத்தின் பிரதிபலிப்பாக தொடக்க கல்வி தேவையை பூர்த்தி செய்யத் தேவையான நிதி ஆதாரங்களை அளிக்க ஏற்ற வகையில் அனைவருக்கும் கல்வி திட்டம் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

## அனைவருக்கும் கல்வி திட்டத்தில் பொதுத்துறை (ம) தனியார் பங்களிப்பு

அரசு மற்றும் அரசு நிதியுதவி பள்ளிகள் தொடக்க கல்வி மேம்பாட்டிற்கு அதிக அளவு பங்களிப்பதை அனைவருக்கும் கல்வி இயக்கம் கருத்தில் கொண்டுள்ளது. அதே சமயம் நாட்டின் பல பகுதிகளில் சுயநிதி பள்ளிகளும், தொடக்கக்கல்வி வழங்குகின்றன. ஏழை குழந்தைகளால் தனியார் பள்ளிகளில், கட்டணம் செலுத்தி பயில இயலவில்லை. இருப்பினும் சில தனியார் பள்ளிகள் குறைவான கட்டணத்தில ஏழை குழந்தைகளுக்கு கல்வி அளிக்கிறது. இத்தகைய பள்ளிகளில், குறைவான அடிப்படை வசதிகளுடன் குறைவான ஊதியத்திற்கு ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

அனைவருக்கும் சமத்துவம் அளிக்கும் வகையிலும், தனியார் பள்ளிகளில் அனைத்து குழந்தைகளும் சேர்வதற்கும், தனியார் (ம) பொதுத்துறை முயற்சிக்கிறது. அரசு, உள்ளூர் அமைப்பு, அரசு நிதியுதவி பள்ளி போன்றவற்றில் அனைவருக்கும் கல்வி திட்டம் மதிய உணவு திட்டத்தையும் மாவட்ட தொடக்கக் கல்வி திட்டத்தையும் நடைமுறைப்படுத்துகிறது.

அரசு/தனியார்/உள்ளூர் அமைப்புகள், அரசு நிதியுதவி பள்ளிகளின் முன்னேற்றத்தை தரம் உயர்த்த விரும்புகிறது. மாநிலக் கொள்கையின் நியதிகளுக்கு உட்பட்டு பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் இதை செயல்படுத்த முயற்சி எடுக்கிறது.

மாநில கொள்கைகள், அடிப்படையில் DIET (ம) அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், தனியார் நிதியுதவி பெறாத நிறுவனங்களுக்கு வள உதவியை செய்ய வேண்டும். அதிகப்படியாக ஏற்படும் செலவை அந்த தனியார் நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## 6.5 அனைவருக்கும் கல்வி திட்ட நிதி வரன்முறை

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில், அனைவருக்கும் கல்வி திட்டம் 85:15 விகிதத்திலும், பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் 75:75 விகிதத்திலும், மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 50:50 விகிதத்திலும் இருந்தது. சரியான பங்கு அளிக்கும் பொறுப்பினை மாநில அரசு எழுத்துப் பூர்வமாக அளித்தது.

- 1999/2000ல் தொடக்கக் கல்வி மேம்பாட்டிற்காக மாநில அரசு அளிக்கும். பங்கில் ஒரே அளவை தொடர்ந்து நிலை நிறுத்த வேண்டும். இப்பங்குத் தொகையை விட அதிகமான தொகையை மாநில அரசு SSA-வுக்கு வழங்குதல் வேண்டும்.
- இந்திய அரசு, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு முதல் தவணையை தவிர, பிற தொகையை வழங்கும் போது மாநில அரசின் பங்கினை சரிபார்த்த பின் தான் வழங்குகிறது.
- ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின்படி அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு 85:15 விகிதத்தில் ஊதியத்தினை மைய, மாநில அரசு வழங்குகிறது.
- இவ்வூதியம் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் 75:25 ஆக இருந்தது, இனிவரும் காலங்களில் இது 50:50 விகிதத்தில் இருக்கும்.
- தொடக்கக் கல்வி துறையில் நடைமுறையிலுள்ள திட்டங்கள் (தேசிய பால்பவன் (ம) NCTE தவிர) ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு பிறகு ஒருங் கிணைக்கப்பட்டன. தொடக்கக் கல்வி குழந்தைகளுக்கு, தேசிய அளவிலான ஊட்டச்சத்து உணவு வழங்கும் திட்டத்தில் (மதிய உணவு), உணவு தானியங்கள் வழங்கல் (ம) சில குறிப்பிட்ட போக்குவரத்து செலவினை அந்த மையமும். சமைத்து வழங்கப்படும் உணவிற்கான தொகையை மாநில அரசும் ஏற்கிறது.
- மாவட்டக் கல்வி திட்டம் என்பது வெவ்வேறு நிதி சார்ந்த திட்டக்கூறுகள். PMGY, JGSY, PMRY குறிப்பாக சுனிஷ்சிட் ஜோக்கர் போஜனா, சட்டப்பேரவை உறுப்பினர் (ம) பாராளுமன்ற உறுப்பினர்களின் வளர்ச்சி நிதி, மாநில திட்டம், பன்னாட்டு நிதி (ம) தன்னார்வ அமைப்பு மூலம் பெறப்பட்ட நிதிகளுடன் தொடர்புடையது.
- பள்ளியினை தரம் உயர்த்துவதற்கும், பராமரிப்பு செலவு, பள்ளி மற்றும் கற்றல் கற்பித்தல் கருவிகளை பழுதுபாப் பதற்கு ஆகும்

செலவினை, கிராம நிர்வாகக்குழு, பள்ளி மேலாண்மை குழு, கிராம பஞ்சாயத்து அல்லது கிராம, பள்ளி அளவில் நிதிகளை பெற்று பயன்படுத்தல்.

- மாநில திட்டத்தின் நிதியின் மூலமாக, உதவித்தொகை வழங்குதல் (ம) சீருடை வழங்குதல் போன்றவற்றை பெறுதல் வேண்டும். இதற்கான தொகையை அனைவருக்கும் கல்வி திட்டம் வழங்காது.

குறிப்புகள்

## 6.6 பள்ளி முன்னேற்றம் மற்றும் அதன் தொடர்புடைய வசதிகள்

மாநிலங்கள் தான் தொடக்கக் கல்வியின் முக்கியமான பொறுப்பு என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். தொடக்கக் கல்விக்காக மைய அரசு வழங்கும் நிதியுடன் கூடுதல் வளங்களை மாநில அரசு, பள்ளியின் கட்டமைப்பு, ஆசிரியர்கள் நியமனம் (ம) ஆசிரியர் பயிற்சி போன்றவற்றிற்கு பயன்படுத்த வேண்டும்.

அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டத்தின் முக்கிய அடைவு மனித வளத்தினை மேம்படுத்துதல் ஆகும். அதிலும் குறிப்பாக வகுப்பறை, பாடநூல் வழங்குதல், ஆசிரியர் நியமனம் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

### (i) SSA-வின் செயல்பாடுகள்

### மாற்றுத்முறை புதுமைக் கல்வி (AIE)

SSA-வின் மாற்றுமுறை புதுமை கல்வியானது (AIE) தொடக்கக் கல்வியினை அனைத்துக் குழந்தைகளும் எளிதில் அணுகும் வகையில் அளிக்கிறது. இதில் பின்தங்கிய மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பழங்குடியின, கடலோரங்களில் வசிக்கும் குழந்தைகள் பங்கேற்பதற்காக பல்வேறு உத்திகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### (ii) கட்டுமான பணிகள்

கட்டுமான பணிகள் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் முக்கிய அங்கமாகும். மொத்த செயல்திட்ட நிதியில் இருந்து கட்டுமான பணிக்கு மிகப்பெரிய அளவில் 33% முதலீடு செய்யப்படுகிறது. இது மாணவர்களின் தேவைக்கான பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதோடு மாணவர்களை தக்கவைத்துக் கொள்ளவும் உதவுகிறது. மேலும் இவை இரண்டும் SSA-வின் முக்கிய குறிக்கோள்களாக உள்ளன. துணை மாவட்ட அளவிலான வள மையங்களுக்கு உள்கட்டமைபபு வசதிகளை வழங்கி கல்வி

குறிப்புகள்

மேம்பாட்டிற்கு உதவுகிறது. இது தரமான முன்னேற்றத்திற்கான ஊக்கியாக செயல்படுகிறது.

## (iii) புதுமையான செயல்பாடுகள்

பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதுமையான திட்டம் 6 முதல் 14 வயதுடைய குழந்தைகளுக்கான பயனுள்ள மற்றும் பொருத்தமான தொடக்கக் கல்வியினை அடையவும் சமூக, பிராந்திய மற்றும் பாலின இடைவெளிகள் இன்றி அனைவரையும் பங்கேற்கச் செய்யும் ஒரு ஊக்கியாக செயல்படுகிறது. நீங்கள் அறிந்த வரையில் வெற்றிகரமான இத்திட்டம் மாணவர்களிடையே கல்வியில் ஆர்வத்தை உருவாக்கவும் அதை தக்க வைத்துக் கொள்ளவும் உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் புதுமையான திட்டங்களாவன: முன் குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி, பெண் கல்வி SC/ST கல்வி மற்றும் கணினி கல்வி.

## (iv) R & E (ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு)

இச்செயல்பாடு ஆராய்ச்சி, மதிப்பீடு, மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணிப்பதை உள்ளடக்கியது. குடியிருப்பு சார் தரவை புதுப்பிப்பதற்கான வழக்கமான பள்ளி வரைபடம், நுண்ணிலை திட்டமிடல் போன்ற வசதிகள் இதில் உள்ளன. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்படலாம். இத்திட்டத்தில் கீழ்க்காணும் செயல்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

- பயனுள்ள களஆய்வு கண்காணிப்பிற்கான கருத்தாளர் குழுக்களை உருவாக்குதல்.
- வழக்கமான, சமூகம் சார்ந்த தரவினை உருவாக்கி அளித்தல்.
- அடைவுத்தேர்வு, மதிப்பீடு சார் ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- ஆய்வுச் செயல்பாடுகளை மேற்கொள்ளல்.
- பெண் கல்வியறிவு குறைவான மாவட்டங்கள் மற்றும் ஆதிதிராவிட, பழங்குடியின பெண் குழந்தைகளை மேற்பார்வையிட சிறப்பு பணிகளை மேற்கொள்ளல்.
- கல்வி மேலாண்மை தகவல் அமைப்பின் மீதான செலவினங்கள்.
- காட்சிப்படுத்தும் திரை அமைப்பிற்கான இதர செல வினங்கள் உதாரணமாக வரைபடங்கள், சுவரொட்டிகள், வண்ண பேனாக்கள், தலைமேல் பிம்பம் வீழ்த்தி பேனாக்கள் மற்றும் பிற.
- கோஹார்ட் (short study) ஆய்வினை மேற்கொள்ளல்.

குறிப்புகள்

## (v) பள்ளி மானியம்

இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளுக்கு 2000 ரூபாய் வீதம் பள்ளி மானியம் வழங்கப்பட்டது. இதில் ரூ.1,000 பள்ளி நூலக வசதிகளை மேம்படுத்துவதற்காகவும். எஞ்சிய பணம், செயல்படாத உபகரணங்களை செயல்பாடும் உபகரணங்களாகவும், பள்ளியை அழகு படுத்துதல், தளவாடப் பொருட்கள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு, இசைக்கருவிகள் மற்றும் பள்ளிகளின் முழுமையான சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

## (vi) ஆசிரியர் மானியம்

வகுப்பறை இடைவினைகளை மேம்படுத்துவது மற்றும் கற்பித்தல் துணைக்கருவிகள் தயாரிப்பதற்கு ரூ.500 ஒவ்வொரு ஆசிரியருக்கும் வழங்கப்படுகிறது. ஆசிரியர்கள் பயனுள்ள வகுப்பறைக்கான கற்றல் கற்பித்தல் உபகரணங்களை தயாரிக்கவும் பெறுவதற்கும் இம்மானியத்தினை பயன்படுத்துகின்றனர்.

## (vii) ஆசிரியர் பயிற்சி

அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிப்பது என்பதே SSA-வின் மிக முக்கியமான இலக்காகும். தரமான கல்வி என்பது தரமான ஆசிரியர்களை சார்ந்துள்ளது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். SSA-வின் பிரதான முயற்சிகளில் ஒன்றானது தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சியாகும். இதில் நவீன பாடப்பொருள்களுக்கு ஏற்ற புதுமையான கற்பித்தல் முறை மற்றும் அந்த சூழலில் ஏற்படும் சிக்கல்களும் அடங்கும். ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சியின் முக்கிய குறிக்கோள் குழந்தையின் கற்றலை எளிமையாக்கும் வகையிலான திறமைகளை ஆசிரியர்களிடம் வளர்த்தலே ஆகும். அனைவருக்கும் தொடக்கக் கல்வி சார்ந்த பல்வேறு சிக்கல் சார்ந்த அணுகுமுறை குறித்த பயிற்சியினை முதன்மை கருத்தாளர்களுக்கு வழங்கி அதனை அடுத்த நிலையில் அவர்கள் ஆசிரியர்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் அப்பயிற்சியினை வழங்கும் வாய்ப்பு உள்ளது. ஆசிரியர்களுக்கான இப்பணியிடைப் பயிற்சி, ஆசிரியர்கள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி சார்ந்த புதிய போக்குகள் மற்றும் நடைமுறைகளை புதுப்பித்துக்கொள்ள உதவுகிறது. இப்பயிற்சியினை மேம்படுத்த பல்வேறு விதமான உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் முக்கிய உத்திகள் பின்வருமாறு:

குறிப்புகள்

- ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் மறுபயிற்சி அளித்தல்.
- புதிய கலைத்திட்டம் மற்றும் பாடப்புத்தகம் சார்ந்த பயிற்சிகள் அளித்து அதில் ஆசிரியர்களை தரப்படுத்துதல்.
- தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (NCF 2005) சார்ந்த பயிற்சிகள் அளித்தல்.
- தேர்வு சார்ந்த சீர்திருத்தங்கள்.
- தரக்குறியீட்டு முறை, மதிப்பீடு மற்றும் தரக்குறியீட்டு முறையின் தாக்கம் குறித்த பயிற்சியளித்தல்.
- பாடம் சார்ந்த மற்றும் பாடம் சாராத பகுதிகளில் முன்னேற்றம்.
- சிறப்புத் தேவைகளையுடைய குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி சார்ந்த பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.
- தரப்படுத்தப்பட்ட கல்வி மதிப்பீட்டை திட்டமிடல் மற்றும் அதனை செயல்படுத்துதல்.
- தொடர் நடவடிக்கைகள் பள்ளிக்கு சென்று உதவுதல், மீளாய்வு கூட்டங்கள் நடத்துவதை உறுதிப்படுத்துவதன் மூலம் அனைத்து அளவிலும் கருத்தாளர் குழுக்கள் வலுப்படுத்தப்படுதல்.

  (ஒவ்வொரு பாடத்திற்கான தனித்தனியான கருத்தாளர் குழுக்கள் ஒரு மாவட்டத்திற்கு 300/350 வரை)
- DIET-ஆனது பயற்சியின் தேவையின் அடையாளம் கண்டறிந்து ஆசிரியர்களுக்கான பயிற்சி கட்டகங்களை உருவாக்குதல் வேண்டும். இந்த செயல்முறை பயிற்சியின் தரத்தை மேம்படுத்த உதவுகிறது.

தொடர்ந்து ஆசிரியருக்கு பயிற்சி என்பது கல்வியில் கற்பித்தல் முறைகள், குழந்தை உளவியல், செய்து கற்றல், மதிப்பீட்டு முறைமைகள் மற்றும் பாதுகாப்பு முறைமைகள் போன்றவற்றில் தொடக்கக் கல்வி ஆசிரியருக்கு பயிற்சி அளிப்பதாகும்.

## (viii) தொலைதூரக் கல்வி:

தொலைதூரக் கல்வி திட்டம், இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் ஒரு தேசியக் கூறு எனலாம். இது தொடர்பான செயல்பாடுகளை அந்தந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து செயல்படுத்தும் பொறுப்பை இந்திரா காந்தி திறந்தநிலை பல்கலைக்கழகமானது ஏற்று நடத்தி வருகிறது. தொலைதூரக்

குறிப்புகள்

கல்வித் திட்டம் மற்றும் அனைவருக்கும் கல்வி திட்டம் இணைந்து தொடக்க நிலைக் கல்வியோடு தொடர்புடைய ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களின் கல்விசார் மேம்பாட்டிற்கு மிகவும் உறுதுணையாக நிற்கின்றன.

மேலும் தானே கற்றல் உபகரணங்கள், ஒலி/ஒளிநாடாப் பதிவுகள், நிகழ்ச்சிகள், வானொலி ஒலிபரப்புகள், தொலைத் தொடர்பு கருத்தரங்கம் போன்ற பல்லூடகங்களின் துணைகொண்டு நேரிடையான பயிற்சிக்கு வழிவகை செய்கின்றன. நீங்கள் இந்த தொலைதூர வழியிலான பயிற்சி அளிக்கும் முறையானது பல்வேறு தனிநபர்களை நேரிடையாக சென்றவடைதோடு, பயிற்சி தகவல்கள் மாறுதலின்றியும், ஒவ்வொரு நிலையிலும் ஏற்படும் தகவல் இழப்பை தவிர்த்தும் நேரிடை அனுபவமாக அமைகிறது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

**ஒப்படைப்பு 1:** SSA-க்கு உறுதுணையாக அமையும் மூன்று திட்டங்களைக் பரிந்துரைக்க.
**தனியாள் ஆய்வு :** அனைவருக்கும் கல்வி திட்ட மையங்களை பார்வையிட்டு அதன் பணிகள் குறித்து ஆய்வு செய்க.

## 6.7 மதிய உணவு திட்டமும் அதில் அனைவருக்கும் கல்வி திட்டத்தில் அதன் பங்களிப்பும்

ஒவ்வொருவரின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை தன்னிறைவு பெற செய்யும் ஊக்கியாக இருப்பது கல்வியாகும். கல்வியின் முக்கிய நோக்கமானது குழந்தைகளை உடல்ரீதியாக, மனரீதியாக மற்றும் ஆன்மா ரீதியாக தரமான வாழ்வை வாழத் தயார் செய்வதாகும். மேலும் அன்றாட வாழ்வில் எழும் பிரச்சினைகளை கையாளும் விதமான திறன்களையும், நுணுக்கங்களையும் பெறவும் எதிர்வரும் சூழலை திறம்பட கையாளவும் உதவும் செயல்முறையே கல்வி ஆகும்.

அனைவருக்குமான கல்வியின் குறிக்கோள்களை அடைவதில் நான்கு முக்கிய காரணிகள் இடம்பெறுகின்றன. அவை கல்வியை பெற விழைதல்; குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், குழந்தைகளை பள்ளியில் தொடர்ந்து கற்க செய்தல் மற்றும் கற்றல் அடைவு பெறச் செய்தல்.

இந்த நான்கு நோக்கங்களை அடைய உறுதுணையாக அமையும் திட்டமே மதிய உணவு திட்டமாகும்.

இந்திய அரசால் கொண்டுவரப்பட்ட வெவ்வேறு திட்டங்களால் பயன்பெறாத குழந்தைகளுக்கும் கல்வி கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

குறிப்புகள்

அதிலும் தொடக்கக் கல்வியினை அனைவருக்கும் கொண்டு செல்லும் திட்டமே அனைவருக்கும் கல்வி திட்டம் ஆகும். இருப்பினும் சில குழந்தைகள் தங்கள் குடும்ப பொருளாதாரச் சூழல் மற்றும் வருவாய் ஈட்டா பெற்றோரின் இயலாமையாலும் தொடக்கக் கல்வியை பெற முடிவதில்லை. இம்மாதிரியான பெற்றோர்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பினால் கூடுதல் வருவாய் சுமை என்று கருதுவதும் மட்டுமன்றி, அக்குழந்தையின் உழைப்பால் சம்பாதிக்கும் பணத்தையும் இழக்கிறோம் என கருதுகிறார்கள்.

இத்தகைய மனநிலையை உடைய வருவாயில் பின்தங்கிய குழந்தைகளின் பெற்றோர்களை ஊக்கப்படுத்தியும், குழந்தைகளக்கு ஆரோக்கியமான உணவை அளிப்பதோடு தேவைகளை நிறைவு செய்வதை உணர்த்தியும் அக்குழந்தைகளை பள்ளிக்கு வரவழைக்க இயலும்.

1995ஆம் ஆண்டு அக்டோபர் 2இல் இந்திய அரசால் கொண்டு வரப்பட்ட திட்டமே தொடக்கக்கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து திட்டம் ஆகும். இதனை மதிய உணவு திட்டம் எனவும் அழைக்கிறோம். இத்திட்டத்தின் கீழ் 80% வருகைபுரியும் ஒவ்வொரு தொடக்க நிலை குழந்தைக்கும் மாதம் ஒன்றிற்கு 3 கிலோ கோதுமை (ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு) வழங்கப்படுகிறது. இதற்கிடையில் உச்சநீதிமன்றம் தலையிட்டு அனைத்து மாநிலங்களும்/யூனியன் பிரதேசங்களும் இந்த மதிய உணவு திட்டத்தை அமல்படுத்தவும், இதனால் அரசு, அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் 300 கலோரி சக்தியும், 8-12 கிராம் புரதமும் கொண்ட உணவை குறைந்தது 200 நாள்கள் வழங்க 28 நவம்பர் 2001இல் ஆணையாகப் பிறப்பித்தது.

டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் இத்திட்டத்தினை 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விரிவுபடுத்தினார். தமிழ்நாடு மதிய உணவு திட்டமானது நாட்டிற்கே முன்மாதிரி திட்டமாக அமைந்துள்ளது. ஆனால் 1930 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே பாண்டிச்சேரியில் அனைவருக்கும் பள்ளியில் உணவு வழங்கும் திட்டம் ஆர்வத்தைத் தூண்டும் வரலாறாக அமைந்துள்ளது.

இந்த மதிய உணவுத்திட்டம் என்ற கருத்து காமராஜருக்கு எப்படி ஏற்பட்டது என்பது ஒரு ஆர்வமூட்டும் நிகழ்ச்சியாகும். அவர் சில ஆண் குழந்தைகள் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்ததை பார்த்தார். அவர்களுள் ஒரு சிறுவனை பார்த்து காமராஜர் "மாடுகளோடு என்ன செய்கிறீர்கள்? ஏன் பள்ளிக்கு செல்லவில்லை? எனக் கேட்டார். அதற்கு ஒரு சிறுவன் "நாங்கள் பள்ளிக்கு சென்றால், நீங்கள் சாப்பாடு போடுவீர்களா? நான் சாப்பிட்டால் தானே படிக்க முடியும்" என்றான். அச்சிறுவனின் பதிலால் உதயமானதே மதிய உணவுத் திட்டம் ஆகும்.

குறிப்புகள்

இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களும் இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. அதிலும் 1980களிலிருந்து சிறப்பாக செயல்படும் மாநிலமாக குஜராத் உள்ளது.

1995களிலிருந்து கேரளா அரசு சமைத்த உணவை பள்ளிகளில் வழங்குகிறது. மேலும் ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்கள் உணவு பொட்டலங்களை வழங்குகின்றன.

2001, நவம்பர் 28ல் உச்சநீதிமன்றம் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் குழந்தைகளுக்கு சமைத்த உணவு வழங்க உரிய நெறிமுறைகளை வகுத்தது. இவ்வழிகாட்டலை முதலில் மாநிலங்கள் எதிர்த்தாலும், 2005இல் இருந்து பெரும்பாலும் ஏற்றுகொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மதிய உணவு திட்டத்திற்கு http:///mdm.nic.in என்ற புதிய இணையதளத்தை இந்திய அரசு தற்போது உருவாக்கி உள்ளது.

## தொடக்கக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து திட்டம்

## (National programme for Nutrition Support to Primary Education)

இத்திட்டம் முதலில் தமிழ்நாட்டில் “மக்களுக்கான செயல்” (Populism) என அழைக்கப்பட்டாலும் இதன் வெற்றியானது இத்திட்டத்தை பெரிய அளவில் பிரபலப்படுத்தியது. 1995இல் இது குறிப்பிடத்தக்க அளவில் பெரிய வெற்றியை பெற்றது. இதனையடுத்து இத்திட்டத்தினை இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவ் அவர்கள் ஆலோசனைப்படி நாடு முழுமைக்கும் தொடக்கக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து திட்டம் என்ற பெயரில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மைய அரசு, தானியங்களை இலவசமாகவும் மற்றும் மாநில அரசுகள் இதர பொருட்கள், மாத சம்பளம் மற்றும் கட்டிட வசதிகள் போன்றவைகளையும் தருகின்றன. பெரும்பாலான மாநிலங்கள் தங்கள் நிதி ஒதுக்கீட்டில் தானியங்களுக்கென்று நிதி ஒதுக்க விருப்பமில்லை என்றாலும் இந்திய அரசு வழங்கும் தானியங்களை பெற்றோர்களுக்கு கொண்டு செல்ல நினைத்தன. இத்திட்டம் ‘உலர் உணவு வழங்கல்’ என அழைக்கப்பட்டது. நவம்பர் 28, 2001ல் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி மாநில அரசுகள் உணவுப் பொருள்களை உலர் உணவு பொருள்களாக வழங்குவதற்கு பதிலாக சமைத்து வழங்க வேண்டும் என ஆணையிட்டது. ஜூன் 2002இல் இவ்வழிகாட்டல் நிறைவேற்றப்பட்டாலும், பெரும்பாலான மாநிலங்கள் இதை நிறைவேற்றாமல் தவிர்த்தன. இருப்பினும் நீதிமன்றம் ஊடகங்கள் குறிப்பாக உணவு உரிமை முகாம் போன்றவைகளின் தொடர்ச்சியான

குறிப்புகள்

வலியுறுத்தலினாலும் பெரும்பாலான மாநிலங்கள் உணவை சமைத்து வழங்க ஆரம்பித்தன.

மே 2004இல் அமைந்த புதிய மையக் கூட்டணி, அனைவருக்கும் சமைத்த உணவை அளிப்பதற்கான செலவை மத்திய அரசே ஏற்கும் என உறுதியளித்தது. இந்த குறைந்தபட்ச பொதுத்திட்டத்ம் சமைப்பதற்கும் சமையலுக்கு தேவையான கட்டிடத்திற்கும் உரிய நிதியை மாநில அரசுகளுக்கு உயர்த்தி வழங்கியது. இத்தகைய கூடுதல் உதவிகளால் இந்தியாவில் உள்ள தொடக்கப் பள்ளி குழந்தைகள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

2005களில் 130 மில்லியன் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

## 6.8 அனைவருக்கும் கல்வி திட்டமும் குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009ன் ஒத்திசைவும்

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டமானது ஏப்ரல் 1, 2010ல் நடைமுறைப் படுத்தப்பட்டது. இது 6 முதல் 14 வயது வரையிலான அனைத்து குழந்தையின் 8 ஆண்டு கல்வியினை வயதுக்கேற்ற வகுப்பு மற்றும் அருகாமை பள்ளியில் முடிப்பதற்கு வழிவகை செய்யும் சட்டமாகும். இத்துணை அலகை படித்த பிறகு நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை:

### ஒத்திசைவின் நோக்கங்கள்

- குழந்தைகளின்பால் பள்ளி ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்களின் மனப்பான்மையை சிறப்புத் தேவையுடைய மதிப்பிடுதல்.
- ஒருங்கிணைந்த கல்வி அமைப்பில் சிறப்புத் தேவை உடைய குழந்தைகளை கையாள்வதில் ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் பெற்றுள்ள/பெற வேண்டிய திறன்களை மதிப்பிடுதல்.
- ஒருங்கிணைக்கப்பட்ட சிறப்பு குழந்தைகளின் பால் இயல் பான குழந்தைகளின் மனப்பான்மையை மதிப்பிடுதல்.
- சிறப்பு தேவையை உள்ளடக்கிய வகுப்பறை சூழலை கையாளும் ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் பெற வேண்டிய மற்றும் பெற்றிருக்கும் விழிப்புணர்வுக்கும் மனப் பான்மைக்கும் இடையேயான தொடர்பை கண்டறிதல்.

குறிப்புகள்

- அறிவியல் மனப்பாங்கை வளர்த்தல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறனை அதிகரித்தல், படைப்பாற்றலைத் தூண்டுதல் மற்றும் அன்றாட சூழலில் எழும் பிரச்சினைக்கு தீர்வு காணல்.
- குழந்தைகளின் கற்றல் இடர்பாடுகளை களையவும், கல்விசார் பணியில் சிறப்பாக செயல்படும் வகையிலான பயிற்சியினை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்குதல்.
- தொடக்க நிலையில் குழந்தைகள் பள்ளியிலிருந்து இடை நிற்பதற்கான சமூக பொருளாதார காரணங்களை பகுத்தராய்தல்.
- தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலையில் பயிலும் பெண் குழந்தைகளின் சேர்க்கை, இடைநிற்றல் தக்கவைத்தல் ஆகியவற்றை மதிப்பிடுதல்.
- மாணவர் சேர்க்கையை பாதிக்கும் பொருளாதார மற்றும் மக்கள்தொகை காரணிகளை மதிப்பிடுதல்.
- பயிற்சி சார்ந்து SSA-திட்டத்தினால் வழங்கப்படும் நிதி மற்றும் செயல்முறையினை மதிப்பிடுதல்.

தொடக்க மற்றும் உயர் தொடக்க பள்ளிகளில் குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி சட்டம் அமல்படுத்த துறை சார்ந்த அதிகாரிகள் எவ்வாறு திட்டமிடுவது?

அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட விதிமுறைகளின்படி குழந்தையின் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை உறுதி செய்யப்படுகிறது. அரசின் விதிமுறைப்படி 300 பேர் மக்கள்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு கிலோ மீட்டருக்குள் ஓர் அரசு தொடக்கப் பள்ளியும், 800 மக்கள்தொகை கொண்ட கிராமத்திற்கு இரண்டு கிலோ மீட்டருக்கு ஒரு உயர் தொடக்கப் பள்ளியும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தற்போது அடிப்படை கல்வித்துறை சார்ந்த துறை பதிவுகளிலிருந்து ஒரு மாவட்டத்திற்கு 1032 தொடக்கப் பள்ளிகளும் 352 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. இவை மட்டுமின்றி 780 இதர அங்கீகரிக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளும் 577 உயர் தொடக்கப் பள்ளிகளும் மாவட்டத்தில் உள்ளன. இவற்றை கூட்டினால் மாவட்டத்திற்கு 1812 தொடக்கப் பள்ளிகளும் 923 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. SSA-வின் விதிமுறைப்படி 31,38,671 (2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு) மக்கள்தொகை கொண்ட மாவட்டத்திற்கு 10,462 தொடக்கப் பள்ளிகளும், 3,923 உயர் தொடக்கப் பள்ளிகளும் இருத்தல் வேண்டும். மேலும் பல தனியார் பள்ளிகள், அரசு சாரா பள்ளிகள், மதராஸ் போன்ற பள்ளிகள் மாவட்டந்தோறும் அமைந்திருக்கின்றன.

குறிப்புகள்

அனைவருக்கும் கல்வி திட்டமானது மைய அரசின் முதன்மை திட்டமாகும். அத்திட்டமானது 2001 முதல் குறிப்பிட்ட காலத்திற்குள் அனைவருக்கும் தொடக்க கல்வியினை அளிக்கும் நோக்கத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அரசின் இணைந்து நாடு முழுமைக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பல்வேறு அணுகுமுறைகளால் பள்ளி செல்லா குழந்தைகளை பள்ளிக்குள் கொண்டு வருவதும் 6 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் 8 ஆண்டு பள்ளிப்படிப்பை முடிக்கவும் வழிவகை செய்வதாகும். தேவையான பயனுள்ள வகையிலான தொடக்கக் கல்வியினை 6-14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைக்கும் 2010ஆம் ஆண்டிற்குள் அளிப்பதே இதன் நோக்கமாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டம், 86வது சட்டத்திருத்தத்தில் கல்வியானது ஒரு அடிப்படை உரிமை என கூறப்பட்டுள்ளது. இத்தகைய வலியுறுத்தல்களினாலும் ஏப்ரல் 1, 2010இல் குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டம் 2009யை நடைமுறைப்படுத்தியதாலும், அனைத்து குழந்தைகளும் பள்ளியில் இருப்பது நிறைவு செய்யப்பட்டுள்ளது.

6 முதல் 14 வயதிற்குட்பட்ட பல குழந்தைகள் பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர். டிசம்பர் 1996லிருந்து உத்திரப் பிரதேசத்திலுள்ள வாரணாசி, சண்டௌலி, ஜானுபூர், காசிபூர் போன்ற மாவட்டங்களிலுள்ள அபாயகரமான, அபாயகரமற்ற தொழிற்சாலைகளிலிருந்து 5000க்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்துறை சார் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய குழந்தை தொழிலாளர் தடுப்புச் சட்டத்தின்கீழ் 70க்கும் மேற்பட்ட குழந்தை தொழிலாளர்களுக்கான பள்ளிகள் வாரணாசியில் இயங்குவதாகவும், 30 பள்ளிகள் ஜான்பூரிலும், 20 பள்ளிகள் காசிபூரிலும் நடைபெறுவதாக உத்திரப்பிரதேச கூடுதல் குழந்தை தொழிலாளர் ஆணையர் டி.கே.காஞ்சன் கூறுகிறார். மேலும் ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கு 50 குழந்தைகளுக்கு கல்வி அளிக்கின்றது.

தேசிய அளவில் அனைத்திந்திய கல்விசார் கணக்கெடுப்பின்படி நாடு முழுவதுமுள்ள 3,878 நகர்ப்புற மையங்கள் அல்லது பகுதிகளில் வாழும் மக்கள்தொகை 190.5 மில்லியன் ஆகும். இவர்கள் குறைந்தபட்சம் 4 முதல் 5 ஆண்டுக் கல்வியை 74,656 பள்ளிகள் மூலம் பெறுகின்றனர். இது 2500 மக்கள் தொகைக்கு ஒரு தொடக்கப் பள்ளி என்பதை குறிக்கிறது. 12 லட்சத்திற்கும் மேற்பட்ட 5 முதல் 14 வயதிற்குற்பட்ட குழந்தைகள் இன்றளவும் கட்டுமானப் பணிகள், உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் போன்ற மிகவும் ஆபத்தான தொழில்களை இந்தியா முழுவதிலும் மேற்கொண்டு வருகிறார்கள்.

குறிப்புகள்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்டத்தின் விளைவானது, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் நோக்கங்கள், உத்திகள் மற்றும் விதிமுறைகள் உடன் ஒத்திசைந்து செல்கிறது எனலாம். இதனடிப்படையில் மனிதவள மேம்பாட்டு ஆணையமானது ஸ்ரீஅனில் போர்டியா, முன்னாள் கல்வி செயலர், இந்திய அரசு தலைமையில் குழு அமைக்கப்பட்டு, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் வாயிலாக SSA-வின் செயல்களை ஒன்றன்பின் ஒன்றாக செயல்படுத்த அறிவுரை வழங்கியது.

இந்த குழுவின் முதல் அமர்வில், 'மனிதவள மேம்பாட்டு ஆணையம் சார்பாக குழந்தைகளுக்கான இலவச கட்டாயச் கல்வி உரிமைச் சட்டம் 2009யை நடைமுறைப் படுத்துவதற்கான பரிந்துரைகளை மீறாமல் செயல்படுத்த குழுவிடம் வலியுறுத்தப் பட்டது.

## 6.9 தொகுப்புரை

அலகு 6 ஆனது அனைவருக்கும் கல்வி திட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு அனைவருக்கும் தொடக்கக் கல்வி பெறுவதற்கான உத்திகளை வரையறை செய்கிறது.

மேலும் அது முதலில் SSA-வின் இன்றியமையாத அம்சங்கள் குறித்தும் பிறகு SSA-வின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் குறித்தும் வரையறுக்கிறது. இந்த அலகானது SSA-வின் செயல் உத்திகளையும் விரிவாக விவாதிக்கிறது.

அனைவருக்கும் கல்வி திட்டத்தில் தனியார் பொதுத்துறை பங்களிப்பு மற்றும் சிறப்பாக செயல்படுத்துவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. பள்ளி மற்றும் பள்ளி சார்ந்த தேவைகள் வழங்குதல் குறித்தும் இதன் மூலம் சேர்க்கை அதிகரிப்பு சேர்ந்த குழந்தைகளை பள்ளியில் தக்கவைத்தல் மற்றும் 14 வயதிற்குட்பட்ட எந்த குழந்தையும் பள்ளிக்கு செல்லாமல் இல்லை என்பதை உறுதி செய்வது குறித்தும் விவாதிக்கிறது. மதிய உணவு திட்டத்தின் தேவைகள் முக்கியத்துவங்கள் குறித்தும் இவ்வலகு விவாதிக்கிறது. இறுதியாக குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ல் கூறப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வி திட்டத்தின் ஒத்திசைவையும் விவாதிக்கிறது.



குறிப்புகள்

## 6.10 பரிந்துரைக்கப்படும் நூல்கள் மற்றும மேற்கோள் நூல்கள்


- Bhuamika: A Hand Book on Roles & Responsibilities of Head Master/ Head Teachers under SSA Bihar A. Guide Book for Early Child Care.
- www.educationforallindia.com
- www.indianexpress.com/news/lesson-learnt-mp-monitors-ss
- depssa.ignou.ac.in/wikei/index.php/publications.


## 6.11 அலகு இறுதி பயற்சி செயல்பாடுகள்

1. *அனைவருக்கும் கல்வி திட்டத்தின் அடிப்படை அம்சங்கள் யாவை?*
2. *உங்கள் பகுதியில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் சார்பில் 6 முதல் 14 வயது வரை பயிலும் மாணவர்கள் விவரங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை தயாரிக்க.*

குறிப்புகள்

# அலகு 7 அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான திட்டமிடல் மற்றும் மேலாண்மை

## அமைப்பு

7.0 அறிமுகம்

7.1 கற்றல் நோக்கங்கள்

7.2 பரவலாக்கப்பட்ட தொடக்கக் கல்வி மேலாண்மை முறை

7.2.1 மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட அமைப்பு

7.2.2 பரவலாக்கலில் இந்தியாவின் அனுபவம்

7.3 நுண்ணிலைத் திட்டமிடல்

7.3.1 திட்டமிடல் என்றால் என்ன?

7.3.2 நுண்ணிலைத் திட்டமிடல்

7.3.3 நுண்ணிலைத் திட்டமிடல் செயல்முறையில் சமூகத்தை ஈடுபடுத்துவதற்கான படிநிலைகள்

7.4.4 DEO, DRC (DIET), BEOs, BRCs மற்றும் CRCs-ன் பங்குகளும் பொறுப்புகளும்

7.3.4.1 பள்ளிகளில் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை

7.4 தொடக்கக் கல்வி மேலாண்மை மற்றும் நிர்வகித்தலில் உள்ள இடர்ப்பாடுகள்

7.4.1 நிர்வகித்தல் தொடர்பான பிரச்சினைகள்

7.4.2 ஆசிரியர்களை பணியமர்த்தலும், மேலாண்மையும்

7.4.3 பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு

7.5 பள்ளி மேலாண்மை மற்றும் குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009

7.6 சிறந்த மேலாண்மை மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சியின் கூட்டிணைவு

7.6.1 அனைவருக்கும் தொடக்கக் கல்வி மேலாண்மைக்கான தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள்

7.6.2 பள்ளி வலைப்பின்னல் என்றால் என்ன?

7.6.3 பள்ளி வலைப்பின்னல் செயல்பாடுகள்

7.6.4 பள்ளி வலைப்பின்னல் என்பது கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு

7.7 நிதி அமைப்பு முறை

7.8 தொகுப்புரை

7.9 பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் மேற்கோள் நூல்கள்

7.10 அலகு இறுதி பயிற்சி செயல்பாடுகள்

## 7.0 அறிமுகம்

குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009ல் அனைத்து குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி என்பது ஓர் அடிப்படை உரிமை என்பதை அலகு 5 மற்றும் அலகு 6ல் நீங்கள் படித்திருக்கிறீர்கள். அனைவருக்கும் தொடக்க கல்விக்கான உத்திகளில் இவை விளக்கப்பட்டுள்ளன. ஓர் ஆசிரியராக நீங்கள் காகிதத்தில் உள்ள சட்டத்தினை செயல்படுத்துவதில் முக்கியமான பங்கு வகிக்கிறீர்கள். பள்ளியில் உள்ள கல்வியை பாதியில் விட்டுச் சென்ற மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர், பழங்குடியினரின் (SC, ST) குழந்தைகள், சமுதாயத்தில் சிறுபான்மையினர் பிரிவில் உள்ள குழந்தைகள், இடம்பெயர்ந்த குடும்பங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் குழந்தை தொழிலாளர்கள் ஆகியோரை பள்ளிக்கு வரவழைத்து கல்வி கற்க தற்போது அரசு அனைத்து முயற்சியையும் செய்து வருகிறது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். மேலே குறிப்பிடப்பட்ட பல குழந்தைகள் பள்ளியில் சேரவில்லை அல்லது பல்வேறு சூழ்நிலைகளில் பள்ளியிலிருந்து இடைநின்ற குழந்தைகள் ஆவர்.

அலகு 4 மற்றும் அலகு 5ல் விவாதிக்கப்பட்டுள்ளபடி சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கும், அனைத்து நிலைகளிலும் உள்ள குழந்தைகள் கல்வி பெறச் செய்வதற்கும் அரசாங்கம் இத்திட்டத்தை விரிவுப்படுத்தியுள்ளது. ஓர் ஆசிரியராக நீவிர் சட்டத்தையும் அரசாங்க நெறிமுறையையும் பயன்படுத்தி எவ்வாறு ஒரு குழந்தை எந்த சூழலில் இருப்பினும் தன் உரிமையான கல்வியைப் பெற உதவமுடியும் என்பதை இந்த அலகு விவரிக்கிறது. இதற்கு தேசிய, மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிராம

அளவில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி எவ்வாறு செயல்படுகிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது உங்கள் பள்ளிகளுக்கு/ நிறுவனத்துக்கு தேவையான வளங்களைப் பெற என்னென்ன வழிமுறைகளை கையாள வேண்டும் என்பதை தொடர்பு கொள்ள வேண்டும் போன்றவற்றை அறிய உங்களுக்கு உதவும்.

சிறந்த முறையில் பள்ளி மற்றும் ஊராட்சி மன்ற அளவில் பங்கேற்று முடிவெடுத்தலில் இந்த புரிதல் உங்களுக்கு உதவும்.

## 7.1 கற்றல் நோக்கங்கள்

இந்த அலகை கற்ற பின்பு நீங்கள் அறிய வேண்டியவை

- அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் பல்வேறு திட்டங் களை மதிப்பிட பல்வேறு வளங்களை அடையாளம் காணுதல், செயல்முறைகளை விவாதித்தல்.
- உங்கள் பள்ளியை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து பள்ளிக்கு வரும் குழந்தைகள் சந்திக்கக்கூடிய இடர்ப் பாடுகளை பகுத்தாய்தல்.
- உங்கள் பள்ளி அமைந்துள்ள பகுதியில் உள்ள சமூக வளங்கள் மற்றும் அப்பகுதியின் சிறப்புத்தன்மை குறித்து விவாதித்தல்.
- தொடக்கக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு ஆர்வமான, மகிழ்ச்சியான மற்றும் பொருத்தமான அனுபவத்தை அளிக்கக்கூடிய சிறப்பான செயல்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்தல்.
- நீங்கள் கற்பித்தலின் போது ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதில் பெற்றோர்கள், பள்ளி நிர்வாகம், ஊரட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளூர் தலைவர்கள், கருத்தாளர்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியோரின் பங்கு பற்றி விவரித்தல்.
- அனைவருக்கும் தொடக்கக் கல்வி நடைமுறைப் படுத்துவதில் பயன்படுத்தப்பட்ட உத்திகள் அனை வருக்கும் தொடக்க கல்விக்கான திட்டமிடல் மற்றும் மேலாண்மை சார்ந்த கட்டமைப்பிற்கு, வழிவகை செய்கிறது.
- உத்திகள் என்பது இருக்கின்ற வளங்களை சிறப்பாக பயன் படுத்தி நோக்கங்களை அடைவதற்கான வரையறுக்கப் பட்ட திட்டமிடல்.

குறிப்புகள்

## 7.2 பரவலாக்கப்பட்ட தொடக்கக் கல்வி மேலாண்மை

### 7.2.1 மையப்படுத்தப்படட மற்றும் பரவலாக்கப்பட்ட அமைப்பு

மையப்படுத்தப்பட்ட கல்வி முறையில் பெரும்பாலான முடிவுகளை எடுத்தல், கண்காணித்தல் மற்றும் மேலாண்மை செயல்பாடுகள் போன்றவற்றை தேசிய அளவில் கல்வி அமைச்சகமும், மாநில அளவில் கல்வித் துறையும் கவனமுடன் மேற்கொள்கின்றன. மைய, மாநில அரசுகள் பள்ளி கல்வி முறையின் அனைத்து கூறுகளையும் முறைப்படுத்துகின்றன. இவை கொள்கைகளை வகுத்து, மேலாண்மை செயல்பாடுகளான ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குதல், பணி முன்பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சி வழங்குதல், கலைத்திட்டத்தை உருவாக்குதல், குறைந்தபட்ச கற்றல் அடைவு போன்ற பிற செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதை மேற்கொள்கின்றன. இருப்பினும், அன்றாட பள்ளிச் செயல்பாடுகளில் ஏற்படும் சில பிரச்சனைகளுக்கு அவ்வப்போது தீர்வு காணும் அதிகாரம் அந்தந்த பள்ளி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. குழந்தைகளுடைய கல்வித் தேவைக்கு ஏற்ப பொறுப்புடன் ஆசிரியரோ அல்லது பள்ளியோ குறிப்பிட்ட அளவில் மட்டுமே பாடத்திட்டம் பாடப்புத்தகம், கற்பிக்கும் மொழியை மாற்றியமைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள இயலும்.

மாறாக, பரவலாக்கப்பட்ட அமைப்பு மைய அல்லது மாநில அல்லது மாவட்ட அளவிலான அதிகாரிகளின் சில வரையறுக்கப் பட்ட கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, தொடக்கக் கல்வியின் பல கூறுகளில் உள்ளூர்/ மாவட்டம்/கிராமம்/பள்ளி அளவில் போதுமான (கணிசமான) அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நடைமுறையில் பெரும்பாலான தொடக்கக் கல்வி அமைப்புகள் மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட கூறுகளை கொண்டுள்ளன.

பல மாநில அரசுகள் ஏற்கெனவே தொடக்கக் கல்வியை பரவலாக்கும் பணியைத் தொடங்கியுள்ளன. தொடக்கக் கல்வியை வழங்கவும் அதனை பொறுப்புடன் நடைமுறைப்படுத்தவும் ஏற்ற ஒரு மாற்று முறை பொறுப்பான அமைப்பை உருவாக்கும் வகையிலான புதிய சட்டத்தை மாநில அரசுகள் இயற்றின. சில மாநிலங்கள் தன்னார்வ அமைப்புகள் மற்றும் சமுதாயத்தோடு இணைந்தும், பங்கேற்றும் மாவட்ட அளவிலான தொடக்கக் கல்வியினை வழங்கி வருகின்றன. ஒட்டுமொத்தமாக மையப்படுத்தப்பட்ட அமைப்பு முறையிலிருந்து பரவலாக்கப்பட்ட அமைப்பிற்கு மாறுவது ஒரு மெதுவான மாற்றம் ஆகும். ஒரு நாடு பரவலாக்கப்பட்ட தொடக்கக் கல்வி என்ற இலக்கை எட்ட முடிவெடுத்தலை படிப்படியாக மாநிலத்திலிருந்து மாவட்டத்திற்கும் உபமாவட்டத்திலிருந்து உள்ளூர் அளவிற்கும் மாற்ற

குறிப்புகள்

தொடர்ந்து பாடுபட வேண்டும். குழந்தைகளின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும பொறுப்புமிக்க ஆசிரியர்கள், பள்ளிகள், உள்ளூர் அரசாங்கம் மூலம் கல்வி பயனாளியைச் சென்றடைவதை கண்டறியும் மிகப்பெரிய பொறுப்பு மாவட்ட, உபமாவட்ட அளவிலான நிர்வாகிள் மற்றும் அதிகாரிகளின் கையில் உள்ளது என்பதை பரவலாக்கப்பட்டமுறை உறுதி செய்கிறது.

பரவலாக்கப்பட்ட கல்வியின் முக்கிய நோக்கமானது தொடக்கக் கல்வியில் சமத்துவமும் உள்ளடங்கிய தன்மையை உறுதி செய்வதுமாகும். இருப்பினும், இச்சீர்திருத்தம் சரியாக திட்டமிடப் பட்டு நடைமுறைப்படுத்தாவிட்டால் இந்நோக்கம் முழுமையாக உணரப்பட மாட்டாது.

தேசிய கல்விக் கொள்கை 1986 மற்றும் அதனையடுத்து வந்த சில கல்விசார் குழுக்கள் திட்டமிட்டவாறு, மாநில அளவில் தொடக்கக் கல்வியின் தேசியக் குறிக்கோளை அடையும் செயல்முறையின் முன்னேற்றத்தை கண்காணிக்கவும் மற்றும் நிறுவனமயமாதலில் புதுமைகளை இணைந்து உருவாக்கவும் மாநில அரசானது முக்கியப் பங்கினை தொடர்ந்து செய்து வருகின்றது.

பரவலாக்கப்படுவதிலும் சில வரம்புகள் உள்ளன. தொடக்கக் கல்விக்கு நிதி அளித்தல், பொறுப்பு மற்றும் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளுதல் போன்றவை உள்ளூர் அமைப்பின் பொறுப்பு மற்றும் திறம்பட செயல்படுவதில், தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஒவ்வொரு கல்விசார் பங்குதாரர்களும் ஒருவரையொருவர் குறை கூறிக்கொண்டு, அனைவரும் தொடக்கக் கல்வி அளித்தல் என்ற நோக்கத்தை அடைவதில் பின்னடைவை காணப்படுகிறது.

தொடக்கக் கல்வியினை திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தலில் பரவலாக்கப்படல் என்ற கருத்து தேசிய கல்விக் கொள்கை 1986இன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இக்கொள்கையின் வெளிப்பாட்டை தொடக்கக் கல்வியினை நிர்வகிப்பதில் நேரடி சமூக பங்கேற்பினை கிராம கல்விக் குழு வடிவில் காண முடிகிறது. 1992ஆம் ஆண்டின் செயல் வடிவமானது, நுண்ணிலை திட்டமிடல் என்பது ஒவ்வொரு குழந்தையின் கல்விசார் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து, அக்குழந்தை தொடர்ந்து கல்வியை விருப்பமான இடத்தில் பெறவும் 8 ஆண்டுகள் பள்ளிப்படிப்பை முடிக்கவும் வழிவகை செய்கிறது என வலியுறுத்துகிறது.

குறிப்புகள்

## 7.2.2 பரவலாக்கலில் இந்தியாவின் அனுபவம்

இந்திய கல்வி முறையானது சமுதாயத்திலிருந்து விலகி தனித்து இல்லாமல், ஒருங்கிணைந்த அமைப்பாக அமைவதை அனைவரும் ஏற்கிறோம். மேலும் நமது சமூக அமைப்பானது வகுப்பு, ஜாதி, பாலினம், மதம் என பன்முகத் தன்மையைக் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிடத்தக்க பின்தங்கிய சமூகமானது வீடு, குடிநீர், கழிப்பறை வசதி, மின் வசதி, மருத்துவம் மற்றும் கல்வி போன்ற அடிப்பபடை வசதிகளின்றி வாழ்கின்றார்கள். அவர்கள் அடிப்படைக் கல்வியின்றி, தங்கள் வாழ்வில் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

73ஆவது மற்றும் 74ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் கல்வி கற்கும் சூழலில் உள்ளூர் அரசாங்கமானது முழுமையாக செயல்படுவதற்கான இணக்கமான சூழலை ஏற்படுத்தி தந்துள்ளது. இத்தகைய மாற்றம் பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் ஆகியோர் பயன்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்தது.

இதிலுள்ள இன்னபிற அனுபவங்கள் பின்வருமாறு:

- ஒருங்கிணைந்த குழந்தை முன்னேற்றத் திட்டம் 0 முதல் 6 வரையிலான வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து சாரந்து முன்னேற்றத்தில் உள்ளூர் மக்களின் முழுமையான பங்கேற்பு இன்றியமையாததாய் உள்ளதை அனுபவத்தின் வாயிலாக கண்டறிந்தது.
- தேசிய எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் ஒவ்வொரு மாவட்ட அளவிலான படிப்பறிவற்ற மக்களின் எழுத்தறிவினை முகாம் அமைத்தும் அவர்களது பங்கேற்பு மூலம் எழுத்தறிவை அதிகரித்ததோடு குறிப்பிடத்தகுந்த மாற்றத்தையும் நம்மால் காணமுடிந்தது.
- 1994 நவம்பர் மாதம் கொண்டுவரப்பட்ட மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, அரசு அனை வருக்கும் தொடக்கக் கல்வியினை நாடு முழுவதும் அமுல்படுத்த DPEP-யின் உத்திகளைப் பயன்படுத்த முடிவெடுத்தது.
- மாவட்ட அளவில் தொடக்கக் கல்வியின் வளர்ச்சிக்கு திட்டமிடும் முதன்மை பொறுப்பு ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இருப்பினும் தொடக்கக் கல்வியின் முன்னேற்ற செயல்பாடுகளை தொடர்ந்து கண் காணிக்கவும், ஒருங்கிணைக்கவும் அந்தந்த மாநில அரசுகளே பொறுப்பேற்கின்றன.

திட்டமிடல் மற்றும் மேலாண்மை உத்திகளில் மாற்றம் ஏற்பட நகர்ப்புற உள்ளூர் அரசாங்கம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவன அளவில் பணிபுரியும் கல்வித்துறை வல்லுநர்கள், நிர்வாகிகளுக்கு ஒருங்கிணைந்த பயிற்சியும் தொடர்ந்த ஆதரவும் தேவைப்படுகிறது. இறுதியாக, வெவ்வேறு மாநிலங்களிலுள்ள உள்ளூர் கல்வி நிறுவனங்கள் மற்றும் துணை நிறுவனங்களையும் திட்டமிடல் மற்றும் மேலாண்மையின் மூலம் பலப்படுத்துவதாகும்.

முன் குழந்தை பருவ பாதுகாப்பு மற்றும் கல்வியானது (ECCE) மிக அவசியமானதாகும். ஏனெனில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதன் நோக்கத்தை கட்டமைப்பதின் அடிப்படையாக ECCE (ICDS) அமைகிறது. ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு திட்டமானது (ICDS), சமுதாயத்தின் முழுமையான ஆதரவை சார்ந்துள்ளது. சமுதாய ஒத்துழைப்பின் மூலமே பள்ளி முன்பருவக் கல்வியில் இடம்பெறும் குழந்தை களின் உடல் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்த முடியும். மேலும் ICDS திட்டம் உலகளவில் வெற்றி பெற்ற திட்டமாக அமைந்ததற்கு காரணம் உள்ளூர் மக்களின் பங்கேற்பை உறுதி செய்ததே ஆகும்.

உள்ளூர் சமுதாயத்தின் முழுமையான பங்கேற்பு மற்றும் ஒத்துழைப்பை பெற பின்வருபவை அவசியமாகின்றன.

- பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள்/ஊராட்சி ஒன்றிய நிறுவனங்கள்
- பள்ளி மேலாண்மைக் குழு
- கிராமம் மற்றும் நகர்ப்புற வார்டுகள்/உள்ளூர் கல்வி குழுக்கள்
- பெற்றோர் ஆசிரியர் கூட்டமைப்புகள்
- தாய் மற்றும் ஆசிரியர் கூட்டமைப்புகள்
- பழங்குடி தன்னாட்சி மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் இன்னபிற பள்ளி சார்ந்தும், நிர்வாகம் சார்ந்தும் தொடக்கக் கல்வி மேலாண்மையில் பங்கேற்கும் அடிப்படையான அமைப்புகள்.

**உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 1**

1. பரவலாக்குதல் என்றால் என்ன?

   ..............................................................................................................

   ..............................................................................................................

2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் பரவலாக்குதல் உத்தியை பயன்படுத்துவது ஏன்?

   ..............................................................................................................

   ..............................................................................................................

குறிப்புகள்

## 7.3 நுண்ணிலை அளவிலான திட்டமிடல் (Planning at Micro Level)

திட்டமிடல் மற்றும் செயல்படுத்துவதில் ஒருவரின் பங்கேற்பில் உள்ள பின்னடைவே, பல்வேறு வளர்ச்சிசார் திட்டங்களை கொண்டு செல்வதில் தோல்வியடைவதற்கு ஒரு காரணமாக அமைகிறது. எனவே தான் எந்த ஒரு திட்டத்தைத் தயாரித்தாலும், செயல்படுத்தினாலும் அது சமுதாய பங்கேற்பினை உறுதி செய்வதாக அமைய வேண்டும் என தொடக்கக் காலத்திலிருந்தே ஐந்து ஆண்டு திட்டங்கள் வலியுறுத்தி வருகின்றன.

உள்ளூர் மக்களின் முழுமையான ஒத்துழைப்பும் பங்களிப்பும் இன்றி உண்மையான தேவையையோ உள்ளூர் வளங்கள் என்ன என்பது குறித்தோ அறிந்து கொள்வது என்பது இயலாத காரியமாகும். இதையே "பயனாளர் நிலையிலிருந்து திட்டமிடல்" அல்லது குழந்தைகளின் "நுண்ணிலைத் திட்டமிடல்" என்கிறோம்.

நுண்ணிலைத் திட்டமிடல் என்பது

(a) பயனாளியின் பங்கேற்பு, உள்ளூர் மக்களின் தேவைகளை அறிய பயன்படுத்துதல்.

(b) அளிக்கப்பட வேண்டிய உள்ளீடுகள்; செயலில் ஒத்துழைப்பு; பிறர் ஒத்துழைப்பு மூலம் புதிய வளங்களைப் படைப்பது போன்றவற்றின் மூலம் போதுமான வளங்களை உருவாக்குதல்.

(c) இருக்கும் வளங்களைக் கருத்தில் கொண்டு கிராமத் திட்டத்தை தயாரித்தல்.

### 7.3.1 திட்டமிடல் என்றால் என்ன?

திட்டமிடல் என்பது பொதுவாக

- பரிந்துரைக்கப்படும் செயல்கள் அல்லது செயல்பாடுகளின் தொகுப்பின் ஒரு குறிப்பிட்ட வரிசைக் கிரமத்தைக் கொண்டு மக்களின் தேவையை/தேவையான நோக்கங்களைப் படிப்படியாக அடைதல்.
- திட்டமிடல் என்பது செயல்முறையினை அடையாளங்கண்டும், புதியதொரு உத்தியினை கண்டறிந்தும் ஒட்டுமொத்த இலக்கை அடைவதாகும்.
- திட்டங்கள் மற்றும் உத்திகளை செயல்படுத்த வளங்களை திரட்டுதல், செயல்முறையை கண்காணித்தல் மற்றும் விளைவை மதிப்பிடுதல்.

குறிப்புகள்

## 7.3.2 நுண்ணிலைத் திட்டம் (Micro Planning)

ஒவ்வொரு பள்ளியும் தன் வாழ்விடத்திலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும். அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வியினை பெறும் வகையில் வாழிடத்தில் உள்ள மக்கள் பொறுப்பேற்க வேண்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய ஆசிரியரால் மட்டுமே முடியாது. சமூக அங்கத்தினர்களான மகளிர் குழுக்கள், கிராமக் கல்விக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் போன்றோரின் பங்களிப்பும் அவசியம்.சமூக அங்கத்தினர்களின் (Stake holders) துணையோடு வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகத்தினரை உள்ளடக்கிய அனைத்து குழந்தைகளும் தரமான தொடக்கக் கல்வி பெற உறுதி செய்தல் வேண்டும்.

## 7.3.3 நுண்ணிலைத் திட்டமிடலில் சமுதாயத்தினர் பங்கேற்பதற்கான படிநிலைகள்

நுண்ணிலை திட்டமிடலில் சமுதாயத்திலுள்ளவர்களை பங்கேற்கச் செய்வதற்கான படிநிலைகள் பின்வருமாறு:

## I. சமூகத்திற்கு அதிகாரமளித்தல்

- கிராம கல்விக்குழு, பள்ளி மேலாண்மைக் குழு, தாய் ஆசிரியர்கள் கழகம்.. போன்ற அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு குழந்தைகளின் தொடக்கக் கல்வி பெறுவதற்கான உரிமைசார் சிக்கலை கண்டறியவும், தீர்வு காணும் வகையிலான பயிற்சிகளை அளித்தல்.
- குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன் சிறப்பம்சங்கள், அதில் ஒவ்வொருவரின் பங்கு மற்றும் கடமைகள் குறித்தும், அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதில் அரசின் முயற்சிகள் குறித்தும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல்.

## அரசின் செயல்பாடுகள்

- மீனா முகாம்கள்
- மா பெட்டி மேளா (Maa Beti Mela)
- மகிளா சன்மேலன்
- கிஷோரி மேளா
- பால், சிசு மேளா

குறிப்புகள்

- பிரபாத் பெரிஸ்
- சேர்க்கைப் பேரணி

• சமூக அங்காடிகள், வாராந்திர சந்தைகளில் கலாச்சார நிகழ்ச்சிகள்/வீதி நாடகங்களை பின்வரும் குறிப்பிடத்தக்க பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தி நிகழ்த்தி சேர்க்கை அதிகரிப்பு, இடைநிற்றல் குறைத்தல், பிற பள்ளியில் சேர மாற்றுச்சான்று பெறுதல், பெண் கல்வி ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / பிற பின்தங்கிய வகுப்பினர் போன்ற நலிவுற்ற பிரிவினருக்கான முறையார்ந்த உரிமை பெறுதல், நாடோடி / நாட்டுப்புற வாழ்க்கை மேற்கொள்ளும் பிரிவினருக்கான உரிமை பெறுதல் போன்றவற்றை உறுதிசெய்தல்.

## II. திட்டமிடும் குழுக்களை அடையாளங்காணல்

திட்டமிடலுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் தலைமையாசிரியரோ அல்லது அரசு உயரதிகாரியோ மட்டுமே பெற்றிருக்க வேண்டியதில்லை. அனைவரும் தொடக்கக் கல்வி வழங்குதலின் கோணத்திலும் ஒவ்வொருவரும் சிந்தித்து முதன்மை திட்டமிடல் குழுக்களை நியமித்தல் வேண்டும். சமுதாயம் பள்ளியில் தமது சொந்த பொறுப்பை / பங்களிப்பை உணர்ந்து பள்ளியின் நோக்கங்களை உருவாக்குதலையும் எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று முடிவெடுத்தலையும் மேற்கொள்ள வேண்டும். இதில் முதன்மை திட்டமிடல் குழுவை ஈடுபடுத்துவதால் இத்திட்டமிடல் சட்ட பூர்வமானதாக அமைகிறது.

• ஒவ்வொரு வாழிடத்திலிருந்தும் முதன்மை திட்டமிடல் குழுவிற்கான உறுப்பினர்களைக் கண்டறிய சமூகம் மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட குழுக்களுக்கு வாய்ப்பு அளித்து இடைவினையாற்றல் வேண்டும். அதில் சிலர் கல்வியறிவு பெற்றவராகவோ, அரசியலில் பங்கேற்பவராகவோ, கருத்துகளில் ஆர்வமும் உடைய இளைஞர்களாகவோ, தன் திறமையை வெளிப்படுத்த ஆர்வம் உள்ளவர்களாகவோ, சிறந்த திறமிக்க பெண்களாகவோ, வேலையில்லா படித்த சிறுபான்மையினராகவோ இருப்பர் அவர்களின் பங்களிப்புகள்:

• சமுதாயத்தை பள்ளிகளுடன் இணைக்கவும், மேம்படுத்தவும் உதவுதல்.

• பள்ளியிலிருந்து இடைநிற்றல், இடம்பெயர்வு, விலகுதல் போன்றவற்றை சமுதாய உதவியோடு தடுத்தல்.

- உள்ளடங்கிய கல்வியில் சமுதாய பங்கேற்பாளர்களின் கருத்து கேட்டு கல்வியளித்தல்.



முதன்மை திட்டமிடல் குழுவில் இடம்பெறுபவர்களை கவனத்துடன் தேர்ந்தெடுத்தல் வேண்டும். ஏனெனில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோமோ அதை ஏற்றுக்கொள்ளாத ஒருவரும் குழுவில் இடம்பெற வாய்ப்பு உண்டு.

அவர்களுள் சிலர் குரல் உயர்த்தியும், ஆதிக்கம் செலுத்துபவராகவும் மற்றும் பிறரிடம் கருத்தை திணிப்பவராகவும் இருக்கலாம். இக்குழுவில் உள்ளோரில் சிலர் எதிர்பார்ப்பின் அளவிற்கு இல்லாவிடினும், ஆசிரியருக்கும், உள்ளடங்கிய தொடக்கக் கல்வியினை வழங்க பள்ளிக்கும், உள்ளூர் நபருக்கும் உதவியாக இருக்கலாம். இது அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வி பெற ஒவ்வொருவரின் ஒத்துழைப்பைக் குறிக்கிறது. பொதுவாக முதன்மை திட்டமிடல் குழுவானது சமூகத்தில் அனைத்து பிரிவு பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

## III முதன்மை திட்டமிடல் குழுவிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

தரமான திட்டமிடல் பயிற்சியும், திட்டங்களும் முதன்மை திட்டமிடல் குழுவின் திறனை சார்ந்ததாகும். உத்தேசிக்கப்பட்ட திட்டம் மாவட்ட அளவில் செயல்படுத்த தக்கதாக அமைய வேண்டும். ஒட்டுமொத்த திட்டமிடல் செயலானது, அனைத்து கல்விசார் வளர்ச்சியினை கருத்தில் கொண்டும், தனிநபரின் அல்லது குழுவின் விருப்பு வெறுப்புகளை களைந்த பங்கேற்றலாக அமைதல் வேண்டும். இந்தத் திட்டமிடலானது வெவ்வேறு துறைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் அத்திட்டங்களை ஒருங்கிணைத்து தம் திட்டத்தில் பயன்படுத்தும் அறிவினைப் பெற்றதாக அமைய வேண்டும். முதன்மை திட்டமிடல் குழுவில் பெரும்பாலான உறுப்பினர்கள் அனுபவமின்றி இருப்பினும், திட்டம் தீட்ட, செயல்முறையை வகுப்பதில் பங்காற்றுவதற்கான அறிவினைப் பெறுதல் அவசியமாகும்.

இவர்கள் அதே பகுதியில் பலகாலம் வாழ்பவராக இருப்பினும் தம் சொந்தப் பகுதிக்கான பொது முடிவெடுத்தலில் பலர் முதல் முறையாக பங்கேற்பவராக இருக்கலாம்.

முதன்மை திட்டமிடல் குழுவானது பள்ளி வளர்ச்சி திட்டத்தை தொகுத்து, கிராமக் கல்வி முன்னேற்றத் திட்டத்தினை தயாரித்தல் வேண்டும். இக்குழு பள்ளியின் தேவையை கிராமத்திலிருந்தும், கிராமத் தேவையை ஒன்றியத்திலிருந்தும், ஒன்றியத் தேவையை மாவட்டத்திலிருந்தும் பெற்று

வழங்க வேண்டும். இரண்டு முதல் மூன்று அமர்வு கொண்ட பணிமனைகள் மூலம் SSA-வின் நோக்கங்கள், இலக்குகள், விதிமுறைகள் குறித்து அறியவும், திட்டமிடல் வரைவுக்கான தகவல்களைச் சேகரிக்கவும், செயல்பாட்டை கண்காணிக்கவும் நடத்தப்பட வேண்டும். ஒன்றியம்/குறுவள அளவில்/ மாவட்ட அளவில் உள்ள வல்லுநர்களின் அனுபவங்களை பயன்படுத்தி கொள்ளவும் அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

## IV. இடைவினையாற்ற வேண்டிய பிரச்சினைகளை அடையாளங்காணுதல் (Identification of issues requiring invention)

எளிதில் பள்ளியைச் சென்றடைதல், பள்ளியில் குழந்தைகளை சேர்த்தல், தக்கவைத்தல் மற்றும் தரமான தொடக்கக் கல்வி வழங்குவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளை கிராம அளவில், இருப்பிட அளவில், ஒன்றிய அளவில் அல்லது மாவட்ட அளவில் அடையாளங்கண்டு தீர்விற்கு வழிவகை செய்யப்பட்டதா என்பதை அறிந்துகொள்வது அடுத்த படிநிலையாகும்.

அவை

- நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகள்
- தேவையான கொள்கைசார் மாற்றங்கள்
- விதிமுறைகளை மாற்றுதல்/மேலும் நெறிப்படுத்துதல்
- ஒருங்கிணைந்த முறையில் பிரச்சினைக்கு தீர்வு காணல்
- மாவட்ட மற்றும் மாநில அதிகாரிகளின் உதவியைப் பெறுதல்

இந்த நிலையில் தங்கள் பள்ளிக்குத் தேவையான வளங்களை அவசரமாக பெறும் பொருட்டு பள்ளிகள், கிராமங்கள், வட்டாரங்கள் மற்றும் மாவட்டங்கள் தங்கள் பகுதியில் அவை எதிர்கொண்ட பிரச்சனைகள் மற்றும் சவால்களை முன்னிலைப்படுத்தி வெளிப்படுத்த தீவிர போட்டியை தங்களுக்குள் நிகழ்த்தலாம். இதற்கு கல்வி முன்னேற்றத் திட்டத்தின் போதுமான தெளிவான தரவுகளின் அடிப்படையில் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். சில சமயம் மாவட்டங்களுக்கு இடையேயான திட்டமிடல் பணிமனைகளில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்யலாம். இது பிரச்சனைகளை கண்டறியவும் தகுந்த தீர்வு முறையை கற்கவும் வழிவகுக்கும்.

## V. தரவு தேவைகள் (ம) தரவுகளின் மூலங்கள்

அனைத்து திட்டங்களும் குறிப்பிட்ட இலக்கினை அடைய காலக்கெடு மற்றும் தெளிவான கட்டாயத்தினை பெற்றுள்ளன. குழந்தைகளுக்கான

குறிப்புகள்

இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் (R.T.E) குறிப்பிடப்பட்டுள்ளபடி அனைத்து குழந்தைகளும் எட்டு ஆண்டுகள் தொடக்கக் கல்வியினை பூர்த்தி செய்ய கீழ்க்காணும் தகவல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

- 14 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகள் (சிறுவர் (ம) சிறுமியர்கள்) பள்ளியில் சேர்ந்துள்ள குழந்தைகள், பள்ளியில் சேராதவர்கள், பள்ளி செல்லா குழந்தைகள்.
- அரசு, அரசு சாரா பள்ளிகள், நிதியுதவி பெறும் பள்ளிகள், அங்கீகாரம் பெறாத தனியார் பள்ளிகள் போன்றவைகளின் எண்ணிக்கை.
- தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் முறைசாரா பள்ளிகள்.
- பாதுகாப்பு நிறுவனங்களில் வாழும் குழந்தைகள்.
- ஆதி திராவிடர், மலைவாழ் பழங்குடியினர், மலைவாழ் நாடோடி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நாகரிக முதிர்ச்சியற்ற பழங்குடியினரின் குழந்தைகள்.
- மாற்றுத் திறனாளி குழந்தைகள்.
- வேலைக்கு செல்லும் குழந்தைகள்.
- வன்முறை நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்.
- வேலை தேடி இடம்பெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள்.
- குடிபெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள்.
- வீதிகளிலும், பொது இடங்களிலும் வசிக்கும் குழந்தைகள்
- கைதிகள் மற்றும் பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகள்.
- பிற நலிவுற்ற குழந்தைகள்.

மேற்கண்ட தகவல்களின்படி பள்ளி அமைப்புக்குள் கொண்டுவர வேண்டிய குறிப்பிட்ட குழுவை தேர்ந்தெடுக்க முடியும்.

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்புக்குள் உள்ள ஒவ்வொரு குழந்தையையும் மையப்படுத்தியே திட்டமிடல் அமைய வேண்டும். அப்போது தான் தரவுகள் அடிப்படையில் ஒவ்வொரு குழந்தையின் முன்னேற்றத்தை பின்தொடர்ந்து கண்காணிக்க முடியும்.

பள்ளி (ம) அரசுத் துறைகளில் மேலே குறிப்பிட்ட தகவல்களின் பெரும்பகுதி கிடைக்கும். கிராம கல்வி பதிவேடு தயாரிப்பதிலும் நிகழ்காலப் பதிவுகளை மேற்கொள்வதிலும் கிராமக் கல்விக் குழுவும், பள்ளி மேலாண்மை குழுவும் முக்கியபங்கு வகிக்கின்றன.

குறிப்புகள்

தற்போதுள்ள சூழ்நிலைகளின் பிரதிபலிப்பாக கிடைக்கும் தரவுகள் மட்டுமே தரவுகள் தொகுப்பின் நோக்கமாக கருத முடியாது. சவால்களை கண்டறிவதற்காகவும், குறிப்பிட்ட தேவைகளை அடையாளம் காண்பதற்காகவும், இடை வினைகளை திட்டமிடுவதற்காகவும், தேவையான வளங்களை பெறுவதற்காகவும், மேற்குறிப்பிட்ட தகவல்கள் பயன்படுத்தப் படுகின்றன. கிடைக்கக்கூடிய வளங்களை முழுமையாகவும் சிறப்பாகவும் போதுமான அளவில் பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் தரவு அடிப்படையிலான திட்டமிடல் அமைய வேண்டும். குறிப்பிட்ட இலக்கினை அடைவதற்கு தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகமான தரவுகள் தொகுக்கப்பட்டாலும், பொருத்தமான தரவுகளை மட்டுமே பயன்படுத்த முடியும். குடியிருப்பு அளவிலான திட்டமிடலுக்கு வீட்டு கணக்கெடுப்பின்படி உருவாக்கும் தரவுகள் அடிப்படையாக உள்ளன.

இதைத் தவிர வீட்டு கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட குடும்ப அமைப்பு தகவல்கள், குடியிருப்பு நிலைகளில் ஒருங்கிணைக்கப்பட்டு தொகுக்கப் பட்டுள்ளன. இச்செயலை மேற்கொள்ள உதவியாக ஓர் இணை ஆலோசனைப் படிவங்கள் வடிவமைக்கப்பட்டன.

ஒருமுறை குடியிருப்பு நிலை தரவுகள் தொகுக்கப்பட்டு விட்டால், அதையே கணினிமயமாக்குவதற்கும், குடியிருப்பு அளவிலான திட்டமிடலுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். பள்ளியில் ஒவ்வொரு குழந்தைகளின் சேர்க்கை (ம) வருகைப் பதிவேடுகளை கண்காணிக்கவும், கிராம கல்விக்குழு உறுப்பினர்களுக்கு உதவியாக பூர்த்தி செய்யப்பட்ட வீட்டுக் கணக்கெடுப்பு தரவு படிவத்தில் உள்ள தகவல்கள் கிராம வார்டு பதிவேட்டில் சேமிக்கப் படுகின்றன. இவை பின்னர் கிராம கல்விக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

## VI நுண்ணிலைத் திட்டமிடல் பயிற்சிகள்

முதன்மை திட்டமிடல் குழு துவங்கியவுடன் உறுப்பினர்களின் திறன் மேம்பாட்டை கருத்தில் கொண்டு சிக்கல்கள் (ம) இடைவினை உத்திகளை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அமைக்க வேண்டும். தேவையான தகவல்கள் கிடைத்த பிறகு, நுண்ணிலை திட்டமிடல் பயற்சி தொடங்கப்பட வேண்டும்.

இப்பயிற்சியில் அடங்கியுள்ளவை:

- குழந்தைகளின் சேர்க்கை, இடைநிறுத்தம், தக்கவைத்தல், தேர்ச்சி விகிதம், குழந்தைகளின் வகைப்படி ஆசிரியர்–மாணவர் விகிதம், இடம் சார்ந்த குறிக்கோள் ஆகியவற்றை ஓராண்டிற்குள் அடைவதற்கான இலக்கினை நிர்ணயிக்க வேண்டும்.

குறிப்புகள்

- நடைமுறைப்படுத்த வேண்டிய செயல்பாடுகளை முடிவெடுத்தல்.
- செயல்பாடுகளை வரிசைப்படுத்தல்.
- அடைய வேண்டிய இலக்கினை, பல கட்டங்களாக (படிகளாக) பிரித்து செயல்படுத்தல்.
- பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ள பொறுப்பான அலுவலர்கள் (ம) நிறுவனத்தை தெரிவு செய்தல்.
- கால அளவை நிர்ணயம் செய்தல்.
- ஒவ்வொரு செலவினத்தையும் மதிப்பீடு செய்தல்.
- திட்ட கருத்துரு தயாரித்தல்.

சுருங்கக் கூறினால் நடவடிக்கை தருக்க சட்டத்தை தயாரித்தல் வேண்டும். (படிவத்திற்கான இணைப்பை பார்க்க). இந்த நடவடிக்கை தருக்க சட்டம் நோக்கங்கள், நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் செயல்கள், செயலை மேற்கொள்ளும் நபர்கள், கால அவகாசம், செயல்பாடுகளின் அட்டவணை, பட்ஜெட் நிதி ஒதுக்கீடு மற்றும் எதிர்பார்க்கப்படும் வெளிப்பாடுகளை பட்டியலிடுகிறது.

வகுப்பறையில் கற்றல்–கற்பித்தல் செயல்முறைகள் (ம) வகுப்பறையில் நடைபெறும் நிகழ்வுகள் மிக முக்கியமானவை. ஏனெனில் அவை பல உத்திகளின் திட்டமிடலின் பிரதிபலிப்பாக இருக்கின்றன. இவை மிகவும் முதன்மையானதும், முக்கியமானதுமாகும். ஆகையால் வகுப்பறை தொடர்வினைகள் எவ்வாறு நடைபெறுகின்றன (ம) குழந்தைகள் இடைவினைகளில் பங்குபெறும் நிலை போன்றவற்றை புரிந்துகொண்டால் மட்டுமே அவர்களால் தங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். வகுப்பறைக்குள் நடைபெறும் கற்றல்–கற்பித்தல் இடை வினைகளில் முக்கியமான கூறுகள் பின்வருமாறு:

(i) வகுப்பறை சூழ்நிலை (உடல்நிலை (ம) சமூகம் உள்பட)

(ii) வகுப்பறை அமைப்பு (ம) மேலாண்மை (இருக்கை அமைப்பு, கற்றல்–கற்பித்தல் குழுக்களின் அமைப்பு, பொருள்களின் காட்சி (ம) பயன்பாடு)

(iii) ஆசிரியர்–மாணவர் விகிதம்

(iv) கற்பித்தலில் பயன்படுத்தப்படும் முறைகள் (ம) உத்திகள்

(v) கிடைக்கக்கூடிய (ம) பயன்படக்கூடிய கற்றல்–கற்பித்தல் பொருள்கள் (ம) கருவிகள்.

குறிப்புகள்

(vi) வகுப்பறை செயல்பாடுகளில் குழந்தைகளின் பங்கு (சொற்கள், (ம) சொற்கள் சாரா)

(vii) வகுப்பறைக்குள் கிடைக்கக்கூடிய கற்றல்–கற்பித்தல் வசதிகள்.

(viii) சூழலுக்கேற்ற புதுமையான உளவியல் முறைகளை உருவாக்கி, சோதனை செய்து பார்க்கும் வாய்ப்பை ஆசிரியர்க்கு அளித்தல்.

(ix) கற்றலில் பாடச் செயல்பாடுகள் (ம) பாட இணைச் செயல்பாடுகள் ஆகிய இரண்டிலும பெற்றோர்கள், உள்ளூரில் உள்ள படித்த மக்கள், சமுதாயத்தில் உள்ள வல்லுநர்களைப் பயன்படுத்தி உகந்த உத்திகள் மூலம் பங்கேற்கச் செய்தல்.

கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகள் அனைத்தும், வகுப்பறையில் மட்டுமே நடைபெற வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. சில நேரங்களில் உயிரி பல்வகைத்தன்மை போன்ற பாடத்தை கற்பிக்க இயற்கை சூழலோடு இயைந்த இடங்களுக்கு குழந்தைகளை இயற்கை பயணம் அழைத்துச் செல்வது நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். சில சமயங்களில் இதற்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படலாம். கல்வித் திட்டம் தயாரிக்கையில் இதனை கருத்தில்கொண்டு திட்டமிட வேண்டும்.

குழந்தைகளின் முழுமையான ஆளுமைத்திறன் வளர்ச்சிக்கு அனைத்து உட்கூறுகளையும் உள்ளடக்கிய கல்வியை வழங்க வேண்டும். அதாவது, பள்ளிகளில் விளையாட்டு, யோகா, கலை நிகழ்ச்சிகள், செயல்திட்டம், செயல் வழிக்கற்றல், உடல்நலம், ஊட்டச்சத்து, தொழில் கல்வி போன்றவற்றிற்கான வாழ்க்கைக் கல்வியை வழங்குதல் வேண்டும். இத்தகைய செயல்பாடுகள் மூலம் பள்ளியானது ஒரு சமூக செயல்பாட்டு மையமாகத் திகழ்கிறது. மாணவர்கள் பணி அனுபவம் பெறும் வகையில் கைவினை கலைஞர், தச்சர், தொழில் வல்லுநர்கள், விவசாயி ஆகியோருடன் இணைந்து பழகசெய்ய வேண்டும். இத்தகைய கற்பித்தல் செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது உடல், மன, சமூக வளர்ச்சி மேம்படுகிறது.

விளையாட்டு மைதானம், உடற்கல்வி/யோகா ஆசிரியர், விளையாட்டுக் கருவிகள், பள்ளிகளுக் கிடையேயான விளையாட்டு போட்டிகள் ஆகியவற்றை நிதி ஒதுக்கீடு செய்யும்போதே திட்டமிட வேண்டும்.

1986இல் தேசிய கல்விக் கொள்கையைத் தொடர்ந்து தொடக்கக் கல்வியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதுமையான திட்டங்கள் பின்பற்றப்பட்டன. அவை கரும்பலகைத் திட்டம், ஆசிரியர் கல்வி, முறைசாராக் கல்வி, மகிளா சமிக்ஷா, தேசிய அளவிலான தொடக்கக் கல்வி குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளிக்கும் திட்டம், பீகார், இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம்

குறிப்புகள்

(ம) ஆந்திரப்பிரதேசம் மாநிலங்களுக்காக சிறப்பாக உருவாக்கப்பட்ட செயல்திட்டம் போன்றவை அடங்கும். இவற்றில் கற்றல்–கற்பித்தல் கருவிகள், முழுமையான பங்குவகிக்கின்றன.

இப்புதுமையான செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த கற்றல்–கற்பித்தல் பொருள்களின் வகை, கிடைக்கக்கூடிய அளவு, பொருத்தப்பாடு மற்றும் பயன்பாட்டை மதிப்பிட வேண்டியது அவசியமாகிறது. புதுமையான கருவிகளை வாங்குவதற்கு ஆண்டுதோறும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 500 வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக பயிற்சி ஏடு, ஆசிரியர் கையேடு, கற்றல்–கற்பித்தல் கருவிகள், கல்வி பெட்டகம் மற்றும் பல. இவை அனைத்தும் திட்ட முன்வரைவில் (கருத்துரு) சேர்க்கப்பட வேண்டும்.

நட்பு சார்ந்த பள்ளிச்சூழலை ஒரு குழந்தைக்கு உருவாக்கித் தருவதே கட்டுமானப் பணியின் நோக்கமாக உள்ளது. அடிக்கடி பேரிடர் ஏற்படும் இடங்களான தாழ்நிலைப்பகுதி, நெடுஞ்சாலைக்கு மிக அருகில், ஆறு (அ) குளம், உயர் மின்னழுத்த மின்சாரக் கம்பிகள் செல்லும் இடங்களில் பள்ளிகள் அமையக்கூடாது. அனைத்து வகைக் குழந்தைகளும் எளிதில் அணுகக்கூடியதாக ஆபத்தற்ற இடங்களில் பள்ளி இருக்க வேண்டும். பள்ளி கட்டிட வடிவமைப்பு செயல்படக் கூடிய நிலையில் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். வகுப்பறையின் உள்வடிவமைப்பு, போதுமான காற்றோட்டம், விளக்குகள், பொருள்கள் சேமிக்கும் இட வசதிகளுடனும் வரைபடம் (ம) கரும்பலகை போன்றவைகளை உடையதாகவும் இருக்க வேண்டும். கூடுதலாக மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தக்கூடிய சரிவுபாதை, கைப்பிடிச் சுவர், போன்றவற்றுடன் அவர்களின் கல்விக்கான தேவையை பூர்த்தி செய்யத் தேவையான அனைத்து வசதிகளையும் கட்டாயம் பெற்று இருக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் பாதுகாக்கப்பட்ட கழிவறை (ம) குடிநீர், மின்சார வசதி, பள்ளி மதில்சுவர் (ம) விளையாட்டு மைதானம் இருத்தல் அவசியம். பசுமையான சூழலில் பள்ளி அமைதல் வேண்டும். இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் (வகுப்பறைகள், கழிப்பிட வசதி, குடிநீர், இருக்கை வசதிகள், சேமிப்பு அறை வசதி, கணினி (ம) கற்றல்–கற்பித்தல் கருவி பொருத்துதல், மதில்சுவர் மற்றும் பல) இவையனைத்தும் பயன்பாட்டு நிலையிலும், சிறிய/பெரிய அளவில் பழுதடைந்தால், சரி செய்யவும், புதியவை வாங்குவதற்கு ஏற்றாற்போல வரவு–செலவு, திட்ட முன்வரைவு தயார் செய்யப்பட வேண்டும். கட்டுமான நுணுக்கங்கள், ஓர் அலகுக்கு ஆகும் செலவு, நிதியிருப்பு, சமுதாயத்தினரின் பொறுப்புகளும், கடமைகளும், கணக்கு அமைப்பு ஆகியவற்றை கொண்டே சமுதாய கட்டமைப்பு கையேட்டினை தயாரிக்க வேண்டும். அதனடிப்படையிலேயே நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்புகள்

என்னென்ன வசதிகள் உள்ளன என்பதையும், முன்வரைவு திட்டத்தில் அவற்றை எவ்வாறு குறிப்பிட வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்திருப்பது மிக முக்கியமானதாகும். முன்வரைவு திட்டத்தில் இருக்க வேண்டிய உட்கூறுகள்

- அமைப்பு/பின்னணி/மக்கள்தொகை பிரச்சினை சம்பந்தப்பட்ட தகவல்கள்
- நோக்கங்கள்
- உத்திகள்
- தேவையான பணியாளர்கள்
- அடிப்படை கட்டமைப்பு வசதிகள்
- நிகழ்ச்சிகள்/செயல்பாடுகள்
- ஆசிரியர்களுக்கான பயிற்சி உத்தி சார்ந்த விவரம், பாடநூல் திருத்தம், பயிற்சி கட்டகம் (ம) கையேடுகள் உருவாக்குதல்
- குழந்தை மேம்பாட்டை கண்டறிய உதவும் விரிவான திட்டங்கள்
- குறிப்பிட்ட திட்ட காலத்தில் புதிய பணிகளை மேற்கொள்ளுதல்
- ஆவணங்கள்/அறிக்கைகள் வெளியிடுதல்
- கண்காணிப்பு, மதிப்பீடு, சமூக தணிக்கை ஆகியற்றை மேற்கொள்ளுதல்
- ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் தனித்தனியான வரவு–செலவு ஒதுக்கீடு செய்தல்
- கடந்த ஆண்டு மைய, மாநில செலவினங்களை வெளியிடுதல்.
- ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் செலவிடப்படாத நிதி (காலாவதியாகும் நிதி), தேவைப்படும் நிதி பற்றிய தகவல்களை தரவேண்டும்.
- சென்ற ஆண்டு செலவிடப்படாத மானிய நிதியை வரும் ஆண்டு நிதிக்கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- நிதி தேவைக்கான பிற ஆதாரங்கள்.
- நடப்பாண்டுக்கான வரவு–செலவு திட்டம்.

வரையறுக்கப்பட்ட முறையில் செயல்பாட்டிற்கான செலவினங்கள் இருக்க வேண்டும். முன்வரைவு திட்ட அறிக்கையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான தகவல்கள், தேவை மதிப்பீடு, மாநில அதிகாரிகளிட மிருந்து உதவி கோருபவர்களின் விவரம், கொள்கை மற்றும்

குறிப்புகள்

நிர்வாக அளவில் உதவி பெற்றோர் விவரம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளில் இருந்து ஏதேனும் மாறுபட்ட கருத்துகள் இருக்குமாயின் அதற்கான முழு நியாயமும் வழங்கப்பட வேண்டும். திட்டகூட்டச் செயல்முறைகள், குறிப்புகள், பணிமனைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவைகளை முதன்மை திட்டமிடல் குழுவானது குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி சட்டத்தின்படி பயனாளிகளுடன் இணைந்து மேற்கொண்டு தெளிவாக அறிக்கை தயாரித்தல் வேண்டும்.

தாழ்மட்ட நிலையிலிருந்து உயர்மட்ட அணுகுமுறையின்படி தனியார் பள்ளி, அரசு நிதியுதவி பெறும் பள்ளி, நிதியுதவி பெறாத பள்ளி மற்றும் அரசுப் பள்ளி போன்ற ஒரே வாழிடத்தில் உள்ள பள்ளிகள் அவர்களுடைய முன்னேற்றத்திற்கான முன்வரைவுத் திட்டம் தயாரித்தல் வேண்டும். தனித்தனியாக நுண்ணிலைத் திட்டமிடல் அடிப்படையில் திட்டமிடுவதுதான் பள்ளிகளுக்கு சிறந்தது.

சமுதாய அடிப்படையிலான அணுகுமுறையில் தான் அனைவருக்கும் தொடக்கக் கல்வி (UEE) திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் குடியிருப்பு அளவிலான திட்ட முன்வரைவு அரசின் ஆதரவுடன் தொகுக்கப்படுகிறது.

**உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 2**

1. திட்டமிடல் என்றால் என்ன? நுண்ணிலை திட்டமிடல் என்றால் என்ன?

    ......................................................................................................

    ......................................................................................................

    ......................................................................................................

2. அனைவருக்கும் தொடக்கக் கல்வியில் நுண்ணிலை திட்டமிடலை நடைமுறைப்படுத்துவது ஏன்?

    ......................................................................................................

    ......................................................................................................

    ......................................................................................................

3. நுண்ணிலை திட்டமிடலின் உள்ள படிநிலைகள் யாவை?

    ......................................................................................................

    ......................................................................................................

    ......................................................................................................

குறிப்புகள்

## 7.3.4 மாவட்ட கல்வி அலுவலர் (DEO) மாவட்டவள மையம் (DIET) ஒன்றியக் கல்வி அலுவலர் (BEO) வட்டாரவள மையம் (BRC) மற்றும் குறுவள மையத்தின் (PRC) பங்குகளும் பணிகளும்

DEO, DIET, BEO, BRC, CRC-*யின் பங்குகளும் பணிகளும் பின்வருமாறு.*

### (அ) மாவட்ட அளவில்

- *மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், திட்டமிடல், செயல் படுத்துதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை செய்தல் போன்ற பணிகள் அனைத்தையும் மேற்கொள்கிறார். அவர் பின்வரும் பொறுப்புகளை, தொடக்கக் கல்வியில் நிறைவு செய்ய வேண்டும்.*
- *குழந்தைகளின் கற்றலுக்கான உரிமைகளை உணரும் சூழ்நிலையை உருவாக்கி தருதல்.*
- *அனைத்து குடியிருப்பு வாழிடங்களிலும் தொடக்க (ம) உயர் தொடக்க நிலை பள்ளி வசதிகள் உள்ளதை உறுதி செய்தல்.*
- *பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகள் அனைவரும் அருகாமையில் உள்ள பள்ளிக்கு எளிதில் செல்வதை உறுதி படுத்துதல்.*
- *அனைத்து குழந்தைகளின் சேர்க்கை (ம) தக்கவைத்தலுக்கு* PRIs *சிறப்பான உள்ளார்ந்த முயற்சி எடுத்து ஈடுபட வேண்டும்.*
- *பள்ளி செல்லாக் குழந்தைகளை (இடம்பெயர்வு/தெருவோரக் குழந்தைகள்/*SC/ST*/நாடோடி, மலைவாழினக் குழந்தைகள், தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டிய சிறப்பு தேவையுடைய குழந்தைகள்) பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்கவைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் அவர்கள் கல்வி வாய்ப்பை பெறுவதை உறுதி செய்ய தங்குவதற்கான விடுதிகள் (மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளது போன்ற வாஸ்தி ஷாலா -* Vasthi Shala) *மற்றும் மாற்றுப் பள்ளிகளை ஏற்படுத்துதல் வேண்டும்.*
- *பிறந்த குழந்தை முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளைப் பற்றிய விவரங்களை பதிவு செய்ய விழிப்புணர்வு பேரணி மேற்கொண்டு தொடர்ச்சியாக அவர்களைப் பற்றிய பதிவேடுகளை பராமரித்தல் வேண்டும்.*

குறிப்புகள்

- உயர்கல்வி அதிகாரிகளுக்கு ஆசிரியர்கள் காலிப் பணியிடம் மற்றும் ஆசிரியர் தேவை குறித்து கண்காணித்து அறிக்கை அனுப்ப வேண்டும்.
- ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்குதல் மற்றும் தேவைப்படும் இடங்களில் பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகளை செய்து தருதலை கண்காணித்தல்.
- பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களுக்கு ஆசிரியர் வருகைப்பதிவேடு, மாணவர்கள் வருகைப்பதிவேடு, கல்வியின் தரம், கற்றல்–கற்பித்தல், கருவிகள் இருப்பு ஆகியவற்றை கண்காணிக்கத் தேவையான திறனை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்.
- பெண் குழந்தைகள் மற்றும் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கு (CWSN) இலவசக் கல்வி மற்றும் இலவச போக்குவரத்து வசதிகள் வழங்குவதை உறுதி செய்தல்.
- வசிப்பிடத்திற்கு அருகாமையில் பள்ளிகள் அற்ற குழந்தைகளுக்கு உண்டு உறைவிட வசதிகள் அமைத்தலை உறுதி செய்தல்.
- கிடைக்கக்கூடிய கற்றல்–கற்பித்தல் பொருள்கள், கருவிகள் மற்றும் குழந்தைகள் விருப்பமுடன் தடைகளற்று பள்ளியை அணுகும் சூழலை உறுதி செய்தல்.
- சமூகத்தில் பின்தங்கிய நலிவுற்ற பிரிவினரான ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/நாடோடி மலைவாழ் மக்கள், மிகவும் பின்தங்கிய வகுப்பினர், இஸ்லாமியர்கள் மற்றும் சிறுபான்மையினரின் குழந்தைகள், பெண்கள், நகர்ப்புற ஒதுக்கப்பட்ட குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள், குடிபெயர்ந்த குடும்பங்கள் மற்றும் பெரியவர்களின் பாதுகாப்பற்ற குமரப்பருவ குழந்தைகள் போன்றோரின் பாதுகாப்பினை பல்வேறு துறைகள் சார்ந்த மாவட்ட அதிகாரிகளோடு இணைந்து ஒத்துழைத்து உறுதி செய்தல்.
- PRI அமைப்பின் தலைவர் அல்லது சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளூர் சுயஆட்சி குழுவின் தலைவர் தலைமையிலான குறைதீர் குழுக்களை அமைத்தல்.
- பாலின சிக்கல்கள் மற்றும் சமூக ஒதுக்கம் சார்ந்த பிரச்சனைகளை சமூக தணிக்கை சார்ந்த நடைமுறைகள் மூலம் தீர்த்தலை உறுதிபபடுத்துதல்.

குறிப்புகள்

- பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, காவல் துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், மாவட்ட கல்வி குழுக்களைச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், வல்லுநர்கள், பெற்றோர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட மாவட்ட கல்விக்குழு அமைத்து குழந்தைகளுக்கான பள்ளி சேர்க்கைக்கு முன்நுழைவுத் தேர்வின்மை குறித்த நடவடிக்கைகளை கண்காணித்து உறுதிப்படுத்துதல் வேண்டும்.
- குழந்தைகள் உரிமைகளுக்கு எதிரான உரிமைமீறல், ஆண்டு இறுதித் தேர்வுகள், தக்கவைத்தல் மற்றும் உடல் ரீதியான தண்டனை ஆகியவை இல்லை என்பதை உறுதி செய்தல்.
- பள்ளிகள், கிராமங்கள், வட்டார அளவில் முன்மொழியப்பட்ட முன் வரைவுத் திட்டங்களை மாவட்டக் கல்வி அலுவலர் தொகுத்து, அவற்றை அடிப்படையாகக் கொண்டு மாவட்டத் திட்டங்களை தயார் செய்ய வேண்டும்.
- தொடக்கக் கல்வியின் தற்போதைய நிலை குறித்து தெளிவாக அறிய அனைத்து குழந்தைகளின் இருப்பிடங்களுக்கு அருகாமையில் நடந்து செல்லும் தொலைவில் உள்ள பள்ளிகளின் நிலை, இடவசதி, சமூக மற்றும் பள்ளி வரைபடம் போன்றவை குறித்த விவரங்களை மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சேகரிக்க வேண்டும். இவை பள்ளிகள், கிராமங்கள் மற்றும் வட்டார அளவில் முன்மொழியப்பட்ட திட்டங்களை தொகுப்பதற்கு உதவியாக அமையும்.

## உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 3

1. கண்காணித்தல் என்றால் என்ன? அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் சமூக செயல்பாடுகளை சமூகம் எவ்வாறு கண்காணிக்க இயலும்?

   ...........................................................................................................

   ...........................................................................................................

   ...........................................................................................................

2. அவைருக்கும் தொடக்கக் கல்வியினை செயல்படுத்துவதில் மாவட்டக் கல்வி அலுவலரின் பங்கினை ஆய்க.

   ...........................................................................................................

   ...........................................................................................................

   ...........................................................................................................

## (ஆ) இட அமைப்பு மற்றும் சமூக வரைபடம்

குறிப்புகள்

அருகாமையில் உள்ள குழந்தைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளில் பங்கேற்றல் சாத்தியமாகும். அதைப்போலவே ஒரு பள்ளியில் பங்கேற்கும் குழந்தைகள் பல்வேறு இடங்களில் வசிப்பவர்களாகவும் இருப்பர். குழந்தைகள் பள்ளிக்கு செல்வதையும், கற்றல் செயல்பாடுகளில் பங்கேற்பதையும் உறுதிப்படுத்துவதற்கு பள்ளிகளை அருகாமையில் அமைத்துத் தருதல் மட்டுமே போதுமானது இல்லை. குழந்தைகளின் இருப்பிடத்திற்கு அருகே பள்ளி அமைந்திருக்கலாம், ஆனால் குழந்தைகள் வருகைபுரியாமல் இருக்கலாம், சில மாதங்களுக்குப் பிறகு பள்ளியை விட்டு விலகலாம்; அல்லது பல நாள்கள் பள்ளிக்கு வருகைபுரியாமல் இருக்கலாம். இதன் காரணமாக கற்றல் சுமையினை எதிர்கொள்ள அவர்களால் இயலாது.

## பள்ளி வரைபடத்தின் பயன்கள்:

- சமூக, கலாசார, பொருளாதார மற்றும் தளவாடங்கள் போன்ற அல்லது வேறு காரணங்களுக்காக பள்ளியை அணுக முடியாத குழந்தைகளை அடையாளம் காணல்.
- கல்வி அமைப்புகள் மாறக்கூடிய தொலைநோக்கு பார்வையுடன் அனைத்து குழந்தைகளுக்கும் தேவையான உபகரணங்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்கட்டமைப்பினை உருவாக்கி சாதி, மதம், பாலினம் அல்லது தொலைவு போன்ற வேறுபாடுகளின்றி நியாயமான தரமான கல்வி வழங்க வேண்டும்.

பள்ளி வரைபடம் தயாரித்தலில் கீழ்க்காணும் செயல்முறைகள் உள்ளடங்கியுள்ளன.

(i) கிராமத்தில் சுற்றுச்சூழல் சார்ந்த கட்டிடம்

(ii) பள்ளி வரைபடத்திற்கான கிராம கல்விக் குழுக்களை உருவாக்குதல்.

(iii) கிராம கல்விக் குழுக்களுக்கு பள்ளி வரைபடத்திற்கான பயிற்சியினை வழங்குதல்.

(iv) கிராமத்தின் தோராய இடம்சார்ந்த வரைபடத்தினை தயாரித்தல்.

(v) வீடுகள்தோறும் ஆய்வுகள் நடத்துதல்.

(vi) பல்வேறுபட்ட குடும்பங்கள் இருப்பிடம் சார்ந்த இறுதி வரைபடத்தினை ஒவ்வொரு குடும்பத்தை சார்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் சேர்க்கை நிலையை குறிக்கும் வகையில் தயாரித்தல்.

குறிப்புகள்

(vii) கிராம / பள்ளிக்கல்வி பதிவேட்டினை தயாரித்தல்.

(viii) மக்களுக்கு வரைபடங்களின் பகுப்பாய்வை வழங்கி அதை பகுத்தாய்ந்து சரிபார்த்தல் மற்றும்

(ix) மக்களிடம் ஆலோசனைகள் பெறுதல்

பள்ளி வரைபடம் தயாரிப்பதற்கான தேவையான ஆதரவை மாவட்ட வளமையம் விரிவுபடுத்துகிறது. மேற்கண்டவையிலிருந்து இத்திட்டமானது அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற இலக்கை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட இடைவினைகளின் எண்ணிக்கையை குறிக்கும் கூற்றாகவோ அல்லது வரவு செலவு புள்ளி விவரங்களை தருவதாகவோ அமையாது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இத்திட்டங்கள் அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் முன்னேற்றத்தை மாவட்ட அளவில் கண்காணிப்பதற்கான வழிகாட்டியாக செயல்படுகின்றன.

## (இ) திட்டமிடலுக்கான வளமையங்கள்

DIET மற்றும் DPEPக்கள் திட்டமிடல் மற்றும் மேலாண்மைக்கான அலகினை கொண்டுள்ளன. மாவட்ட அளவிலான வருடாந்திர திட்டங்களை தயாரிப்பதில் இவ்வலகு முக்கியப்பங்கு வகிக்கிறது.

வருடாந்திர கல்வி வளர்ச்சி திட்டங்களை தயாரிப்பதில், பள்ளி அளவில் ஆசிரியர்கள், கிராம பஞ்சாயத்து ஊழியர்கள் மற்றும் பஞ்சாயத்து சமிதியை சார்ந்தோர்களுக்கு தேவையான உதவியை வட்டார மற்றும் குறுவளமையங்கள் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## (ஈ) தரம் சார்ந்த மதிப்பீடு

மாவட்ட திட்டத்தினை இறுதிப்படுத்துவதற்கு முன் செயல்படுத்தப்படும் நடைமுறையே தரம் சார்ந்த மதிப்பீடு என அழைக்கப்படுகிறது. தரம் சார்ந்த மதிப்பீடு என்பது பின்வருவனவற்றை கண்டறிதலை குறிக்கிறது.

- அளிக்கப்பட்ட சான்றுகள் உண்மைச்சூழலை சார்ந்த ஆதாரங்களாக அமைந்தால்
- தேவைகளை நியாயப்படுத்துவதிலான நம்பிக்கை.
- தற்போதைய நடைமுறை நிலை மற்றும் அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் இறுதி இலக்குகளுக்கு இடையிலான இடைவெளிகளை நிரப்புவதன் மூலம் முன்னேற்றங்கள் அடையப் பெற்றால்.

குறிப்புகள்

- கால அட்டவணைக்குள் முன்மொழியப்பட்ட பயன் விளைவு உத்திகளை அடைய இயலுமானால்.
- முன்மொழியப்பட்ட திட்டங்கள், நிதி சார்ந்த, தொழில்நுட்ப ரீதியாக, சமூக மற்றும் அரசியல் ரீதியாக சாத்தியமாகுமானால்.
- அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புகள் எம்மாதிரியானவை?

மாநில அரசாங்கம், கல்வி, நிதி, பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் துறைகள் திட்ட வரைவுகளை நேர்மையான தர மதிப்பீட்டிற்கு உட்படுத்துகின்றன.

மாநில அரசுத் துறைகள் பகுதி/ஒட்டுமொத்த மாவட்டத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவோ, தெளிவுகளைக் கோரவோ, இலக்குகளை பகுத்தறியவோ இயலும். மாற்றங்களை சேர்த்து மீண்டும் சமர்ப்பித்த பின்பு மாவட்டத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்த அனுமதிக்கப்படலாம்.

மாவட்ட வருடாந்திர திட்டம் மற்றும் பள்ளி வரைபடத்தை சார்ந்த முன்னுரிமை திட்டங்களைத் தயாரிப்பதை தவிர, மாவட்டக் கல்வி அலுவலர், தனியார் பள்ளிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் இணைந்து திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

## (உ) நடைமுறைப்படுத்துதல்

மாவட்ட மற்றும் மாவட்டத்திற்கும் கீழ்நிலை அளவில் அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் திட்டமிடல் என்பது ஓர் ஆரம்பம் மட்டுமே கல்வி வளர்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட கல்விக் குழு, வட்டார கல்விக்குழு, பள்ளி மேலாண்மைக் குழு போன்றவை நடைமுறையில் உள்ள பழைய வழிமுறைகளை மாற்றி பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் குழுக்களின் பிரதிநிதிகள் போன்றோர் பங்கேற்று முடிவெடுக்கும் வகையில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இதனால் RTE என்பது ஏட்டளவில் இன்றி நடைமுறையிலும் செயல்படுத்தப்படுகிறது. பள்ளியானது முதன்மை நிறுவனமாக விளங்க அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் சமுதாயப் பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டும் என்பதை திட்டமிடல் செயல்பாட்டில் ஆசிரியர்களின் பங்கேற்பின் மூலம் அறியலாம். ஒன்றியக் கல்வி அலுவலர் மற்றும் அவர்களின் தொடர்புடைய அலுவலர்கள் ஒன்றிய வள மையமாக செயல்படுகிறார்கள். வட்டார வள மைய பணியாளர்கள் ஒவ்வொரு வருடமும் பள்ளிகளில் புதிய கற்றல், கற்பித்தல் பொருள்கள் இருப்பதற்கு உதவி புரிய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்புகள்

அதிக எண்ணிக்கையிலான குறு வள மையங்கள் இருப்பினும் ஒவ்வொரு 15 கிராமங்களுக்கும் ஒரு குறுவள மையம் அமைதல் வேண்டும்.

வட்டார வள மையம் மற்றும் குறுவள மையப் பணியாளர்களுக்கு இடையே பின்வருபவை சாத்தியமானதாக அமையும்.

மாதம் ஒருமுறை ஒவ்வொரு பள்ளியையும் பார்வையிடல் மற்றும்

கலைத்திட்டம் சார்ந்த உதவிகளை ஆசிரியர்களுக்கு அளித்தல்.

**உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 4**

1. பள்ளி அளவிலான தொடக்கக் கல்வியின் வளர்ச்சிக்கு ஒரு முன்வரைவினை தயாரிப்பதற்கான தரவுகளின் ஆதாரங்கள் யாவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

2. தரம் சார்ந்த மதிப்பீட்டுத் திட்டம் என்றால் என்ன? வருடாந்திர மாவட்ட கல்வி அபிவிருத்தி திட்டத்தை தரமதிப்பீடு செய்பவர் யார்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மாவட்டத்தில் செயல்படக்கூடிய சில நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானது. அவை கீழே விவாதிக்கப்பட்டுள்ளது.

## பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கிடையேயான கூட்டாண்மை

கல்வியினை சிறப்பாக அளிக்க வேண்டும் என்ற தேவை அதிகரிக்க அதிகரிக்க அரசாங்கத்திற்கே இது கடினமாகிறது. இதற்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும் அவசியமாகிறது. அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்க வேண்டும் என்ற இலக்கை நோக்கி தனியார் நிறுவனங்களும் அரசுடன் இணைந்து பங்காற்றும் வகையில் தனியார் பள்ளிகளை அரசு திறக்க அனுமதி அளிக்கிறது. இது முன்பிருந்த நடைமுறையில் இருந்து ஒரு மாற்றமாகும். மாநில அரசு மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள், கார்பரேட் நிறுவனங்கள் மற்றும் பிற தன்னார்வ அமைப்புகளோடு இணைந்து வெவ்வேறு வகையிலான திட்டங்களின் வாயிலாக தொடக்கக் கல்வியினை சிறப்பாக வழிநடத்த உதவுகின்றன.

குறிப்புகள்

மிகப்பெரிய கொள்கை முடிவுகளின் அனைத்து நிலைகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களோடு இணைந்து செயல்படலாம் என்ற முடிவினை அரசு எடுத்துள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பல ஆண்டு காலமாக சமூக வளர்ச்சி சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் அவர்கள் பகல்நேர மையங்கள் நடமாடும் குழந்தைப் பள்ளிகள், பால்வாடிகள், சார்வஹா (Charvaha) பள்ளிகள் தொடக்க மற்றும் முன் தொடக்கப் பள்ளிகள் போன்ற மிகப்பெரிய அளவிலான புதுமையான திறன்களை வெளிப்படுத்தும் பள்ளிகளை மாவட்ட அளவில் அடையாளம் கண்டு அதன் மூலம் பள்ளி செல்லாக் குழந்தைகளை பள்ளியில் சேர்க்க முனைப்புடன் செயல்பட்டனர். தன்னார்வ நிறுவனங்கள், உடனான இந்த பங்களிப்பானது அரசின் வழியில் மாற்றத்திற்கு வழிவகுத்து உள்ளூர் அளவில் செயல்பட வழிவகை செய்கிறது. தன்னார்வ நிறுவனங்கள் உடனான இந்த பங்களிப்பு மூன்று வழிகளில் உணரப்படுகிறது.

அவை:

- மைய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து நேரடியாக நிதி பெறுதல.
- அடையாளங் காணப்பட்ட தேசிய மற்றும் மாநில வள நிறுவனங்களிடம் இருந்து நிதி பெறுதல்
- சமுதாயச் செயல்பாடுகளை செயல்படுத்த கிராம கல்விக் குழுவிடம் இருந்து நிதி பெறுதல்.

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் அந்தந்த இடங்களில் உள்ள துடிப்புடன் செயல்படுகின்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் பின்வரும் பகுதிகளில் தொடர்பு வைத்து கொள்ள கருதுகிறது.

- அதிகரித்து வரும் விழிப்புணர்வு.
- திறன் மேம்பாடு, பயனுள்ள வகையிலான ஆசிரியப் பயிற்சி திட்டங்கள், சமூகங்கள் மற்றும் வள நிறுவனங்களில் திட்டமிடல் மற்றும் செயல்படுத்துவதற்கான திறன் மேம்பாட்டை மேற்கொள்ளுதல்.
- அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான ஆய்வு, மதிப்பீடு, கண்காணித்தல்.
- புதுமையான கற்பித்தல் செயல்முறைகளை உருவாக்குதல்.
- பள்ளி செல்லாக் குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல்
- பாலியல் சம்பந்தமான கருத்துகளை வெளிப்படுத்துதல்.

குறிப்புகள்

- சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுடன் இணைந்து பணியாற்றுதல்.
- ஆலோசனை மற்றும் பொறுப்பு
- அடைவு சார்ந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளும்போது எவ்வித தலையீடும் இல்லாமல் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்த வேண்டும்.

## 7.3.4.1 பள்ளிகளை மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்

### சமூகத்தின் பங்கு

கிராமக் கல்விக்குழு மற்றும் சமூகத்தின் முக்கிய பங்கு கிராமத்தில்/வார்டில் உள்ள பள்ளிகளில் இதர கல்வி வசதிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் ஆகும். சமுதாய அடிப்படையிலான திட்டங்களை அமல்படுத்தும்போது கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை முக்கியமானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- அனைத்து குழந்தைகளும் தவறாமல் பள்ளிக்கு வருதல்.
- பெண் குழந்தைகள் மற்றும் பின்தங்கிய நலிவுற்ற குழுக்களில் உள்ள குழந்தைகளின் சேர்க்கை மற்றும் தக்கவைத்தல்.
- தரமான கல்வியை குழந்தைகள் பெறுதல்.
- குழந்தைகள் தங்கள் உரிமைகளை பெறுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் நிலை ஆசிரியர்கள் பணியமர்த்தப் படுதல்.
- கிராமக் கல்விக் குழு மற்றும் பெற்றோர்கள் உடன் கலந்தாலோசித்து பள்ளியின் வேலை நேரத்தை முடிவு செய்தல்.
- பள்ளி உள்கட்டமைப்பு சரியாக பயன்படுத்தப்படல்.
- எதற்காக மானியங்கள் வழங்கப்பட்டதோ அந்த தேவைகளுக்காக மானியங்கள் பயன்படுத்தப்படுதல்.
- மாற்றுப் பள்ளி மையங்கள் ஒழுங்காக நடத்தப்படுகின்றதா என கண்காணிக்கப் படுதல்.
- பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பொருள்கள் போதுமான அளவு இருத்தல் மற்றும் அப்பொருள்கள் வகுப்பறை கற்பித்தலின்போது பயன்படுத்தப்படுதல்.

## ஒன்றியக் கல்வி அலுவலரின் பங்கு



- உதவி தொடக்கக் கல்வி அலுவலரின் உதவியுடன் ஒன்றிய கல்வி அலுவலர் மேற்கொள்ள வேண்டியதாக எதிர் பார்க்கப்படுவது.
- அவரது அதிகார எல்லைக்கு உட்பட்ட பள்ளிகள், நிதியுதவி பெறாத தனியார் பள்ளிகள் உட்பட அனைத்து பள்ளிகளையும் வருடம் ஒருமுறை பார்வையிட வேண்டும்.
- பள்ளி கட்டிடங்களின் நிலை, உள்கட்டமைப்பு மற்றும் மாணவர்கள் அமரும் முறை ஆகியவற்றை பார்வையிட வேண்டும்.
- குறிப்பாக குடிநீர், கழிப்பறைகள், சமையலறை மற்றும் மதிய உணவு தயாரித்தல் போன்ற இடங்கள் சுத்தம் மற்றும் சுகாதாரமாக அமைந்துள்ளதா என்பதையும் கவனத்துடன் பராமரிக்கப்படுகிறதா எனவும் பார்வையிடல்.
- பள்ளிகளில் ஆசிரியர்கள், தலைமையாசிரியர்களால் பராமரிக்கப் பட வேண்டிய பதிவேடுகளை பார்வையிடல்.
- பின்னூட்டத்தின் அடிப்படையில் அடிப்படைத் தேவைகள் இருப்பின் மாவட்ட கல்வி அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.
- மக்கள்தொகை கணக்கெடுப்பு, கிராமங்களின் எண்ணிக்கை பஞ்சாயத்துகள் (ஊராட்சிகள்) குழுவாக உள்ள குடியிருப்புகள், ஆதி திராவிட, பழங்குடியின, பிற பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த பள்ளி மாணவ மாணவியர்கள், பள்ளியில் உள்ள, பள்ளி செல்லாக் குழந்தைகள், சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் மற்றும் பல தரவுகளை பெறுதல்.
- பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளுக்கு அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் தேவையான உதவிகளை அளிக்கின்றன.

மேற்கண்ட ஒன்றிய கல்வித் தகவல்கள் கண்காணித்தலின் ஒரு செயல்பாடாக சேகரிக்கப் பட்டவை. இதை அடிப்படையாக கொண்டே வருடாந்திர மாவட்ட ஆண்டு செயல் திட்டம் மற்றும் நிதி ஆகியவை தயாரிக்கப்படுகிறது.

குறிப்புகள்

**உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 5**

1. *பொதுத்துறை–தனியார் பங்களிப்பு என்றால் என்ன? அதன் அவசியம் என்ன?*

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

2. *அனைவருக்கும் கல்வித்திட்டம் மற்றும் அரசு சாரா நிறுவனங்களும் எவ்வெவ் வழிகளில் தங்களுடைய பங்கை நிலைநிறுத்துகின்றன?*

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. *அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் உள்ள நுண்ணிலை கற்பித்தலில் மாவட்ட கல்வி அலுவலரின் பங்கு என்ன?*

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

## 7.4 தொடக்கக் கல்வியில் எழும் நிர்வாகம் மற்றும் ஆளுமை சார்ந்த சிக்கல்கள்

### 7.4.1 ஆளுமை தொடர்பான சிக்கல்கள்

அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதில் பரவலாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது சில அடிப்படை ஆளுமை சிக்கல்கள் இடம்பெறுவதை காண இயலும். குழந்தைகளை கல்வி அமைப்பில் கொண்டு வரும் செயல்முறை வகுக்கப்பட்டு அதை உறுதி செய்ய வேண்டும். அச்செயல்முறை ஒவ்வொரு பள்ளியும் மாணவர் சேர்க்கை முறையினை பிரபலப்படுத்தவும், பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து சேர்க்கை பதிவு பட்டியலை ஆண்டு பதிவேடாக ஆவணப்படுத்தவும் வேண்டும். பகுதியளவு பணத்தை நிறுத்துதல் அல்லது அங்கீகாரத்தை கருத்தில் கொண்டு நிதி அளிக்கப்படுகிறது.

தெரிவுகள் அனுமதிக்கப்படுமானால், சம வாய்ப்புகள் குறித்த சிக்கல்களை சட்டபூர்வமாக விவாதிக்கலாம். எவ்வாறு தெரிவுகளை பிரசுரிப்பது? மாணவர்களை எவ்வாறு தெரிவு செய்வது? தெரிவு செய்ய முடியாத மாணவர்களின் நிலை என்ன? போன்ற கேள்விகளுக்கு விடை காணப்பட

வேண்டும். கல்வி அமைப்பை முழுவதுமாக எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு மாணவரும் ஒரு பள்ளியிலாவது சேர்வதும் சமத்துவமாக நடத்தப் பெறுவதும் உறுதிப்படுத்த வேண்டும். இதனை உறுதி செய்யாதபோது சம அளவில் கல்வி பெறும் வாய்ப்பற்று, அரசியலமைப்பின்படியான உறுதியினை நிலைநாட்டாமல் போக வாய்ப்பு உண்டு.

## சில முக்கியமான ஆளுகைப் பிரச்சினைகள்

- தொடக்க கல்விக்காக, மத்திய அரசானது உள்ளூர் நிறுவனங் களுக்கு நிதியினை தொடர்ந்து வழங்குமானால், அந்நிதியினை உள்ளூர் அமைப்புகள் முறையாக பயன்படுத்தவும், தொடர்ந்து பெறுவதற்குமான உறுதியான நடவடிக்கைகள் என்னென்ன?
- வெவ்வேறு உள்ளூர் நிறுவனங்களுக்கு மத்திய அரசானது நிதியினை எவ்வாறு ஒதுக்கீடு செய்கிறது?
- மத்திய அரசால் வழங்கப்படும் நிதியினை உள்ளூர் நிறுவனங்கள் எவ்வாறு சுதந்திரமாக பயன்படுத்துகின்றன?
- தொடக்கக் கல்விக்கென உள்ளூர் நிறுவனங்களில் ஒதுக்கப்படும் நிதிக்கும் அவர்களே பொறுப்பேற்கிறார்கள் எனில் என்னென்ன வகையில் ஆதாரங்களை அவர்கள் பெறுவார்கள்?
- உள்ளூர் நிறுவனங்களுக்கு வரி அளிக்கும் அதிகாரம் வழங்கினால், அத்திட்டத்திற்கான போதுமான வருவாயை ஈட்டித் தருமா?
- உள்ளூர் நிறுவனங்களின் நிதி சார்ந்த மேற்பார்வை மற்றும் தணிக்கையினை யார் மேலாண்மை செய்வர்?

## பள்ளி மேலாண்மை குழுவால் தயாரிக்கப்படும் பள்ளி வளர்ச்சித் திட்டம்

பள்ளி மேலாண்மை குழு ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைய குறைந்தது மூன்று மாதத்தற்கு முன் பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயார் செய்ய வேண்டும். பள்ளி வளர்ச்சித் திட்டம் மூன்று ஆண்டுகால திட்டமானது மூன்று உப ஆண்டு திட்டங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும். பள்ளி வளர்ச்சி திட்டத்தில் இருக்க வேண்டியவை:

ஒவ்வோர் ஆண்டிற்கான வகுப்புவாரியான மாணவர் சேர்க்கையை கணக்கிடல் (தலைமையாசிரியர், பாட ஆசிரியர்கள், பகுதிநேர ஆசிரியர்கள், 1 முதல் மற்றும் 6 முதல் 8 வகுப்புகளுக்கு தனியாக வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு கணக்கிடலையும் சேர்த்து) கூடுதலாக தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை.

குறிப்புகள்

## 7.4.2 ஆசிரியர் நியமனமும் மேலாண்மையும்

ஆசிரியர்களை நிர்வகித்தலில் பரவலாக்கத் தன்மையை குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டமானது வலியுறுத்துகிறது. இச்சட்டமானது தகுதி சான்றளித்தல், பணி அமர்த்துதல், தக்கவைத்தல் மற்றும் பதவி உயர்வு அளிப்பது போன்ற திறன் மற்றும் சட்ட அடிப்படையில் ஆசிரியர் நியமனத்தை வலியுறுத்துகிறது.

அனைவருக்கும் தொடக்கக் கல்வியினை வழங்குவதில் நிறுவன அளவில் பெரிய மாற்றம் வேண்டுமெனில் இந்த ஆளுகைப் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகிறது. இத்தகைய அமைப்பை நிறுவ வேண்டுமானால், அதில் ஏற்படும் சிக்கல்களை கவனமுடன் கையாள அதிக காலநேரம் தேவைப்படும்.

தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தால் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளிலிருந்து ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கு தேவையான நெறிமுறைகளை எடுத்து பின்பற்றிக் கொள்ளலாம். உள்ளூர் அமைப்புகள் தங்கள் தேவைக்கு ஏற்ப ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து பணியமர்த்தலாம். அவர்களின் தரத்தினை உறுதி செய்வதில் சமரசம் கூடாது.

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டமானது, மாநில அரசை ஓராசிரியரைக் கொண்டு செயல்படும் பள்ளிகள் இல்லாத நிலையினை உறுதி செய்ய வலியுறுத்துகிறது. மேலும் தொடக்க நிலையில் குறைந்தது 50% பெண் ஆசிரியர்கள் கட்டாயமாக பணியாற்ற வேண்டும் என்பதும் பின்பற்றப்படுகிறது.

ஆசிரியர்களுக்கு சம்பளம் அளிப்பதில் பல்வேறுபட்ட நிலைகள் காணப்படுகிறது. தற்போதுள்ள அரசு சாரா தனியார் பள்ளிகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் ஏற்படும் பிரச்சினைகளை பெரிதாக்குகின்றன. தற்போது காணப்படும் வேறுபட்ட ஆசிரியர் ஊதிய விகிதமானது மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

## 7.4.3 பள்ளி மேலாண்மை குழுவின் பணிகள்:

பள்ளி மேலாண்மை குழு பள்ளியை நிர்வகித்தலின் மூலம் கல்வியினை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கினை வகிக்கிறது. இம்மேலாண்மை குழுவானது பலதரப்பட்ட பங்குதாரர்களை உள்ளடக்கியும், அதன் மூலம் பரந்துபட்ட மற்றும் ஒருங்கிணைந்த முடிவினை எடுக்கவும் வழிவகை செய்கிறது.

நிதியுதவி பெறாத பள்ளியை தவிர்த்து, மற்ற பள்ளிகள் அனைத்தும் அங்கீகாரம் பெற்ற 6 மாதத்திற்குள் பள்ளி மேலாண்மை குழுவை உருவாக்கவும், அதனை இரண்டாண்டிற்கு ஒருமுறை மறுசீரமைப்பு செய்யவும் வேண்டும்.

- பள்ளி மேலாண்மை குழுவில் 75% பேர், அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களாகவோ அல்லது பாதுகாவலராகவோ இருத்தல் வேண்டும்.
- பள்ளி மேலாண்மை குழுவில் 25% பேர்கள் பின்வரும் நபர்களாக இருக்கலாம்.
- மூன்றில் ஒரு பங்கினர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்களாக உள்ளூர் அதிகாரிகளால் தெரிவு செய்யப் பட்டவர்களாக இருக்கலாம்.
- மூன்றில் ஒரு பங்கினர் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களாக இருக்கலாம்.
- மீதமுள்ள ஒரு பங்கினர் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களாக இருக்கலாம். இவர்களை பள்ளி ஆசிரியர்களே தெரிவு செய்ய வேண்டும்.
- மீதமுள்ள மூன்றில் ஒரு பகுதியினர் உள்ளூர் கல்வியாளராகவோ/ பள்ளியில் பயிலும் குழந்தைகளாகவோ இருக்கலாம். இவர்களை குழுவில் உள்ள பெற்றோர் தெரிவு செய்ய வேண்டும்.

## குழந்தைகளுக்கான பாதுகாப்பு உரிமைகள்

குழந்தை உரிமைகள் குறித்து ஏற்கெனவே அலகு 3ல் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இங்கு குழந்தைகளின் உரிமைகள் ஒரு மீள்பார்வைக்காக சேர்க்கப்பட்டுள்ளது.

## நிர்வாகம் ஆளுகை சார்ந்த சில சிக்கல்கள் பின்வருமாறு

- வாழ்வாதார உரிமை
- குடும்பம்
- உணர்ச்சியை வெளிப்படுத்தும் உரிமை
- உடல்நலம் மற்றும் வளர்ச்சி
- தகாத மற்றும் நேர்மையற்ற முறையில் பயன்படுத்துதலில் இருந்து பாதுகாப்பு பெறும் உரிமை
- கல்வி பெறுவதில் சமவாய்ப்பு
- பண்பாடு மற்றும் பாரம்பரியம்

- வீடு, கழிப்பறை, குடிநீர் வசதி, வெளிச்சமான வகுப்பறைகள் போன்ற குறைந்தபட்ச அடிப்படை உள்கட்டமைப்பு
- புத்தகங்கள், கரும்பலகை, அறிவியல் ஆய்வகக் கருவிகள், ஆசிரியர்கள்
- இலவச சீருடை, புத்தகங்கள், சத்துணவு போன்ற முறையார்ந்த உரிமைகள்
- தரமான கல்வி
- கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு

குழந்தைகளுக்கான கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின்படி (2009) குழந்தை பாதுகாப்பு உரிமைக்கு முதன்மையான பொறுப்பு வகுப்பதில் ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு முதல் நிலையில் உள்ளது.

## பள்ளி மேலாண்மைக் குழுவால் தயாரிக்கப்படும் பள்ளித் திட்டம்

பள்ளி மேலாண்மைக் குழு ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைய குறைந்தது மூன்று மாதத்திற்கு முன் பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயார் செய்ய வேண்டும். பள்ளி வளர்ச்சித் திட்டத்தின் மூன்று கால திட்டமானது மூன்று உப ஆண்டு திட்டங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும். பள்ளி வளர்ச்சித் திட்டத்தில் இருக் வேண்டியவை - ஒவ்வோர் ஆண்டிற்கான வகுப்பு வாரியான மாணவர் சேர்க்கையை கணக்கிடல். தலைமையா சிரியர்கள், பாட ஆசிரியர்கள், பகுதி நேர ஆசிரியர்கள் 1 முதல் 5 மற்றும் 6 முதல் 8 வகுப்புகளுக்கு தனியாக வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு கணக்கிடலையும் சேர்த்து கூடுதலாக தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை.

- மூன்று ஆண்டுகளுக்கான வருடாந்திர நிதி தேவை தொகுப்பின் ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சியளித்தல், குழந்தைகளின் முறையார்ந்த உரிமைகளை இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள், செய்முறை புத்தகங்கள் அளிப்பதற்கு தேவையான கூடுதல் நிதி தேவை குறித்து பள்ளி வளர்ச்சித் திட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்.

## பள்ளி மேலாண்மை குழுவின் பங்கும் தொடர்புடைய அரசுத் துறைகளும்

குழந்தைகளுக்கான கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் இருப்பதை கட்டாயப்படுத்துகிறது. மேலும் இது குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பை யூகித்து ஏற்படுத்தப்பட்டது.

ஆதி திராவிட, பழங்குடியின, கல்வியில் பின்தங்கிய பிரிவைச் சார்ந்த குழந்தைகளுக்கான துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் பள்ளி மேலாண்மை குழுவின் முனைப்பான பங்களிப்பினை தொடர்ந்து இருக்கச் செய்வதற்கான முறையார்ந்த/அதிகாரபூர்வமான உரிமையை உறுதி செய்வதை குழந்தைகளுக்கான கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் உள்ளடக்கிய கல்வி வலியுறுத்துகிறது.

பள்ளி மேலாண்மைக்குழு, இயலாக் குழந்தைகளுக்கான சிறப்பு தேவைகள் அளிப்பதில் அக்குழந்தைகளுக்கு சம வாய்ப்புகள் அளிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய இயலாக் குழந்தைகளுக்கான அரசுத் துறைகளுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகிறது. பள்ளி மேலாண்மைக் குழுவானது குழந்தைகள் விருப்பமற்ற ஆனால் செய்தேயாக வேண்டிய பொறுப்புகளில் இருந்தும் விடுபட்டு பள்ளியில் சேர்வதற்கான ஏழ்மை நிலையைக் குறைக்கும் நிகழ்வுகளை துரிதப்படுத்த அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைகளுடன் இணைந்து செயலாற்றுவது அவசியமாகிறது.

மேலும் இக்குழுவானது குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் இப்பணியில் முழுமையாக ஈடுபட்டு தங்கள் பணியை மேற்கொள்ளுகின்றனவா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

குழந்தைகளுக்கான பாதுகாப்பு உரிமைகள் என்பது உடல் ரீதியான துன்புறுத்தல், தவறான முறையில் நடந்து கொள்ளுதல், எரிச்சலூட்டும் வகையில் மீண்டும் மீண்டும் தொல்லை கொடுத்தலில் இருந்து பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கியது.

பள்ளி மேலாண்மைக் குழு குழந்தைகளை தகாத முறையில்/தவறான/நேர்மையற்ற முறையில் பயன்படுத்துவதில் இருந்து பாதுகாக்க மாநில பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சித்துறை மற்றும் தேசிய/மாநில குழந்தை உரிமை பாதுகாப்பு குழுமம் போன்றவற்றுடன் ஒத்துழைத்து செயல்படுவது அவசியமாகிறது.

**உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 6**

1. பள்ளியில் குழந்தை உரிமை பாதுகாப்புக்கு பொறுப்பானவர் யார்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

குறிப்புகள்

2. குழந்தைகளுக்கான இலவசக் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின்படி பள்ளி மேலாண்மை குழுவில் இடம்பெற வேண்டிய உறுப்பினர்களின் ஒருங்கமைவு என்ன?

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

3. பள்ளி மேலாண்மை குழுவின் பொறுப்புகள் யாவை?

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

4. குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டிய பல்வேறு அரசாங்கத் துறைகள் யாவை?

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

## 7.5 பள்ளி மேலாண்மையும், குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ம்

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டத்தின் கீழ் பள்ளிக்கும் சில பொறுப்புகள் உள்ளன. குழந்தைகளுக்கான கட்டாய கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன் நிறுவப்பட்ட பள்ளி, சொந்த அல்லது மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பின் கீழ் இயங்கும் பள்ளிகள், இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் படிவம் எண் 1இல் தங்களின் சுயசான்றினை தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலருக்கு தங்களின் புகாரினை குறிப்பிட்ட விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அளித்தல் வேண்டும்.

(a) சமூக பதிவுச்சட்டம் 1860இன் கீழ் சமூகத்தால் பதிவு செய்யப்பட்டு நடத்தப்படும் பள்ளி அல்லது சட்டத்திற்குட்பட்டு பொது நிறுவனத்தினால் நடத்தப்படும் பள்ளி.

(b) பள்ளியானது எந்த ஒரு தனி நபர், குழு அல்லது தனி நபர்களின் சங்கங்கள் அல்லது வேறு நபர்களின் இலாபத்திற்காகவோ இயங்கவில்லை.

(c) அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்ந்த மதிப்புகளை பள்ளி உறுதி செய்கிறது.

குறிப்புகள்

(d) கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு தேவைக்காக மட்டுமே பள்ளி கட்டிடங்கள் அல்லது மைதானங்கள் மற்றும் பிற கட்டமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

(e) மாநில அரசு/உள்ளாட்சி அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் இப்பள்ளி ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

(f) விதிமுறைகளுக்கு ஏற்ப பள்ளிக்கு தேவையான உள்கட்டமைப்பு உள்ளது.

(g) மாவட்டக் கல்வி அலுவலரால் அவ்வப்போது கேட்கப்படும் தகவல்கள் அடங்கிய அறிக்கையை தயாரித்து விதிகளுக்கு கீழ்படிந்து மாநில அரசு/உள்ளாடசி அமைப்புக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இது அங்கீகாரம் பெறத் தேவையானவற்றை நிறைவு செய்யவும் அல்லது பள்ளியில் உள்ள குறைபாடுகளை நீக்கவும் துணை புரிந்து பள்ளியை தொடர்ந்து நடத்த வழிவகை செய்யும்.

மாதிரி வரைவு விதியின் பாகம் நான்காம் பிரிவின்படி அரசு, நிதி உதவி, சுயநிதி தனியார் பள்ளிகள், நலிவடைந்த பிரிவினர் மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கு பள்ளி சேர்க்கைக்கு அங்கீகாரம் பெறுவதன் தேவை அவசியமாகிறது. இதை சரி செய்ய தவறும்பட்சத்தில் எச்சரிக்கை தருதல் அல்லது அங்கீகாரத்தை திரும்ப பெறும் நிலை ஏற்படுகிறது. மேலும் அவ்வாறான குழந்தைகள் வகுப்பறையில் மற்ற வகுப்பு குழந்தைகளிடமிருந்து பிரிக்கப்படவோ அவர்களுக்கான வகுப்பு நேர, இட, வேறுபாடுகளே காண்பிக்கக்கூடாது. பிற குழந்தைகளைப் போலவே இவர்களும் புத்தகங்கள், சீருடைகள், நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகள் இதர கல்வி செயல்பாடுகள் மற்றும் விளையாட்டு போன்றவற்றை பெறுவதற்கான உரிமையுடையவர் களாகின்றனர்.

NCTE, NCERT மற்றும் SCERT-யினால் பரிந்துரைக்கப்பட்ட தகுதி வாய்ந்த ஆசிரியர்களை பள்ளி நியமனம் செய்கிறது. தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்வதில் தோல்வி ஏற்படின் பள்ளியின் அங்கீகாரம் இரத்து செய்யப்படும். ஒரு மாநிலத்தில் போதுமான அளவு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இல்லாத நிலையில் அல்லது குறைந்தபட்ச கற்றல் தகுதி பெற்ற ஆசிரியர்கள், தேவைக்கு ஏற்ப இல்லாத நிலையில் மாநில அரசானது குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்ட ஒரு வருட காலத்திற்குள் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச ஆசிரியர் கல்வி தகுதிக்கு தளர்வு அளிக்கும்படி இந்திய அரசாங்கத்தை கோர வேண்டும். அதற்கு இந்திய அரசாங்கம் குறைந்தபட்ச கல்வித்தகுதிக்கு தளர்வு அளிக்கும் வகையில் வெளியிட்ட அறிவிப்பில், தளர்வின் தன்மை மற்றும் மூன்று வருடங்களுக்கு மிகாமல் கால அவகாசம் அளித்து

குறிப்புகள்

குழந்தைகளுக்கான கட்டாய கல்வி உரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்ட ஐந்து வருடங்களுக்குள் தளர்வு விதிகளுக்கு உட்பட்டு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியை பெறுதல் வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட ஆறுமாத காலத்திற்குள் ஆசிரியராக நியமிக்கப்பட்ட ஒரு நபர் குறைந்தபட்சம் மேல்நிலை பள்ளிக்கல்வி அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டபோது குறைந்தபட்ச கல்வித் தகுதியை பெற்றிராத ஆசிரியருக்கு அப்பள்ளி மேலாண்மை RTE அமுல்படுத்திய ஐந்து ஆண்டு காலத்திற்குள் குறைந்தபட்ச கற்றல் தகுதியை பெற்று தம்மை மேம்படுத்திக் கொள்ள வழிநடத்த வேண்டும்.

### உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 7

*1. குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் இயற்றப்பட்ட பிறகு நிதியுதவி பெறும் பள்ளிகள் அங்கீகாரம் பெறுவதற்கு நிர்ணயிக்கப் பட்ட நிபந்தனைகள் யாவை?*

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

*2. வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிதியுதவி பெறாத பள்ளிகளில் ஏன் சேர்க்கை அளிக்கப்பட வேண்டும்?*

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

*3. ஒரு பள்ளியானது குழந்தையின் சேர்க்கையை மறுக்க இயலுமா?*

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

*4. பள்ளிகளில் ஏன் பயிற்சி பெற்ற / தகுதி வாய்ந்த ஆசிரியர்களை மட்டுமே நியமிக்க வேண்டும்?*

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................



குறிப்புகள்

## 7.6 சிறந்த மேலாண்மை மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைப்பு

ஐக்கிய நாடுகளுக்கான மேம்பாட்டுத் திட்டம் 'திறமை' என்பதை ஒரு தனிநபர், நிறுவனங்கள் மற்றும் சமூகமானது பணிகளை மேற்கொள்ளல், பிரச்சினைகளை தீர்த்தல், நோக்கங்களை வடிவமைத்து நிறைவேற்றுவதில் நிலைத்த தன்மை பெறுதல் போன்றவற்றை செய்வதற்குரிய திறன்/ ஆற்றலை பெற்றிருத்தல் என வரையறை செய்கிறது. 'திறன் வளர்ச்சி' அல்லது 'திறன் மேம்பாடு' என்ற பதங்கள் மனிதன் அல்லது நிறுவனத்தின் திறமையை வெளிப்படுத்தும் பணியினை விவரிக்கிறது.



INTRAC பயிற்சி தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்

சமூகப் பணியாளர்களுக்கு நீர், வேளாண்மை, ஊட்டச்சத்து மற்றும் உடல்நலம் சார்ந்த பகுதிகளில் வழங்கப்படும் பயிற்சி குறிப்பாக வளரும் நாடுகளுடன் தொடர்புடைய ஓர் எடுத்துக்காட்டாகும்.

திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்குவதில் உள்ளூர் சமூக குழுக்கள் போன்ற தனிப்பட்ட நிறுவனங்கள் இன்றியமையாதவையாக உள்ளன. அதேசமயம் இவை இலக்கை அடைவதற்கான செயல்பாட்டு நோக்கில் திறனின்றி உள்ளன. நிறுவன திறன் மேம்பாடு என்பது நிறுவன மேலாண்மையை அமைத்தல், தகவல் தொழில்நுட்பத்தை எளிதில் பெறுதல் மற்றும் ஒருங்கிணைந்து செயலாற்றும் நிறுவனங்களின் தொகுதி போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

## 7.6.1 அனைவருக்கும் கல்வி மேலாண்மைக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பம்

குறிப்புகள்

அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை எட்டுவதில் புதியன படைத்தல், சேமித்தல், நிர்வகித்தல், வழங்குதல் மற்றும் தகவல்களை பயன்படுத்துதல் போன்றவற்றில் தகவல் தொழில்நுட்பம் பயன்படுகிறது. பள்ளி வலையமைப்பில் பயன்படுத்துவோரின் தகவல் தொடர்பு திறன், ஒருங்கிணைப்பு மற்றும் இணையவழி தகவல் பரிமாற்றம் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. இதில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் என்பது கணினிகள், தகவல்களை பகிர்ந்துகொள்ளும் வகையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ள கணிப்பொறிகளின் தொகுதி, இணையம், தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி மற்றும் ஒலி, ஒளிக்கருவிகள், கணினி வலையமைப்பில் அதிகமாக பயன்படும் பிற கருவிகள் அல்லது இணையத்தை எளிதில் அடைய உதவும் கருவிகள் (கையடக்க PDA (தனிப்பட்ட தகவல் மின்னணுக்கருவி) மற்றும் கைப்பேசிகள்).

தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு வலையமைப்பு களை எளிதில் சென்று பயன்படுத்த வசதி வாய்ப்பு உள்ளவர்கள் குறைவான வாய்ப்பு உள்ளவர்களை விட முழுமையாக பயன்படுத்துகின்றனர். இதில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் கருவிகள் போதுமான அளவு உள்ளது என ஊகித்தல் வேண்டும். இவ்வாறு பல்வேறு வகையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அடையும் நிகழ்வை 'மின்னணு தகவல் பகிர்வு' என குறிக்கப்படுகிறது.

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் பயன்படும் மூன்று இயக்கிகள்: மொழி (இணையத்தில் பரவலாக பயன்படுத்தப்படும் மொழிகளை பயன்படுத்தும் திறமை) எழுத்தறிவு (குறிப்பாக வாசித்தல்) மற்றும் கற்றல் (கற்றல் அடைவு நிலை) அறிவார்ந்த வளமான சமூகத்தையும், பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதில் கல்வி ஒரு முக்கிய அங்கமாக திகழ்கிறது. கல்வி என்பது சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் தனிநபரை திறம் மிக்க பங்கேற்பாளர்களாக மாற்றுவது மட்டுமல்ல; மாறாக தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டை விரிவுப்படுத்தும் முதன்மை இயக்கியாகவும் உள்ளது. அறிவு/தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குதல்; தகவல் பரிமாற்றத்தை அதிகரிப்பதன் மூலம் புதிய அறிவை உருவாக்குதலே தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியாகும்.

அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் பரவலாக்கப்பட்ட கல்வி அமைப்பை உள்ளடக்கிய நிலைமாற்றக் கருத்தில் கல்வி அமைப்பு சார்ந்த பிரச்சினைகளையும், குறைபாடுகளையும் குறிப்பிட வேண்டியது

குறிப்புகள்

அவசியமாகிறது. குறைவான வளமுடைய சில குறிப்பிட்ட பகுதிகளில் (எ.டு. பாடப்புத்தகங்கள் (அ) ஆசிரியர்கள், பிற துணைபுரியும் கருவிகள் இன்மை) செயல் முனைப்பை மட்டுப்படுத்தவும் நிர்வாக மற்றும் கற்றல் திறனை மேம்படுத்தவும், சமத்துவ பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துதல் (அ) திறம் குறைந்த ஆசிரியர்களுக்கு புதிய கல்விச் சவால்களை எதிர்கொள்ள உதவுதல் போன்றவற்றில் தகவல் தொழில்நுட்பம் பயன்படுகிறது.

## 7.6.2 பள்ளி வலையமைப்பு என்றால் என்ன?

பள்ளி வலையமைப்பானது தொடக்கக் கல்விக்கான மேலாண்மை தகவல் அமைப்பை உருவாக்கி இணையம், மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகள், நிர்வாக அமைப்புகள், பெற்றோர்கள், பொதுமக்களிடையே தகவல்களையும், வளங்களையும் பகிர்தல் போன்ற தொடர்புகளை உருவாக்குவதன் மூலம் பள்ளிகளின் இணைப்பை ஊக்குவிக்கிறது.

பள்ளி வலையமைப்பானது சிறந்த செயல்திற மிக்க கல்வி நிறுவனங்களின் மேலாண்மை வலையமைப்பை ஆதரிக்கிறது. கல்வி அதிகாரிகள், பள்ளிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமுதாயம் மற்றும் பரந்த கல்வி வளங்கள் போன்றவற்றின் ஒருங்கிணைப்பே 'பள்ளி வலையமைப்பு' ஆகும்.

பள்ளி வலையமைப்பு என்ற பதம் பன்னாட்டால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொதுப் பெயராகும். இது தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பள்ளி கல்வி நிர்வாக அமைப்பின் மின்னணு நிர்வகித்தலை குறிக்கிறது.

பள்ளி வலையமைப்பு பல்வேறு நிலைகளில் காணப்படுகிறது. இது அரசுத்துறை, தன்னார்வ தொண்டு நிறுவனம், தனியார் நிறுவனம் அல்லது பள்ளியில் காணப்படும் ஒரு திட்டமாகும்.

உலகின் எந்தவொரு மூலையில் உள்ள பயனாளிகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டம் சார்ந்த தகவல்களை பெற வழிவகை செய்கிறது. இது பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை வளர்த்து ஆதரிக்கும் தேசிய/மாநில திட்டமாக உணரப்படுகிறது.

பள்ளி வலையமைப்பானது பள்ளி நிர்வாக தகவல் அமைப்பின் மூலம் சிறந்த கல்வி சேவையை வழங்கவும் வெவ்வேறு கல்வி நிறுவனங்களை இணைப்பதும் ஆகும்.

## 7.6.3 பள்ளி வலையமைப்பின் பணிகள்

பள்ளி வலையமைப்பு சார்ந்த பணிகள், செயல்பாடுகள், சேவைகள் பின்வருமாறு:

குறிப்புகள்

## தொழில்நுட்ப சேவைகள்

- இணைப்பு சேவைகள் என்பது பள்ளி, அரசு நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியவற்றை பிற அமைப்புகளோடு இணையவழி சேவையில் இணைப்பதாகும்.
- பள்ளிகளுக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல் (அரசு நிதி, கொடையாளர் நிதி, கார்பரேட் நிறுவன நிதி, அன்பளிப்பு மூலமாக வாங்குதல்)
- பள்ளிகளில் சிறந்த கல்வியினை வழங்குவதை மேற்பார்வை செய்யத் தேவையான மென்பொருளை உருவாக்கி வழங்குதல்.

## பாடப்பொருள் சார்ந்த சேவைகள்

- கல்விசார் நேரடி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் கற்போருக்கு தேவையான இணையவழி பாடப்பொருள்களை கொண்ட இணையதளங்கள்.
- உள்ளூரிலேயே உருவாக்கப்பட்ட இணையவழி பாடப்பொருள்கள்.
- தொழில்சார் திறனடையோர் (பாடப்பொருள் நிபுணர்கள்) அல்லது கற்பிப்பவரை (கற்பித்தலில் ஈடுபடுபவர்) கொண்டு இணையவழி பாடப்பொருள் தயாரித்தல்.

## ஒருங்கிணைந்த செயல்திட்டம் (Collaborative Project)

- இணையவழி செயல்திட்டத்தின் மூலமாக பல்வேறு வள மையங்களை ஒருங்கிணைக்கவும் முனைப்புடன் செயல்படவும் வழிகாட்டுதல்.
- தேசிய அளவிலான ஒருங்கிணைந்த செயல் திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல், இது முதன்மை செயல் திட்டமாகவோ அல்லது உள்ளூர் தேவைக்கான பன்னாட்டு செயல் திட்டமாகவோ அமையலாம்.

## தொழில்திறன் மேம்பாடு

- ஆசிரியர்களுக்கு தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சியினை பணியிடைப் பயிற்சியாக அளித்தல் மற்றும் அதனை தங்களது கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தச் செய்திடல் (கலைத்திட்ட ஒருங்கிணைப்புடன்)



குறிப்புகள்

**பரிசோதித்தல், புதியன படைத்தல் மற்றும் ஆலோசித்தல் முறை:**

- சுற்றுச்சூழல் மற்றும் சூழலின் வரம்புக்குட்பட்ட முன்னோட்ட செயல் திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- சிறந்த நடைமுறை வழிகாட்டுதலை மேம்படுத்துதல் மற்றும் பரவலாக்குதல்.
- முன்னோட்ட செயல் திட்டங்கள் மற்றும் சிறந்த அனுபவ அறிவு போன்றவற்றால் பெற்ற வெவ்வேறு நிலை அனுபவங்களின் வாயிலாக கொள்கையில் மாற்றம் கொண்டு வருதல்.
- கல்வி தொழில்நுட்ப பயன்பாட்டில் புதியன படைத்தலை ஊக்குவித்தல்.

**பள்ளி மற்றும் வளங்களை நிர்வகித்தல்**

- முடிவெடுத்தலுக்கான தகவல் வழங்குவதில் உறுதுணை செய்தல்.
- கொள்கைகளை அமைப்பதற்கான தகவல் வழங்குதல்.

### 7.6.4 பள்ளி வலையமைப்பு என்பது கல்விசார் நிர்வாக தகவல் அமைப்பு

தகவல் தொடர்பு தொழில்நுட்பமானது பள்ளிகள் சார்ந்த விவரங்களை விரைவாகவும் திறம்படி சேகரிக்கவும், நிர்வாக செயல்முறைகளின் சுமைகளை குறைப்பதற்கும் துணை செய்கிறது. நிர்வகித்தலில், புதிய உத்தியை கையாளுவதன் மூலம் நிர்வாக ரீதியாக பளுவினைக் குறைப்பதில் நேரடியாகவும் அல்லது தகவல்களை எளிதில் பெறவும்/அணுகவும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப கருவிகள் மற்றும் அமைப்புகள் உதவுகின்றன.

பள்ளிச்சூழலில் பள்ளி வலையமைப்பு செயல்படுத்தப்பட்டால் பள்ளி சூழலானது முழுமையாக மாறிவிடும். அடிப்படை பயன்பாட்டு திறனான மின்னஞ்சல் அனுப்பும் திறன் முதல் இடத்தை கண்டறிதல், மதிப்பிடுதல், பகுத்தராய்தல் மற்றும் தொகுத்தல் போன்ற உயர்நிலை திறனை பல்வேறு சூழ்நிலையிலிருந்து பெறுதல் போன்ற திறன் வகைகளை தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திறன் உள்ளடக்கி உள்ளது. இந்த உயர்நிலை திறனானது அனைத்து வகை நிர்வகித்தலிலும் பயன்படுத்தப்படுகிறது.

## 7.7 நிதி அமைப்பு

மைய அரசானது உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளில் இருந்து பெறப்பட்ட வெளிநாட்டு முன்னேற்ற நிதிகள் மூலம் அனைவருக்கும் கல்வி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. செயல் திட்டம், மேற்கொள்ளும் போது

குறிப்புகள்

வெளிநாட்டு நிதி அளிக்கும் நிறுவனங்களின் ஒப்புதலோடு மட்டுமே சில மாற்றங்களை மேற்கொள்ளலாம். மேலும் நிதி ஒதுக்கீட்டில் வெளியிலிருந்து பெறப்படும் செயல் திட்டங்கள் அனைத்தும் சட்டப்பூர்வமான விதிமுறைகளை பின்பற்றியே நிறைவேற்றப்படுகின்றன. இது குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டு, செலவின அறிக்கையானது பள்ளி, குடியிருப்பு, கிராமம், ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அடுத்த கட்ட நிதியானது உலக கொடையாளிகள் மூலம் விடுவிக்கப்படும்.

## நிதி ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடு

அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கான நிதியானது மாநில அரசுகளுக்கிடையே நிதி பகிர்மான முறையை அடிப்படையாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது. 9ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் மைய, மாநில அரசுகள் 85:15 என்ற விகிதத்திலும், 10ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் 75:25 என்ற விகிதத்திலும் அதன் பிறகு 50:50 என்ற விகிதத்திலும் நிதி பங்கீடு செய்யப்பட்டு வருகிறது. அனைவரும் தொடக்கக் கல்வி வழங்குவதற்கான நிதியினை மாநில அரசுகள் அதிகளவில் பொறுப்பேற்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பகிர்மானம் சார்ந்த ஒப்பந்தம் மாநில அரசுகளிடம் இருந்து எழுத்துப் பூர்வமாக பெறப்படுகிறது.

## மாநில திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்பு (State Implementation Society)

மாநில அரசானது அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியினை, மாநில திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்பினை நிறுவி அதன் கணக்கில் இருப்பு வைக்கப்படுகிறது. மைய அரசானது மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்களுக்கு மட்டும் நிதி வழங்குகிறது. மைய மற்றும் மாநில அரசுகளின் முன் தவணைகள் மாநிலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்பிற்கு மாற்றிய பிறகே, மாநில அரசானது தவணையை விடுவிக்கிறது. (முதல் தவணையைத் தவிர) அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் பணி நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் ஊதியமானது, 9ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் 85;15 என்ற விகிதத்திலும் 10ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் 75:25 என்ற விகிதத்திலும் அதன் பிறகு 50:50 என்ற விகிதத்திலும் மைய, மாநில அரசுகள் பகிர்ந்துகொள்கின்றன.

தொடக்க கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து திட்டமானது (மதிய உணவு திட்டம்) அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் இடம்பெறாது. உணவு

குறிப்புகள்

தானியங்கள் மற்றும் அவற்றை கொண்டு சேர்க்கும் செலவினை மைய அரசும், அவற்றை சமைத்து உணவாக அளிப்பதற்கான தொகையினை மாநில அரசும் ஏற்கிறது. தொடக்க கல்வி சார்ந்த மைய அரசின் அனைத்து திட்டங்களும் (தேசிய பால பவன் மற்றும் தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் தவிர்த்து) 9ஆவது ஐந்தாண்டு திட்டத்திற்கு பிறகு அனைவருக்கும் கல்வி திட்டத்தோடு இணைக்கப்படவில்லை.

மாவட்டக் கல்வி திட்டமானது பிரதம மந்திரி கிராம வளர்ச்சி திட்டம், ஜவஹர் சமிதி யோஜனா, பிரதம மந்திரி ரோஜ்கர் யோஜனா, சுனிஷ்ஜித் ரோஜ்கர் யோஜனா, சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினரின் வளர்ச்சி நிதி, மாநில திட்டம், வெளிநாட்டு நிதி மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் அளிக்கப்படும் நிதி போன்ற வெவ்வேறு திட்டங்கள் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதிகள் மற்றும் வளங்களைக் கொண்டது என தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு பெறப்படும் நிதியானது பள்ளிகளை தரம் உயர்த்தவும், பராமரிக்கவும், கட்டிடங்களை பராமரிக்கவும், கற்றல்–கற்பித்தல் உபகரணங்களை வாங்கவும், கிராமக் கல்வி குழு, பள்ளி மேலாண்மைக் குழு, கிராம பஞ்சாயத்து, தன்னார்வத் தொண்டு நிறுவனம் போன்ற அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டு பயற்சி அளித்தல் வாயிலாக திட்டங்கள் பரவலாக்கப்படுகின்றன. கொடுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு நிதிகளை சிறந்த முறையில் பயன்படுத்த கிராம/பள்ளி அமைப்புகளோடு இணைந்து கலந்தாலோசித்து முடிவெடுத்தல் வேண்டும்.

### உங்களின் முன்னேற்றத்தை சரிபார்க்க - 8

1. அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டத்தில் மாநில மற்றும் மத்திய அரசுகளின் நிதி பங்கீட்டு அமைப்பு என்ன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வெவ்வேறு திட்டங்களிலிருந்து நிதி குவிவது எப்படி? எடுத்துக்காட்டு தருக.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

**செயல் - 1**

- உங்கள் பள்ளியில் உள்ள சிறுபான்மை இனத்தை சார்ந்த பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரிக்கவும் அவர்களை பள்ளியில் தக்கவைக்கவும் ஒரு செயல் திட்டத்தை தயாரிக்க.

  ..........................................................................................................

  ..........................................................................................................

  ..........................................................................................................

**செயல் - 2**

- செயல் ஒன்றிற்கான செலவுத் திட்ட மதிப்பீட்டு தொகையை தயாரிக்கவும்.

  ..........................................................................................................

  ..........................................................................................................

  ..........................................................................................................

- நீங்கள் தயாரித்த செயல்திட்டம் மற்றும் செலவு திட்ட மதிப்பீட்டு தொகையை யாரிடம் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவீர்கள் என்பதை விளக்குக.

  ..........................................................................................................

  ..........................................................................................................

  ..........................................................................................................

## 7.8 தொகுப்புரை

இந்த அலகில் நீங்கள் கற்றவை குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டமானது அனைவருக்கும் தொடக்கக் கல்வி திட்டத்தை நடைமுறைப்படுத்தி பரவலாக்கியது. அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்துவது ஏன் பரவலாக்கப்பட்டது? பள்ளி, கல்வி, இருப்பிடம், கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நுண்திட்டமிடல் என்றால் என்ன? இந்த நிலைகளில் கல்வி மேம்பாட்டு திட்டத்தை தயாரிக்கும் பொறுப்புடையவர் யார்? கல்வி வளர்ச்சித் திட்டத்தில் உட்கூறுகளாக அமைவன யாவை? கல்வி வளர்ச்சி திட்ட தரம் பற்றிய மதிப்பீடு என்றால் என்ன? அதற்கு எவ்வாறு அங்கீகாரம் பெறுவாய்? நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தை மேலாண்மை செய்பவர் யார்?

பரவலாக்கப்பட்ட தொடக்கக் கல்வி மேலாண்மையில் நிர்வகிப்பதில் உள்ள பிரச்சினைகள் யாவை?

குறிப்புகள்

*நிதி உதவி பெறும்/நிதி உதவி பெறாத பள்ளிக்கு அங்கீகாரம் தர அதிகாரம் படைத்தவர் யார்?*

*குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்ட பரிந்துரைகளின்படி ஒரு பள்ளிக்கு அங்கீகாரம் பெற பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவை?*

*ஒரு பள்ளியானது குழந்தைக்கு சேர்க்கை அளிக்க மறுக்க இயலாது என்று நீங்கள் கற்றிருப்பீர்கள். குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கு பொறுப்பானவர் யார்?*

*இணைய வலையமைப்பினை பயன்படுத்தி பள்ளி, ஒன்றியம், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் சிறந்த திறன் மேம்பாடு மற்றும் தொடக்கக் கல்வி மேலாண்மையை சிறப்பாக பெறுவதில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பங்கினை நீவிர் கற்றிருப்பீர்கள். மேலும் தொடக்கக் கல்வியில் நிதி அமைப்பு விதத்தையும் நீவிர் கற்றிருப்பீர்கள்.*

## 7.9 பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்–மேற்கோள் நூல்கள்

Educational Planning and Management in Small States; Concepts and Experiences - By Godfrey Baldacchino, Charles Farrugia, Common Wealth Secretarias.

A Comprehensive Stury of Education - By S.Samuel Ravi

http: //ssa.ap.nic.in/

http: //en.wikipedia.org/wiki/Sarva-Shiksha-Abhiyan

http: //www.education forallinindia.com/page112 html

http: //scertdelhi.info/

## 7.10 அலகு–இறுதி பயிற்சி செயல்பாடுகள்

1. *நுண்திட்டமிடல் என்றால் என்ன? உங்கள் சொந்த பகுதியில் சமூக உரிமை பற்றிய நுண்திட்டமிடல் குறித்து விவாதிக்க.*
2. *உங்கள் மாவட்டத்தில் உள்ள மொத்த* BRC *மற்றும்* CRC-*களை பட்டியலிட்டு தொடக்கக் கல்வி அளவில்* BRC *மற்றும்* CRC-*க்களின் பங்கு மற்றும் பணிகளை வரையறு.*